விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 தை 14 திங்கட்கிழமை (28.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 040

## வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம்; உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

### வடக்கின் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் உறுதி

(யாழ்ப்பாணம்)

வலம்புரிப் பத்திரிகையில் நேற்று முன்தினம் 26 ஆம் திகதி வெளிவந்த வடக்கின் ஆளுநர் அவர்களே! யாரிடம் முறையிடுவது!

என்ற ஆசிரியர் தலையங்கத்துக்கு ஏற்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

அநேகமான அரச நிறுவனங்களில் அரச அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் தமது கடமை நேரத்தில் இருக்காமையால், பொதுமக்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும்,

அடிக்கடி உயர்மட்டக் கூட்டங்கள் நடத்தப்படுவதனால் அதிகாரிகள் கூட்டத்துக்குச் சென்று விட்டதான பதிலே கிடைக்கின்றது எனவும் குறித்த ஆசிரியர் தலையங்கத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

இதுதொடர்பில் வலம்புரியின் பிரதம ஆசிரியருக்கு நேற்றைய தினம் தகவல் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர், 02



## மின்சார சபைக்கு தொடர்ந்தும் பாரிய நஷ்டம்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை 116 பில்லியன் ரூபாய் கடனை அரச வங்கிகள் உட்பட பல அமைப்புக்களுக்கு செலுத்த வேண்டியுள்ளதாக சபைத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

2018 ஆம் ஆண்டு இலங்கை மின்சார சபைக்கு 26 பில்லியன் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எப்படியிருப்பினும், 2017 ஆம் ஆண்டு மின்சார சபை 49 பில்லியன் ரூபாய் நட்டத்தை 23

# புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவதா என பாராளுமன்றே தீர்மானிக்க வேண்டும்

## என்னால் தனித்து ஒன்றும் செய்யமுடியாது என்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு) என்னால் தனித்து புதிய அரசியலமைப்புச் சட்டம் ஒன்றை கொண்டு வர முடியாது. புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து யோசனைகளும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தால் நிறைவேற்றுவதா? இல்லையா? என்ற முடிவு பாராளுமன்றத்திடம் உள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (02-ம் பக்.)



## அனைத்து உரிமைகளும் தமிழர்களுக்கு வேண்டும்

### வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன்

(கிளிநொச்சி)

பிரிக்கமுடியாத நாட்டில் அனைத்து உரிமைகளையும் தமிழர்கள் அனுபவிக்க வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி - அறிவியல் நகரில் புதிதாக அமைக்கப்பட்ட புகையிரத நிலையம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மக்கள் பயன்பாட்டிற்காக கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள் 23

## ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மகிந்த என்னை அனுமதித்துவிட்டார்

### கோத்தபாய ராஜபக்ஷ உற்சாகம்



(கொழும்பு)

அடுத்து இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தன்னை போட்டியிடுமாறும் அதற்கான தயார்படுத்தல்களை செய்யுமாறும் தனது சகோதரரான மகிந்த ராஜபக்ஷ தன்னிடம் கூறியிருப்பதாக முன்னாள் பாதுகாப்பு அமைச் 23

## ஐ.தே.கவின் கனவு விரைவில் நிறைவேறும்

### - மங்கள சமரவீர

(கொழும்பு)

25 வருடங்களின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரொருவரை ஜனாதிபதியாக்கும் கனவு வெகுதூரத்தில் இல்லை என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். மாத்தறையில் நேற்று இடம்பெற்ற மக்கள் 24

## யாழிலிருந்து மட்டு. சென்றவர்கள் விபத்தில் சிக்கி 6 பேர் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து பூப்புனித நீராட்டு விழாவிற்கு காரில் சென்ற குடும்பத்தினர் 6 பேர் விபத்துக்குள்ளாகி மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இச்சம்பவம் குறித்து தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் பருத்தித்

## யாழ்ப்பாணம் வந்தடைந்தது உத்தரதேவி

(யாழ்ப்பாணம்)

கொழும்பு - காங்கேசன்துறை சேவையில் ஈடுபடும் அதிவேக சொகுசு தொடருந்தான "உத்தரதேவி" பயணிகளுடன் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

கொழும்பிலிருந்து நேற்று காலையில் தனது பயணத்தை ஆரம்பித்த உத்தரதேவி பிற்பகல் 2.40 மணியளவில் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. இந்த பயணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புதிய அரசியலமைப்பை...

களுத்துறையில் நேற்றுக் காலை நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்ளும் நிலைமைக்கு கொண்டு வர தற்போதைய அரசாங்கத்தினால் முடிந்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குறைந்தது ஒற்றையாட்சியை ஏற்றுக் கொள்ளும் நிலைமைக்கு அரசியல் கட்சியை கொண்டு வர முடிந்துள்ளது.

பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த நாட்டை பிரிக்கும் தேவை எவருக்கும் இல்லை என்றும் கூறியுள்ளார். (மு-1)

# வலம்புரியின்...

வலம்புரியின் ஆசிரியர் தலையங்கக் கருத்துக்கள் பயனுள்ளவை என்றும் அது தொடர்பில் ஆளுநர் அலுவலகம் பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்து பொதுமக்களுக்கான சேவை ஒழுங்காகக் கிடைக்க நடவடிக்கை எடுக்கும் எனவும் உறுதியளித்ததுடன்,

இவ்வாறான, பொதுமக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு அனைவரது ஒத்துழைப்பையும் வழங்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (மு)

# பால்மா இறக்குமதி நிறுத்தப்படும்

பால்மா வகைகளின் விலையை அதிகரிக்காவிடின் அடுத்த மாதம் தொடக்கம் அதன் இறக்குமதியை இடைநிறுத்தப் போவதாக இறக்குமதி நிறுவனங்கள் அரசுக்குத் தெரிவித்துள்ளன.

டொலரின் பெறுமதி அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களைக் குறிப்பிட்டு இறக்குமதியாகும பால்மாவின் விலையை அதிகரிக்குமாறு இறக்குமதி மொத்த வியாபாரிகளால் அரசிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

எனினும் அந்த நிறுவனங்களின் கோரிககையை நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை நிராகரித்தது.

இந்த நிலையிலேயே தற்போது நாட்டில் உள்ள பால்மா கையிருப்பை விற்பனை செயவதும் என்றும் இறக்குமதியை இடை நிறுத்துவதாகவும் பால்மா வகைகளின இறக்குமதி மொத்த வியாபாரிகள் வர்த்தக வாணிப அமைசசுக்கு அறிவித்துள்ளனர். (மு-3)

**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாககணித்துத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:-076 835 1932, 021 223 2222

உரும்பிராய்.

(7272)

**தொற்று நோய்கள் தொற்றாத நோய்கள் வராது புன்னகையுடன் வாழ**

**புகைக்காதீர்கள் சிகரெட், கஞ்சா**

**மனநோய் வராது மகிழ்வுடன் வாழ**

**அருந்தாதீர்கள் மதுபானம்**

(C-5329) குடும்ப நல உதவியாளர், J/93

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

பாராட்டி வாழ்த்துகின்றோம்

**திரு.தெய்வேந்திரம் மங்களேஸ்வரன்**



22.01.2019 செவ்வாய்க்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணி (M.Ed) பட்டம் பெற்ற திரு.தெ.மங்களேஸ்வரன் அவர்களைப் பாராட்டுவதோடு மேலும் பல பட்டங்கள் பெற்று சிறந்திருக்க வாழ்த்துகின்றோம்.

Best Wishes!

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள்
மு/மன்னாகண்டல் அ.த.க.பாடசாலை

**கண்ணீர் அஞ்சலி**

**அமரர் பரமு மார்க்கண்டு**
**(காரைநகர்)**



தோற்றம்: 20.11.1928 மறைவு: 26.01.2019

எமது பாடசாலை வளர்ச்சியில் அக்கறை உடையவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரனின் அன்புத் தந்தை அமரர் பரமு மார்க்கண்டு அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வியாவில் ஐயனாரின் பாதம் பணிந்து நிற்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இழப்பால் துயருறும்:- பாடசாலைச் சமூகம்
வியாவில் சைவ வித்தியாசாலை, காரைநகர்.

(C-5321)

**கண்ணீர் அஞ்சலி**

**அமரர் பரமு மார்க்கண்டு**
**(காரைநகர்)**



தோற்றம்: 20.11.1928 மறைவு: 26.01.2019

எமது பாடசாலை வளர்ச்சியில் அக்கறை உடையவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரனின் அன்புத் தந்தையுமான அமரர் பரமு மார்க்கண்டு அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பரத்தான் பாதம் பணிந்து நிற்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இழப்பால் துயருறும்:- பாடசாலைச் சமூகம்
வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலை,
காரைநகர்.

(C-5322)

**கண்ணீர் அஞ்சலி**

**அமரர் பரமு மார்க்கண்டு**
**(காரைநகர்)**



தோற்றம்: 20.11.1928 மறைவு: 26.01.2019

எமது கூட்டுறவுச்சங்க வளர்ச்சியில் அக்கறை உள்ளவரும் எமது மண்ணின் மகளும் கல்வி இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரனின் அன்புத் தந்தை அமரர் பரமு மார்க்கண்டு அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனின் பாதம் பணிந்து நிற்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இழப்பால் துயருறும்:-
அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
காரை மத்தி, காரைநகர்.

(C-5323)

**கண்ணீர் அஞ்சலி**

**அமரர் பரமு மார்க்கண்டு**
**(காரைநகர்)**



தோற்றம்: 20.11.1928 மறைவு: 26.01.2019

எமது மண்ணைச் சேர்ந்தவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரனின் அன்புத் தந்தையுமான அமரர் பரமு மார்க்கண்டு அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பத்தர் கேணி வண்மீக விநாயகர் பாதம் பணிந்து நிற்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இழப்பால் துயருறும்:- திருப்பணிச் சபையினர்
பத்தர் கேணி வண்மீக விநாயகர் ஆலயமும்
பத்தர் கேணி வாழ் மக்களும், காரைநகர்.

(C-5324)

**கண்ணீர் அஞ்சலி**

**அமரர் பரமு மார்க்கண்டு**
**(காரைநகர்)**



தோற்றம்: 20.11.1928 மறைவு: 26.01.2019

எமது கிராமத்தின் அபிவிருத்தியில் அக்கறை கொண்டவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரனின் அன்புத் தந்தை அமரர் பரமு மார்க்கண்டு அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தங்கோடை நாகம்மாள் பாதம் பணிந்து நிற்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இழப்பால் துயருறும்:-
[illegible] கிராம அபிவிருத்தி சங்கம்
காரைநகர்.

(C-5325)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மாகாணத்திற்காக அரசியலமைப்பு உருவாக்கப்பட்டால் நாடு குழப்பமடையும்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் எச்சரிக்கை

(கொழும்பு)

ஒரு மாகாணத்திற்காக அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டால் ஒட்டுமொத்த நாடும் குழப்பமடையும் என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை எச்சரித்துள்ளார்.



உலக இலங்கை அமைப்பின் தலைவர் சுனில் சந்திரகுமார உள்ளிட்ட தரப்பினர், கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார் என தெற்கு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறான ஓர் பின்னணியில் நாட்டுக்கு இந்த மாதிரியான ஓர் புதிய அரசியல் அமைப்பு அவசியமில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இந்த மாதிரியான அரசியல் அமைப்பால் நாட்டின் நல்லிணக்கமும் சகவாழ்வும் பாதிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இந்த புதிய அரசியல் அமைப்பை வேறு மாகாணங்கள் கோரவில்லை எனவும், ஒரு மாகாணம் மட்டும் கோருவதற்காக அவசர அவசரமாக ஏன் அரசியல் அமைப்பை கொண்டு வர வேண்டுமென மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7)

## "நான் யாரையும் காப்பாற்ற மாட்டேன்"

### உத்தரதேவியில் மைத்திரி



(கொழும்ப)

இப்போது மருதானையில் இறங்கியவுடன் பயணச்சீட்டு(ரிக்கெட்) இல்லையென எல்லாரையும் பிடிக்கப் போகின்றார்கள். நான் யாரையும் காப்பாற்ற மாட்டேன்" என கொழும்பு- காங்கேசன்துறை புகையிரதத்தில் இருந்தபடி ஜனாதிபதி நகைச் சுவையாக தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டை - காங்கேசன்துறைக்கிடையிலான உத்தரதேவி புகையிரத சேவை நேற்று காலை 6 மணிக்கு ஆரம்பமானது.

இதற்கான ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, இந்திய உயர்ஸ்தானிகர் தரன்ஜித் சிங் சந்து ஆகியோர் கலந்து கொண்டனர்.

சேவையை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி, கொழும்பு-கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து மருதானை புகையிரத நிலையம் வரை பயணிகளுடன் பயணித்தார்.

இதன்போதே அவர் சிரித்தபடி "இப்போது மருதானையில் இறங்கியவுடன் டிக்கெட் இல்லையென எல்லோரையும பிடிக்கப் போகின்றார்கள். நான் யாரையும் காப்பாற்ற மாட்டேன்" என நகைச்சுவையாக தெரிவித்தார். (இ-7)

## தேசிய அரசாங்கத்தை மீள அமைக்க முயற்சி

### அமைச்சர் ஹக்கீம் தகவல்



(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணியுடன் கூட்டணி அரசாங்கத்தின் கொள்கையை ஏற்றுக் கொண்ட அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து தேசிய அரசாங்கத்தை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மீளச் செலுத்த வேண்டிய அரசமுறை கடன்களை மீள்செலுத்துவதுடன், மக்களுக்கான அபிவிருத்தியையும் முன்னெடுக்க ஐக்கிய தேசிய முன்னணியுடன் கூட்டணியமைத்துக் கொள்வதுடன் அனைத்து பங்காளி கட்சிகளையும் தேசிய அரசாங்கத்தின் ஊடாக ஒன்றிணைப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசிய முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தும் சகோதர கட்சிகளுக்கிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே குறித்த தீர்மானம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

## பிள்ளையின் மரணத்தில் சந்தேகம் தந்தையின் முறைப்பாட்டிற்கமைய பிரேத பரிசோதனைக்கு உத்தரவு



(கரணவாய்)

பிள்ளையின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக தந்தை செய்த முறைப்பாட்டிற்கு அமைய சடலத்தை பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை மரணவிசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அறிவாலயம் இமையாணன் கிழக்கு உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த அஜித்குமார் அஸ்மிதா என்ற நான்கு மாத குழந்தை நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இறந்த நிலையில் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இக் குழந்தை பிறந்து 35 ஆம் நாளில் மூக்கிலிருந்து குருதி வெளியேறிய நிலையில் யாழ்.போதன வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்நான்குதினங்களுக்கு முன்னர் குழந்தையின் தந்தைக்கும் தாய்க்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டால்தந்தை வீட்டை விட்டு வெளியேறி உள்ளார்.

குழந்தை இறந்ததாக கேள்வியுற்ற தந்தையான அஜித்குமார் தனது குழந்தையான அஸ்மிதா உடல் நலத்துடன் விளையாடிக் கொண்டிருந்ததாகவும்இரவே மரணமடைந்த தகவலை அறிந்ததாகவும் தனது குழந்தையின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக வல்வெட்டித்துறை பொலிஸில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முறைப்பாடு செய்தார்.

குழந்தையின் மரணம் தொடர்பில் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைக்கு சென்று சடலத்தை பார்வையிட்ட பருத்தித்துறை மரணவிசாரணை அதிகாரி சதாசிவம் சிவராஜா மேலதிக விசாரணையை மேற்கொண்டார்.

இதில் பிள்ளையின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக தந்தையார் தெரிவித்தார்.

இதனையடுத்து குழந்தையின் சடலத்தை யாழ் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று பிரேத பரிசோதனை மேற்கொள்ளுமாறு வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு அவர் உத்தரவிட்டார். (இ-60)

## சு.க.தனித்து செயற்பட்டால் அது ஐ.தே.கவுக்கு பலமாகவே அமையும்

### மகிந்த அணி செஹான் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

சுதந்திரக் கட்சியால் தற்போதைய நிலையில் ஒருபோதும் தனித்து செயற்பட முடியாது எனத் தெரிவித்த மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் சேஹான் சேமசிங்க, பொதுஜன பெரமுன கூட்டணியமைக்காது தனித்து செயற்படுவது ஐக்கிய தேசிய கட்சிக்கு பலமாக அமையும் எனவும் தெரிவித்தார்.

மேலும் பொதுஜன பெரமுனவுடன் சுதந்திரக் கட்சியுடன் கூட்டணியமைத்தோ, தனித்தோ, ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக செயற்படத் தயாராகவே உள்ளது எனவும்தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரது கூட்டணி உருவாகக் கூடாது என்று இரண்டு தரப்பிலும் காணப்படுகின்ற வாதப்பிரதிவாதங்கள் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## தோட்டத் தொழிலாளர்களை அரசாங்கம் ஏமாற்றி விட்டது

### மகிந்தானந்த கவலை



(கொழும்பு)


மலையக மக்களின் நியாயமான சம்பள உயர்வு கோரிக்கையில் அரசாங்கமும், முதலாளிமார் சம்மேளனமும் நியாயமான தீர்வை பெற்றுக் கொடுக்காது ஏமாற்றி விட்டது எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே, அடிப்படை சம்பளத்தை 700 ரூபாவாக அதிகரித்தமையானது அம்மக்களின் போராட்டத்திற்கு பெறுபேறாக அமையாது எனவும் தெரிவித்தார்.

தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டது.

அவ் வாக்குறுதிகளில் சம்பள அதிகரிப்பும் ஒன்றாகக் காணப்பட்டது. தற்போதும் அரசாங்கம் மலையக மக்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் எவ்விதமாக நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
20
–
11
–
1928

மறைவு
26
–
01
–
2019

## அமரர் பரமு மார்க்கண்டு (காரைநகர்)


எமது பாடசாலையின் பழைய மாணவியும் கல்வி இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரனின் அன்புத் தந்தை அமரர் பரமு மார்க்கண்டு அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பரத்தான் பாதம் பணிந்து நிற்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**இழப்பால் துயருற்றிருக்கும்:**
**பாடசாலைச் சமூகம்**
**காரைநகர் இந்துக் கல்லூரி,**
**காரைநகர்.**

(C-5319)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
1928
-
11
-
20

மறைவு
26
-
01
-
2019

## அமரர் பரமு மார்க்கண்டு
## (காரைநகர்)

எமது ஊரைச் சேர்ந்தவரும் எமது களபூமி இந்து இளைஞர் மன்றம் மற்றும் களபூமி விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் வளர்ச்சியில் அக்கறை கொண்டவருமாகிய கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் அன்புத் தந்தை அமரர் பரமு மார்க்கண்டு அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல திக்கரை முருகன் பாதம் பணிந்து நிற்கின்றோம்.


*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**இழப்பால் துயருறும்:**
**களபூமி இந்து இளைஞர் மன்றம்**
**களபூமி விளையாட்டுக்கழகம்,**
**காரைநகர்.**

(C-5320)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர்
## பரமு மார்க்கண்டு
## (காரைநகர்)



**தோற்றம்: 20.11.1928 | மறைவு: 26.01.2019**

எமது மண்ணின் மைந்தன் முன்னாள் இந்து கலாசார அமைச்சர் அமரர் தியாகராஜா மகேஸ்வரனின் அன்பு மாமனாரும் தற்போதைய கல்வி இராஜாங்க அமைச்சரான விஜயகலா மகேஸ்வரனின் அன்புத் தந்தையுமான அமரர் பரமு மார்க்கண்டு அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பரத்தான் பாதம் பணிந்து நிற்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**இழப்பால் துயருறும்:**
**காரைவாழ் மக்கள்,**
**காரைநகர்.**

(C-5318)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த வலியுறுத்தி யாழில் கவனயீர்ப்பு



(யாழ்ப்பாணம்)


வடக்கில் அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனை மற்றும் வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்த வலியுறுத்தி கவனயீர்ப்புப் போராட்டமொன்று நேற்று யாழ்.பிரதான பேருந்து தரிப்பிட முன்றலில் முன்னெடுக்கப்பட்டது.

ஜனநாயகத்துக்கான இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட போதைப் பொருளை ஒழிக்க வேண்டுமென வலியுறுத்தி ஜனநாயகத்துக்கான இளைஞர் அமைப்பு முன்னெடுத்த இப் போராட்டத்தில் மேலும் பல இளைஞர்களும் இணைந்துகொண்டனர்.

போதைப் பொருளைக் கட்டுப்படுத்து, சிறுவர் பெண்கள் துஷ்பிரயோகத்தை கட்டுப்படுத்த வேண்டும், தோட்டத் தொழிலாளர்களது சம்பளத்தை 1000 ரூபாவாக உயர்த்த வேண்டும் போன்ற கோஷங்களைப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் எழுப்பியிருந்தனர்.

மேலும் இளைஞர்களின் வேலைவாய்ப்புக்களை உறுதிப்படுத்த வேண்டும், இதற்கு அரசியல் தலைமைகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் இக் கவனயீரப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (இ-9)

## 4 துவிச்சக்கரவண்டிகள் பொறுப்பேற்றல்



(யாழ்ப்பாணம்)

நெல்லியடி வர்த்தக சங்கத்தினரால் அடையாளம் காணப்படாத பத்து துவிச்சக்கர வண்டிகளை அடையாளப்படுத்துமாறு வலம்புரிப் பத்திரிகையில் செய்தி வெளியிட்டதன் பயனாக இதுவரை 4 பேர் துவிச்சக்கரவண்டிகளைப் பெறுப்பேற்றுள்ளனர். (இ-10-60)

# ஜனநாயகத்தை நிலை நிறுத்த முற்பட்டவர்கள் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு குரல் கொடுக்காமலிருப்பது கவலைக்குரியது

## கபே அதிருப்தி

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் ஜனநாயகத்தை நிலைநிறுத்த முற்பட்டவர்கள் மாகாண சபை தேர்தலை நடத்துவது தொடர்பில் குரல் கொடுக்காமலிருப்பது கவலைக்குரிய விடயமென கபே அமைப்பின் பதில் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கின் நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளார்.

மாகாணசபைத் தேர்தல் காலம் தாழ்த்தப்படுகின்றமை தொடர்பாக ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

"நாடாளுமன்றத்தில் ஜனநாயகத்தை நிலைபெற செய்வதற்காக கடந்த ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் இரவு பகல் பாராமல்பாடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், இதுவரைக்கும் மக்கள் பிரதிநிதிகளை மாகாண சபைகளில் அமர்த்துவதற்கு எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளாமல் இருக்கின்றனர்.

இலங்கையில் காணப்படுகின்ற 9 மாகாண சபைகளில் 6 மாகாண சபைகளின் கால எல்லை முடிவடைந்துள்ளது.

ஏனைய 3 மாகாண சபைகளின் காலங்களும் எதிர் வரும் ஏப்ரல் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் நிறைவுபெறும்.

அந்தவகையில் வடக்கு, கிழக்கு, மத்திய, வடமேற்கு, வட மத்திய, சப்ரகமுவ ஆகிய ஆறு மாகாண சபைகளின் காலங்கள் தற்போது நிறைவடைந்துள்ளன.

அதேபோன்று மேல் மாகாணம், தென் மாகாணம் மற்றும் ஊவா மாகாணங்களின் காலஎல்லையும் எதிர் வரும் மாதங்களில் நிறைவடையவுள்ளன.

இந்நிலையில் தேர்தலை உரிய காலத்தில் நடத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் ஜனநாயகத்திற்கு விரோதமான செயற்பாட்டில் தற்போதைய அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது.

இந்நிலையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் இறுதி தீர்மானத்தை எடுக்கக்கூடிய ஒரே இடம் நாடாளுமன்றமாகும்.

ஆகையால் மீள் எல்லை நிர்ணயம், புதிய தேர்தல் முறை தொழில்நுட்பம் ஆகியவற்றில் சிக்கல் காணப்படுவதாக கூறி தேர்தல் நடத்துவதனை காலம் தாழ்த்தாமல் பழைய தேர்தல் முறையில் தேர்தலை நடத்துவதற்கு நாடாளுமன்றத்தின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7-8)


# கண்ணீர்க் காணிக்கை

## திரு.செல்லத்துரை கணேசமூர்த்தி



(உரிமையாளர் பராசக்தி ஏஜன்சி, பண்டாரவளை, அறங்காவலர், இராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம், பலகாடு, காரைநகர்)


பலகாடு, காரைநகரைப் பிறப்பிடமாகவும் பண்டாரவளையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கணேசமூர்த்தி அவர்கள் 26.01.2019 இல் அமரத்துவம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இராஜேஸ்வரி அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.

இராஜேஸ்வரி அம்பாள் அடியார்கள்

(7305)


# அமைச்சர் ஹக்கீமின் அமைச்சின் கீழ் மேலும் இரு உயர் கல்வி நிறுவனங்கள்

(கொழும்பு)



அமைச்சர் ரவூப் ஹக்கீமின் அமைச்சின் கீழ் மேலும் இரு பல்கலைக்கழகங்கள் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் அகில விராஜ்காரியவசத்திடம் காணப்பட்ட பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் மற்றும் பௌத்த பிக்குகள் பல்கலைக்கழகம் என்பனவே உயர் கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் கடந்த 10 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானியில் இம்மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (7-8)

# இராசி பலன்

**மீனம்:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வரவை விட செலவுகள் கூடலாம், வளர்ச்சி கூட வழிபாட்டினை மேற்கொள்ள வேண்டிய நாள்.

**மேடம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**இடபம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும், கடன் சுமை குறைய வழி வகை செய்வீர்கள், போசன நன்மையுண்டு.

**மிதுனம்:** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், குடும்ப மகிழ்ச்சி கூடும், வழிபாட்டால் முன்னேற்றம் பெற வேண்டிய நாள்.

**கும்பம்:** பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், திடீர் பயணங்கள் ஏற்படலாம், புதிய முயற்சிகள் கைகூடும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்:** பெற்றோர் மீது பிரியம் கூடும், வருமானம் வருவதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், வாகன சுகமுண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ் | | | |
| | இராசி பலன் — கிரகநிலை | | ராகு |
| சூரி, புத, கேது | சந்திராஷ்டமம் ரேவதி, அச்சுவினி | | |
| சனி | குரு, சுக் | சந் | |

28.01.2019

தை 14, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு

அட்டமி முன்னிரவு 8.19 மணிக்கு

சுவாதி முன்னிரவு 8.19 மணிவரை

சுபநேரம் 12.36-2.06 மணிவரை

இராகுகாலம் 8.06-9.36 மணிவரை

வளவன்

**மகரம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், போசன சுகமுண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**சிம்மம்:** பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், எடுத்த காரியத்தில் முன் னேற்றம் காண்பீர்கள், உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**தனுசு:** பொது வாழ்வில் புகழ்கூடும் நாள், சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், காரியங்களில் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள், உறவினர்கள் வருகையுண்டு.

**துலாம்:** குடும்பத்தில் பெரியவர்களின் சொற்களைக் கேட்டு நடப்பீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** திடீர் பண வரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும் வகையில் அமையும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "போதையிலிருந்து விடுதலையான நாடு" நவீன வசதிகளுடன் கூடிய புதிய புகையிரதம் தனது முதலாவது பயணத்தை ஆரம்பித்தது







(கொழும்பு)

"போதையிலிருந்து விடுதலையான நாடு" தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் கொழும்பு கோட்டை புகை. யிரத நிலையத்திலிருந்து காங்கேசன்துறை வரை செல்லும் "போதையிலிருந்து விடுதலைபெற்ற நாடு" என்று பெயர்சூட்டப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய புதிய புகையிரதத்தின் முதலாவது 'பயணத்தை ஆரம்பிக்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

இப்பயணத்தை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதியின் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து மருதானை வரை புகையிரதத்தில் பயணித்தார்.

நான்கு ஆண்டுகளுக்கு முன் ஜனாதிபதயின் எண்ணக்கருவில் தோன்றிய போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்றிட்டம் அண்மைய காலங்களில் புதிய தோற்றத்துடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

அதற்கமைய நேற்று முதல் ஆரம்பமாகிய அறநெறிப் பாடசாலை போதைப்பொருள் ஒழிப்பு வாரத்துடன் இணைந்ததாக இந்தப் புகையிரதத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

புதிய ப்புகையிரதத்தை மக்கள் பயன்பாட்டிற்காக கையளித்த ஜனாதிபதி, போதைப் பொருளால் ஏற்படும் தீய பின் விளைவுகள்மற்றும்போதைப் பொருள் ஒழிப்பிற்கு மேற் கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் மக்களைத் தெளிவூட்டும் துண்டுப்பிரசுரம் வழங்கும் நிகழ்விலும் கலந்துகொண்டார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, போதைப் பொருள் தடுப்பிற்காக கடந்த நான்கு ஆண்டுகளில் மேற் கொண்ட வேலைத்திட்டங்கள் இந்த ஆண்டு முதல் புதிய தோற்றத்துடன் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து போதைப் பொருட்களை இல்லாதொழிப்பதற்காக மேற் கொள்ளப்பட்டுவரும் தேசிய வேலைத் திட்டங்களுக்கு கட்சி வேறுபாடின்றி ஒத்துழைப்பு வழங்குமாறும் இலங்கை வாழ் மக்களிடம் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார்.

வடக்கையும் தெற்கையும் இணைக்கும் முகமாக பயணத்தை ஆரம்பித்த இந்த புகையிரதத்திற்கு "போதையிலிருந்து விடுதலையான நாடு" என்ற பெயர் சூட்டியதற்கான நிகழ்வை உறுதிப்படுத்தும் முகமாக ஜனாதிபதியால் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவிடம் குறித்த ஆவணங்கள் கையளிக்கப்பட்டன.

இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட இந்த புகையிரதம் இரண்டு இயந்திராங்கள் குளிரூட்டப்பட்ட இரண்டு பெட்டிகள், 2ஆம் வகுப்பைக் கொண்ட இரண்டு பெட்டிகள் மற்றும் 3ஆம் வகுப்பை கொண்ட ஏழு பெட்டிகளையும் கொண்டதாகும்.

இந்த நிகழ்வுடன் இணைந்ததாக அறநெறிப் பாடசாலை மாணவர்களை போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பாக தெளிவூட்டும் விசேட நிகழ்வொன்று குருநாகல் புகையிரத நிலையத்தில் நேற்று இடம்பெற்றது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரன்ஜித் சிங் சந்து, இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க, போதைப் பொருள் ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் பணிப்பாளர் வைத்தியர் சமந்த கிதலவ ஆரச்சி ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

# பொலிஸ்மா அதிபரின் குரல் மாதிரி தொடர்பான அறிக்கை விரைவில்

## பகுப்பாய்வுத் திணைக்களம் தகவல்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட குரல் மாதிரி சம்பந்தமான அறிக்கை தயாரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதாக அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களம் கூறியுள்ளது.

அறிக்கை தயாரிக்கப்பட்டதன் பின்னர் அதனை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அந்த திணைக்களம் கூறியுள்ளது.

முக்கிய பிரமுகர்கள் கொலை சதித்திட்டம் சம்பந்தமாக நாமல்குமார வழங்கிய தொலைபேசி உரையாடல் ஒலிப்பதிவுகள் தொடர்பிலான விசாரணைக்கு அமைவாக அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தினால் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவிடம் குரல் மாதிரி பெற்றுக் கொள்ளப்பட்டது.

கடந்த 14ஆம் திகதி பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவிடம் அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தில் ஆஜராக குரல் மாதிரியை வழங்கியிருந்தார்.

அதன்படி அந்தக் குரல் மாதிரி பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதன் அறிக்கை தயாரிக்கும் பணிகள் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருப்பதாகவும் அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களம் கூறியுள்ளது.

அத்துடன் பொலிஸ்மா அதிபரை மீண்டும் அழைக்கும்தேவையில்லை என்றும் அந்த திணைக் களம் கூறியுள்ளது. (7-8)





யாழ்.நெல்லியடி மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை திறப்பு விழா நேற்றுக் காலை நடைபெற்றிருந்தது.

பாடசாலை அதிபர் நடராசா தேவராஜா தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில், முன்னாள் பிரதி விவசாய அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு திறன் வகுப்பறையை திறந்து வைத்து பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தார். (படங்கள்:-மகாலிங்கம்)

# பறை இசையுடன் லண்டனில் தைப்பொங்கல்

(லண்டன்)

வீரத்தமிழர் முன்னணியினரின் ஏற்பாட்டில் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் விழா கடந்த வாரம் லண்டன் நகரில் நடத்தப்பட்டது.

குறித்த நிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்பட்டு , தமிழர்களின் பாரம்பரிய இசையான பறை இசையுடன் 150 பானைகள் வைத்து, பொங்கல் விழா ஆரம்பமாகியது.



தமிழர் பாரம்பரிய இசையான பறையை இராசேந்திரம் சுதன் தலைமையில் கபிலன், வாகீசன், வினோத் , கீர்த்தன், தனேஸ் மற்றும் சுஜீவன் ஆகியோர் இசைத்தனர்.

மேலும் இந்த விழாவில் 500 இற்கு மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டு தமிழர் பாரம்பரிய நிகழ்வுகளை நடத்தினர். (இ-9)

# கலாபூஷணம்- 2018 விருது வழங்கும் விழா

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டுக்கான கலாபூஷணம் விருது வழங்கும் விழா நாளை 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பு தாமரைத் தடாக மண்டபத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறும் என கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

கலைத்துறையில் சிறந்த பணியாற்றும் கலைஞர்களுக்கு ஆண்டு தோறும் கலாசார அலுவல்கள் திணைக்களம்,இந்து சமய கலாசார அலுவல்கள் மற்றும் முஸ்லிம் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் என்பனவற்றின் ஏற்பாட்டில் கலாபூஷணம் விருது வழங்கப்பட்டு வருகி ன்றது. வருடா வ்ருடம் மூவின சமூகங்களையும் சேர்ந்தவர்களுக்கு கலாபூஷணம் விருது வழங்கும் விழா நடைபெற்று வருகின்றது.

இந்த வகையில் இம்முறை 168 சிங்களக் கலைஞர்கள்,20 தமிழ்க் கலைஞர்கள்,10 முஸ்லிம் கலைஞர்கள் ஆகியோருக்கு இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன. தேசிய ரீதியில் இருவருக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன. (இ-7)

# கோபுரத்திற்கு கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மேற்கு வாசல் கோபுர மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் 30ஆம் திகதிபுதன்கிழமை முற்பகல் 9.25 மணிமுதல் 10.50 மணி வரையான சுப முகூர்த்த நேர த்தில் இடம் பெறும். அத்தருணம் அம்பாள் அடியார்கள்ஆசாரசீலர்களாக வருகை தந்து அம்பாள் அனுக்கிரகத்தை பெற்றுய்யும்வண்ணம் ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (இ-7)

# எதிர்கால நீர்த்தேவையைக் கருத்தில் கொண்டு யாழ்.மாவட்ட விவசாயிகள் செயற்படவேண்டும்

## நீர்ப்பாசனப் பொறியியலாளர் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தின்எதிர்கால நீர்த்தேவையைக் கருத்தில் கொண்டு விவசாயிகள் தூர நோக்குடன்செயற்பட வேண்டுமெனயாழ்.மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர்தெரிவித்தார்.


யாழ்.மாவட்டத்தில் பெய்த அடைமழை காரணமாக நீரேந்துப்பிரதேசங்களிலும் வயல் பிரதேசங்களிலும் நீர் தேங் [illegible] லுக்குள் செல்ல விட்டால் விவசாய பிரதேச பகுதிகளின் நிலத்தடி நீர் பாதிக்கப்படுமெனத் தெரிவித்தார்.

மருதங்கேணி தொடக்கம் தொண்டமானாறுவரையுள்ள 30 சதுர மைல் தூரத்திற்கு 3 அடி நீர் [illegible]படுவதாகவும் [illegible] வயல் பகுதிகளில் உள்ள நீரை வெளியேற்ற நடவடிக்கை எடுத்தால் யாழ்.மாவட்ட மக்கள் பயன்படுத்தும் நீரின் அளவை விட அதிகமாக வெளியேற்ற வேண்டிய நிலை ஏற்படுமெனவும் எதிர்காலத்தில் யாழ்.மாவட்டம் பாரிய நீர்ப் பற்றாக்குறையை எதிர்நோக்க வேண்டிவருமெனத் தெரிவித்தார்.

எனவே நீரையும் வீணாக்காமலும் விவசாயிகளும் நட்டம் அடையாமல் இருப்பதற்கு நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தமது அறுவடையின் போது பாரம்பரிய அறுவடை முறைகளைப் பின்பற்ற முன்வர வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவைக் கந்தன் தேரில் சிற்பியின் சிந்தனை



இலங்கைத் திருநாட்டில் இதுவரையாரும் செய்திடாத 45 அடி உயரமுடைய ஓர் முக உத்திர வேலையாக கந்தபுராணக் காட்சி அமைப்புக்களையும் மாருதப்புர வீகவல்லியின் குதிரை முகம் நீங்கிய வரலாறுகளையும் தேரில் சிற்பங்களாக அமைத்து வருவதாக மாவைக் கந்தன் தேரின் சிற்பாச்சாரிஸ்தபதி கந்தசாமி இளங்கோவன் தெரிவித்தார்.

30 வருடகால துறைசார் அனுபவத்தையும் ஆறாவது பரம்பரை வழித் தொழிலாகவும் இத்தேரினை சிறப்பாக அமைத்து வருவதாகத் தெரிவித்தார்.

தேரின் அமைப்பு

முருகப்பெருமான் ஆறுமுகங்களைக் கொண்டவர். அதனால் ஆறுபக்கங்களை அவரின் முகத்துக்கு எடுத்துக் காட்டாகவும் மேற்பகுதி பூசாந்தரமாகவும் முடிவுப்பகுதியான வியாளவரி எட்டுபட்டமாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

தேரின் கீழ்ப் பகுதியான பூசாந்திரவடிவம் சிவனுக்கும் அம்மனுக்கும் உரியதாகவும் முடிவுப் பகுதியான வியாளவரி உக்கிர தெய்வத்திற்குரியதாகவும் அமைக்கப்பட்டுள்ளதோடு கந்தபுராண காட்சிகளை மூன்று வரி விக்கிரகங்களாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பயன்படுத்தும் மரங்கள்

இத்தேரை முழுமையாக அமைக்க ஐந்து வகையான மரங்களை பயன்படுத்துவதாகவும் மருத மரத்தில் தேரின் அச்சு கபோதவரி (யானை, சிங்கம்) என்பன செய்யவும் தேக்கமரம் விக்கிரகங்கள் செய்யவும், முதிரை மரம் பவளக் கால்கள் செய்யவும், சூரிய மாறா மரத்தின் வியாளவரி (பொம்மை, விக்கிரகங்கள்) செய்யவும் மலைவேம்பு தேரின் யாழி, மேல்தட்டு, இருக்கையின் மேல் பந்தல் என்பன பயன்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

தேரின் தொழில் நுட்பம்

இந்தியத் தேர்களில் கூட இதுவரை யாரும் செய்திடாத எவ்வித ஆணிகளும் கம்பிகளும் பயன்படுத்தாமல் உபயோகிக்கப்படுகின்ற மரங்களால் இணைப்புக்களை ஒன்றுடன் ஒன்று ஏற்படுத்தி அமைத்து வருவதாகவும் மர அச்சு 121/2 அரை அடியாகவும் இரும்பச்சு 16 அடியாகவும் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

பல தேர்கள் அமைப்பு

1997 ஆம் ஆண்டு முதன் முதலில் கொழும்பு தெகிவளை ஆஞ்சநேயர் ஆலயத்தில் ஆரம்பித்து கொழும்பு மாணிக்கப் பிள்ளையார் ஆடிவேல் தேர், மட்டக்களப்பு ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலயம் கண்டி தலகா காளி அம்மன் ஆலயம், நிக்கோயா மாரி அம்மன் ஆலயம், யாழ். மண்கும்பான் பிள்ளையார் ஆலயம், அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றில் என்னால் தேர்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இந்த வருடம் மஹோற்சவ தேர்த் திருவிழாவின்போது மாவைக் கந்தன் தேரேறி வலம் வர ஆக்கிஅருளிப்பதற்குமாவைக் கந்தனின் இறையருளும் குருவரு ளும் கிடைக்கும் என தான் நம்புவதாகத் தெரிவித்தார். (இ-10)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



உதவும் இதயங்கள் அமைப்பினால் கடந்த வெள்ளிக்கிழமை யா/கொடிகாமம் போக்கட்டி அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. அமையத்தின் தென்மராட்சி இணைப்பாளர் திருமதி.தவமலர் ஏற்பாட்டில் இந்த உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் பாடசாலை அதிபர் தி.அபராஜிதன்.அமையத்தின் தலைவர். உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (7-30)



யா/ கரம்பைக் குறிச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் 2019 ஆம் ஆண்டுக்கான செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு பாடசாலை அதிபர் க.இளங்கோவன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ. திருக்குமரன் கலந்து கொண்டார். (படங்கள்:- சுபேசன்)

# இலங்கை கடற்படை பயிற்சி ஆரம்பம்






(கொழும்பு)

இலங்கை கடற்படை இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் நடத்த ஏற்பாடு செய்துள்ள கொழும்பு கடற்படை பயிற்சி (Colombo Naval Exercise – CONEX 19) நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

இந்தப் பயிற்சியை நாளை 29 ஆம் திகதி வரை கொழும்பு கடல் பகுதியில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் உரையாற்றிய ரியர் அட்மிரல் ஆனந்த குருகே,

குறித்த பயிற்சி தொழில் முறை திறன் வளர ஒரு நல்ல வாய்ப்பு.

அதன்படி குறித்த பயிற்சியின் எதிர்கால விவகாரங்கள் பற்றி கடற்படை, விமானப்படை மற்றும் கடலோர காவல் படை அதிகாரிகளுடன் ஒரு கலந்துரையாடலும் இடம் பெற்றது.

மேலும் குறித்த கடற்படை பயிற்சி துறைமுக மற்றும் கடல் என, இரண்டு கட்டங்களின் கீழ் நடைபெறவுள்ளன.

அங்கு கடல் குண் டுகள் வைக்கப்பட்ட நீரில் கப்பலோட்டுதல், கடலில் வளங்கள் தேவைகள் தொகுத்தல் மற்றும் கப்பல்கள் இழுத்தல் உட்பட பல கடற்படை பயிற்சிகள் நடைபெறவுள்ளன. (இ-7)

# யாழ்.மகளிர் அபிவிருத்தி நிலையக் கண்காட்சி நாளை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் நடத்தப்படும் யாழ்ப்பாண மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஆடை வடிவமைத்தல், அழகுக் கலை, மனைப் பொருளியல் கண்காட்சி நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம் மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் தலைவர், பிரதேச செயலாளர் பொன்னம்பலம் தயானந்தன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள பதில் மாகாண பணிப்பாளர் திருமதி ந.இன்ப்ராஜ் கலந்து கொள்வார். (7-8-10)


# Green Vision Lanka (Pvt) Ltd

## தேக்குச் செய்கை

இச் செய்கையானது மேற்படி கம்பனியால் வட மாகாணம் முழுவதும் 2014 தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத் திட்டமானது 1/4 ஏக்கர் தொடக்கம் 1 ஏக்கர் வரையிலானது. இத் திட்டமானது எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் விரும்பத்தக்கதுமாகும். ஆகவே எமது கம்பனியின் அங்கத்துவ உறுப்புரிமை பெற்றவர்கள் எமது சூழலை பாதுகாக்கும் நோக்குடன் இம் மரச் செய்கை திட்டத்தில் ஈடுபடலாம். உதாரணமாக இயற்கையைப் பாதுகாப்பதால் நோய்க்கு மருந்து, பசிக்கு உணவு, தாகத்திற்கு தண்ணீர் என்ற மூலோபாயத்தைக் கொண்டதாக உள்ளது.

இயற்கையைப் பாதுகாப்பதற்காக நடப்படும் மரத்தினால் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய பொருளாதாரத்தின் உச்ச நிலையை அடைவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது என்பதனை ( Green Vision Lanka (Pvt) Ltd) கம்பனி மிகவும் ஆணித்தரமாக கூறுகின்றது.

**கம்பனியால் நடைமுறைப்படுத்தப்படும் விபரங்கள் பின்வருவன.**

**அ. (படிமுறை I)**

01. நடுகைக்கான மரக்கன்று கம்பனியால் வழங்கப்படும்.
02. மரக்கன்றுகள் நடுகைக்கான குழி வெட்டுதல் கம்பனியால் மேற்கொள்ளப்படும்.
03. மூன்று வருடத்திற்கான மரக்கன்று பராமரிப்பு மேற்பார்வை கம்பனியால் மேற்கொள்ளப்படும்.
04. மரக்கன்று, பராமரிப்புச் செலவு போன்றவற்றிக்கான பண அறவீடு முதற்கட்டமாக 40 வீதம் கம்பனிக்குச் செலுத்துதல் வேண்டும்.
05. 20 ஆண்டுகளுக்குப் பின் சந்தைப்படுத்தல் வசதி ஏற்ற கம்பனிகளுடன் தொடர்பு கொண்டு அவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்துவது கம்பனியைச் சார்ந்ததாகும்.

ஆ. (படிமுறை II)

01. ( Green Vision Lanka (Pvt) Ltd) கம்பனியுடன் Plantation Investment திட்டத்தில் இணையும் நபர் ஒருவர் ரூபாய் இரண்டு இலட்சத்து பத்தாயிரம் (210,000.00) (06) ஆறு மாதத்திற்குள் முழுமையாக செலுத்தப்பட வேண்டும்.
02. பிரதேச தொடர்பு அலுவலகங்களின் ஊடாக தங்கள் பதிவுகளை மேற்கொள்ளும் நபர் பதிவிற்கான முதற்கட்டணப் பணம் (2000.00) இரண்டாயிரம் ரூபாய் ஆகும்.
03. மரச் செய்கையாளருக்கு கம்பனியால் வழங்கப்படும் கடன் வசதியைப் பெற விரும்பினால் மரச் செய்கையில் ஈடுபட்டு 36 மாதங்களின் பின் மரத்தின் பெறுமதிக்கு ஏற்றவாறு கடன் வசதியினைப் பெற்றுக் கொள்ளலாம்.
04. Plantation Investment திட்டத்தை கம்பனியினரிடம் நடைமுறைப்படுத்தும் மரச் செய்கையாளர் ஒருவருக்கு 12 மாதத்தின் பின் ஒரு வருடத்திற்கான மருத்துவக் காப்புறுதிப் பணம் கம்பனியால் செலுத்தப்படும்.

குறிப்பு:-

01. குழாய்க்கிணறு வசதிகள் செய்து தரப்படும்.
02. ஏனைய மரச் செய்கையுள் எம்மால் மேற்கொள்ளப்படும்.

தொடர்பு இல. 021 722 3186

நிபந்தனைக்கு உட்பட்டவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீரப்போவதில்லை"

# நாட்டைப் பிரிக்கும் சமஷ்டி முறையை நாம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை

## புதிய அரசியலமைப்பு ஒரு கதையைப் போன்றது என்கிறார் பிரியதர்ஷன

(கொழும்பு)



**அரசியலமைப்பு என்பது ஒரு சட்ட ஆவணம். இது எமக்கு ஒரு கதையைப் போன்றே தெரிகின்றது. இந்த அரசியலமைப்பை யாரும் விரும்ப மாட்டார்கள். அதேவேளை தமிழ் மக்களின் பிரச்சினைகளும் தீரப் போவதில்லை எனச் சுட்டிக்காட்டிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் முன்னாள் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா நாட்டை பிரிக்கும் "சமஷ்டி" முறையை நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.**

நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா கொழும்பு ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அந்த நேர்காணல் வருமாறு.

**கேள்வி:-** அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் இரண்டு ராஜபக்ஷக்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளதாகவும், அது கட்சியின் உள்ளக குழப்ப நிலை வரை வளர்ச்சியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றதே.

**பதில்:-** ஒருவரது பெயர் பரிந்துரை செய்யப்பட்டால், மற்றைய தரப்பினர் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் செயற்பாட்டின் காரணத்தினால் இன்னமும் அவ்வாறான பரிந்துரை தொடர்பில் பதில் கூறுவதற்கு என்னால் முடியாதுள்ளது. கட்சியினுள் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன என்ற விடயம் எனக்குத் தெரியாது. எனினும் எவரேனும் ஒருவரின் பெயர் முன்மொழியப்படுமாயின் அதற்கு அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

**கேள்வி:-** ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தான் தயார் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளரான கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளதை சில ஊடகங்கள் செய்தியாக வெளியிட்டுள்ளன. அதே போன்று அவர் தாமரை மொட்டு அங்கத்துவத்தைப் பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றதே.

**பதில்:-** கோத்தாபய ராஜபக்ஷ தாமரை மொட்டு கட்சியின் அங்கத்துவத்தைப் பெற்றிருக்கலாம். அவரிடத்தில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஏதேனும் நிலைப்பாடும் இருக்கலாம் என்றாலும் இறுதித் தீர்மானங்கள் எதுவும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை என்றே நான் கருதுகின்றேன்.

**கேள்வி:-** அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சியிலிருந்து அமைச்சர் சஜித் பிரேமதாஸவின்பெயர்முன்மொழியப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. அவ்வாறு நடந்தால் உங்களது வெற்றி அந்தளவு இலகுவானதல்ல தானே?

**பதில்:-** அடுத்த தேர்தலில் பல்வேறு விடயங்கள் அடிப்படையாகக் கொள்ளப்படும் என்றே நான் நினைக்கின்றேன். எனவே இந்நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய ஒருவரைப் பற்றியே அனைவரும் பேசுகின்றார்கள். அமைச்சர் சஜித் பிரேமதாஸவுக்கு பெரும்பான்மையான செல்வாக்கு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இந்நாட்டில் இருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்கக்கூடிய ஒருவரைப் பற்றியே இப்போது பேசப்படுகின்றது.

**கேள்வி:-** நீங்கள் அடுத்த மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடப் போவது ஸ்ரீ.ல.சு.கட்சியாகவா அல்லது பொது ஜன பெரமுன கட்சியாகவா?

**பதில்:-** தற்போது இடம் பெற்று வரும் பிரதான பேச்சுக்கள் பொதுஜன பெரமுன, ஸ்ரீ.ல.சு.கட்சி மற்றும் ஏனைய கட்சிகள் இணைந்து செயற்படுவதைப் பற்றியே அமைந்துள்ளன. தேர்தல் அறிவிக்கப்படும் போது அந்தக் கூட்டணிச் செயற்பாட்டை ஆரம்பிக்கும்.

**கேள்வி:-** தற்போது ஸ்ரீ.ல.சு.கட்சியின் மாற்றுக் குழு ஒன்று தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் பேச்சுக்களை நடத்துகின்றதுதானே?

**பதில்:-** ஸ்ரீ.ல.சு.கட்சியின் சொந்தக்காரர்கள் என்போர் அந்தக் கட்சியைச் சுற்றியிருப்போரேயாவர். அந்த உறவை முறித்துக் கொண்டு உறவினர்களல்லாத கூட்டத்தாரோடு செல்வதால் ஸ்ரீ.ல.சு.கட்சியின் வாக்குகள் அவர்களுக்குக் கிடைக்கப் போவதில்லையே! எனவே ஸ்ரீ.ல.சு.கட்சி பொதுஜன பெரமுனவுடனேயே உறவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் ஏனைய மாற்றுக் குழுக்களைப் பற்றிப் பேசுவதில் பயனில்லை.

**கேள்வி:-** புதிய அரசியலமைப்பு நாட்டைப் பிரிக்கும் "சமஷ்டி" அரசியலமைப்பு எனக் கூறி எதிர்க்கட்சி பொய்யான மாயையை உருவாக்குவதாக உங்கள் தரப்பு மீது குற்றச்சாட்டு உள்ளது தானே?

**பதில்:-** அரசியலமைப்பு ஒன்று கொண்டு வர வேண்டுமாயின் அந்த அரசியலமைப்பு அனைத்து தரப்பினரினதும் கலந்துரையாடலுக்கு உள்ளாக வேண்டும். அவ்வாறில்லாமல் எவரேனும் இருவர் அவர்களது தேவைக்கு ஏற்ப தயாரித்த ஆவணத்தை அரசியலமைப்பாக ஏற்றுக் கொள்ள நாம் தயாரில்லை. அரசியலமைப்பை நிறைவேற்றிக் கொண்டு நாட்டை எப்படி கொண்டு செல்வது? இதனால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. முஸ்லிம் மக்களின் பிரச்சினை தீரப் போவதுமில்லை. முதலில் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். அரசியலமைப்பு என்பது ஒரு சட்ட ஆவணம். இது எமக்கு ஒரு கதையைப் போன்றே தெரிகின்றது. அவ்வாறு அரசியலமைப்பை உருவாக்க எம்மால் முடியாது. இந்த அரசியலமைப்பை யாரும் விரும்புவார்கள் என நாம் நினைக்கவில்லை.

**கேள்வி:-** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் பங்காளி என பிரேரணை ஒன்றைச் செய்ய ஆயத்தங்கள் உள்ளதுதானே? இதன் ஊடாக அரசாங்கத்தை தர்ம சங்கடத்திற்கு உள்ளாக்கத் தானே உங்கள் தரப்பு முயற்சிக்கின்றது?

**பதில்:-** இவர்கள் எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்தாலும் அரசாங்கத் தரப்புடன் இணைந்திருப்பதைப் போலத்தானே தெரிகின்றது. எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்தாலும் அவர்கள் அரசாங்கத்திற்குத் தேவையான விடயங்களில் ஒத்துழைப்பை வழங்குகின்றனர். இது தொடர்பான சந்தேகத்தைத் தீர்க்க வேண்டியது அரசாங்கத்தின் பணியாகும். தாம் கூறுவதற்கு ஏற்பவே அரசாங்கம் வடக்கில் செயற்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியிருக்கின்றார்.

இது தொடர்பில் அரசாங்கம் எந்த அறிக்கையையும் விடவில்லை. அரசாங்கம் அவர்களது தேவைக்காகவா அல்லது நாட்டின் தேவைக்காகவா செயற்படுகின்றது என்பது தொடர்பில் எமக்குத் தெளிவில்லை. அரசாங்கம் இவ்வாறான கூற்றுகளுக்குப் பதிலளிக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள் ளிட்ட தமிழ்க் கட்சிகள் அனைத்திலும் இருப்பது தேர்தலில் வெற்றி பெற்ற மக்கள் பிரதிநிதிகளாவர். இவர்களுள் அநேகமானோர் பிரிவினைக்கு சார்பானவர்கள். சிலர் பிரிவினையினை எதிர்க்கின்றார்கள். நாட்டைப்பிரிக்கும் "சமஷ்டி" முறையினை நாம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. அவ்வாறில்லாமல் தமிழ் இனத்திற்கோ அல்லது கட்சிகளுக்கோ எதிராகச் செயற்படுவதற்கு நாம் தயாரில்லை.

இவர்கள் இலங்கையின் பிரதான கட்சிகளோடு இணைவார்களாயின் அதுவே நல்லது. அப்போது பல வருடங்களாக இருந்த இந்தப் பிரச்சினை முடிந்து விடும்.

**கேள்வி:-** ஊடகங்கள் இதனை விடவும் தர்மங்களைப் பேணவேண்டும் என்ற அடிப்படையில் ஊடக நிறுவனங்கள் முன்னால் அமைதியான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. இது அரசாங்கத்தினால் செய்யப்பட்ட ஒன்று என உங்களது தரப்பு கூறுகின்றது. முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் என்ற வகையில் இன்று ஊடகங்களின் செயற்பாட்டை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

**பதில்:-** உண்மையில் இந்த ஊடக தர்மங்கள் தொடர்பில் எமது காலத்திலும் பல விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டன. ஊடகங்களை ஒழுங்கு விதிகளால் கட்டுப்படுத்த வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டது.

அவ்வாறில்லாமல் சுய நெறிமுறைகளால் கட்டுப்பட வேண்டும் என மேற்கொண்ட முடிவுகளே இறுதியில் ஒரு விடயமாக. இருந்தது. எந்த ஒரு அரசாங்கமும் ஆட்சிக்கு வந்ததும் அந்த அரசுக்கு எதிராக விமர்சனங்களைச் செய்து ஊடகங்கள் செயற்படுகின்றன. தனியார் ஊடகங்கள் அநேகமாக அரசாங்கத்திற்கு எதிராகவே தமது கருத்துக்களை வெளியிடும்.

இது நேற்று இன்றுள்ள பிரச்சினையல்ல. அன்றிலிருந்தே இருக்கும் பிரச்சினை. அமெரிக்காவில், இலங்கையில் எங்கும் ஊடகங்கள் செயற்படுவது அவ்வாறுதான். ஊடகங்கள் கறுப்பா, வெள்ளையா என்று ஒன்று இல்லை. அரசாங்கமும் அதனை விடவும் நடைமுறைமிக்கதாக இருக்க வேண்டும். இது உலகம் முழுவதிலும் இருக்கின்றது. சில நாடுகளில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று ஊடகங்கள் பிரிந்திருக்கின்றன. அதனை நிறுத்த முடியாது. இலங்கையில்சுயாதீன ஊடகக் கலை நீண்ட காலமாக இருந்தது.

ஊடகக் கலையை மிகவும் முதிர்ச்சிமிக்கதாக ஆக்குவது ஊடகவியலாளர்களேயாவர். தமக்கு எதிராக எழுதுகிறார்கள் என்பதற்காக கறுப்பு, வெள்ளை என்று லேபல் ஒட்டப் போனால் அந்தப் பிரச்சினை முடிவடையக் கூடிய ஒன்றல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



யாழ்.மிருசுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் போதைவஸ்து ஒழிப்பு வாரஇறுதிநாள் நிகழ்வின் போது...



யாழ்.சண்டிலிப்பாய்வடக்குதமிழ்க்கலவன்பாடசாலையில் தரம் ஒன்றிற்கு மாணவர்களை இணைத் துக்கொள்ளும்கால் கோள் விழா அண்மையில் அதிபர் க.கார்த்திகேயன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்வி பணிமனையின் ஆசிரிய ஆலோசகர் திருமதி சு.கந்தகுமார் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையான வாழ்வைத் தொலைக்காதீர்கள்

## போதைப்பொருள் குறித்து பொலிஸார் விழிப்புணர்வு

(சாவகச்சேரி)

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி இளமையான வாழ்வைத் தொலைக்காதீர்கள் என தென்மராட்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தசநாயக்க பாடசாலை மாணவர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

கடந்த புதன்கிழமை நாவற்குழி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மது உள்ளிட்ட போதைப்பொருள் பாவனைகளில் பாடசாலை மாணவர்கள் ஈடுபடாமல் இருக்க 45மணி நேரம் விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்துமாறு ஜனாதிபதியால் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மதுபானம்,புகையிலை மற்றும் போதைப்பொருட்களுக்கு அடிமையாகாமல் இருப்பதே ஆரோக்கியமான வாழ்விற்கு வழிவகுக்கும்.

அவ்வாறு அடிமையானவர்களை உரிய சிகிச்சைகள் மூலமாக குணப்படுத்த முடிவதோடு, முற்றுமுழுதாக போதைப்பாவனையில் இருந்து அவர்களை விடுவிக்கவும் முடியும்.

எந்தவொரு நாட்டிலும் போதைப்பொருள் மற்றும் புகையிலைப் பொருட்களை ஒட்டுமொத்தமாக ஒழிக்க முடியாது. காரணம் இதனை வியாபாரமாக பலர் செய்து வருகின்றனர்.

ஆனால்பாடசாலைமாணவர்கள் மூலமாக போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த முடியும். பாடசாலை மாணவர்கள் பாடசாலையை சுற்றியுள்ள மற்றும் பாடசாலை வளாகத்திற்குள் இடம்பெறுகின்ற போதைப்பொருள் பாவனையை ஒழிக்க பொலிஸாராகிய எமக்கு உதவி செய்ய வேண்டும்.

போதைப்பொருட்களைப் பாவிப்பதன் மூலம் தேவையற்ற நோய்கள் தொற்றிக் கொள்வதுடன்,உடல் மற்றும் முக அழகும் கெட்டுப் போகும்.

அத்துடன் மன நோய்க்கு ஆளாகி ,எதிர்நோக்க முடியாத சுகாதாரப் பிரச்சினைக்கும் முகம்கொடுக்க வேண்டிவரும். இன்று எனக்கு 55வயது.

ஆனால் தேக ஆரோக்கியத்துடன் காணப்படுகிறேன். அதற்கு ஒரே காரணம் நான் எந்தவொரு போதைப் பொருளையும் இதுவரை பாவிக்கவில்லை.

ஒரு போதும் மாணவச் செல்வங்களாகிய நீங்கள் மது மற்றும் போதைப்பொருட்களைப் பயன்படுத்தாதீர்கள். ஒருவேளை உங்கள் பெற்றோர் அதனைப் பாவித்தால் அவர்களுக்கு எதிராகச் செயற்படுங்கள்.

இதனால் ஏற்படும் பின்விளைவுகளை எடுத்துக் கூறுங்கள். சிலர் கொண்டாட்ட நிகழ்வுகளில் புகையிலை மற்றும் மது சம்பந்தப்பட்ட பொருட்களை பாவிக்கின்றனர்.அதனை முற்றுமுழுதாகத்தவிருங்கள் போதைப் பொருட்களால் எந்தப் பிரியோசனமும் இல்லை.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளில் அதிகமானவை போதைப் பொருள் சம்பந்தப்பட்டவை தான்.

பொதுமக்களை பாதுகாக்கும் பொறுப்பு பொலிஸாருக்கு உண்டு. பாடசாலை மாணவர்களாகிய நீங்கள் போதைப்பொருள் பாவனை தொடர்பில் பொலிஸாருக்கு நேரடியாக தெரிவிக்க இயலாத சந்தர்ப்பத்தில் பாடசாலையில் உள்ள அபிப்பிராயப் பெட்டியில் எழுத்து மூலமாக தெரிவியுங்கள்.

அதிபர் ஊடாக நாம் அதனைப் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்வோம். சட்டத்தினூடாக முழுமையாக போதைப்பொருளை ஒழிக்க இயலாது.

ஆனால்பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஊடாக போதைப்பொருட்களைக் கட்டுப்படுத்த இயலும்.

போதைப்பொருட்களை பயன்படுத்தாதவர்கள் சந்தோசமாகவும், நிம்மதியாகவும்,தேக ஆரோக்கியத்துடனும் காணப்படுகின்றனர் என மேலும் அவர் தெரிவித்தார். (இ-30)

## வாகன இலக்கத்தகடுகள்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள தலைமை அலுவலகத்திலிருந்து 2019. 01.24 ஆம் திகதி யாழ்.அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திலும் பொது மக்களின் பார்வைக்காக அறிவிப்பு பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள பிரதி ஆணையாளர் வை.பரம்தாமன் அறிவித்துள்ளார்.

AAC-7452, AAD-0165, AAD-0173, AAD-0189, AAD-0192, AAE-3135, AAE-9637, AAG-4002, AAJ-1360, AAK-4102, AAP-2018, AAP-3220, AAT-5190, AAY-2766, ABH-5656, ABI-3326, ABO-5172, ABS-7267, ABS-7279, ABS-7363, ABS-7488, ABS-7492, ABS-7507, ABS-7537, ABS-7579, ABS-7609, ABS-7640, ABS-7651, ABS-7659, ABS-8020, ABS-8029, ABS-8049, ABS-8358, ABS-8362, ABS-8515, ABS-8553, ABS-8728, ABS-8798, ABS-8856, ABS-8867, ABS-9066, ABS-9159, ABS-9187, ABS-9215, ABS-9218, ABS-9411, ABS-9493, ABS-9687, ABS-9702, ABS-9722, ABS-9728, ABS-9752, ABS-9761, ABT-1333, ABT-2329, ABT-3131, ABT-4973, ABT-6465, BAH-4809, BAK-8195, BAM-5827, BAO-7494, BAP-5201,BAP-9408, BAW-3944, BAX-5749, BBF-0669, BBL-1074, BBS-3180, BBU-1989, BBW-4782, BCC-1432, BCL-8215, BCO-1863, BCO-1880, BCO-5466, BCR-3768, BCX-9313, BCY-8532, BCY-8795, BDB-3281, BDC-2606, BDG-3265, BDU-1285, BDZ-5013, BEA-8933, BEB-9139, BEH-3981, BEI-6958, BEJ-6597, BER-7890, BET-8681, BEU-4876, BEY-7479, BEY-7838, BFA-3382, BFF-1708, BFV-2741, BGB-1465, BGQ-2530, BGQ-4545, BGX-8527, BGX-8973, BHH-4782, CAB-3319, CAC-1413, CAD-0909, CAD-5112, CAD-8303, CAF-2377, CAF-5144,CAH-0141, CAI-5749, CAI-7478, CAJ-5207, CAK-9042, CAN-6481, CAN-9947, CAP-9158, CAQ-3173, CAQ-4808, CAR-3610, CAR-7026, CAR-9209, CAU-4768, CAB-3141, CAB-4690, CBB-1050, DAC-3572, DAC-7458, EA-0163, GB-6770, GB-8087, GC-9033, GD-0266, GE-6455, GE-7415, GG-9953, GI-2091, GI-7626, GI-8851, GJ-0885, GJ-2886, GK-1694, GK-1797, GL-8927, GN-0239, GN-5424, GO-0958, GO-5573, GO-6261, GO-8446, GO-8807, GP-5114, GP-7734, GQ-0907, GQ-2153, GQ-2545, GR-9468, GS-7200, GS-9455, GT-0161, GT-9902, GV-2895, GV-3473, GV-4762, GW-5090, GY-3862, GZ-7034, GZ-7432, HA-1534, HB-7470, HB-9333, HD-8170, HE-6885, HE-7303, HE-8047, HF-4141, HF-4949, HG-0539, HG-0539 (STICKER ONLY) HH-0967, HH-0992, HH-2549, HH-6116, HH-2806, HK-0854, HK-5979, HL-1694, HM-6786, HN-2284, HN-3530, HO-5867, HO-7961, HQ-7961, HQ-4446, HQ-6017, HQ-9888, HS-1556, HS-7201, HT-3742, HT-9320, HT-9590, HV-0168, HV-4581, HX-6381, JB-2664, JB-8739, JC-2732, JC-3632, JC-6391, JD- 9995, JE-3754, JF-9247, JI-6291, JJ-0151, JJ-6332, JM-6334, JN-6177, JN-7608, JP-1897, JP-5711, JS-5271, JS-8019, JS-8292, JT-6812, JU-9396, JW-0872, JW-3461, JW-3549, JW-6159, JX- 3848, JX-4359, JX-7012, JX-9412, JY-1429, JY-3511, JZ-8222, JZ-8505, KA-1815, KA-2115, KA-6177, KB-6606, KB-6652, KD-0036, KE-9862, KF-1200, KF-8539, KH-2519, KI-0403, KI-2025, KJ-8069, KK-4787, KK-5199, KK-5668, KL-7152, KM-3303, KP-5576, KR-9030,KU-4165, kV-2701, KW-2673, KX-8178,LC-1587, LC-5694, LD-1341, LE-4966, LF-7055, LG-3875, LG-5787, LG-9622, LX- 7654, LI-9155, LI-9191, LJ-0352, LJ-1829, LJ-4595, LJ-5545, LK-5000, LL-7527, LM-4780, LM-8986, LW-0145, LW-1115, MA-9309, NC-0485, NC-2703, NC-9616, MC-9680, ME-1097, ME-7172, MH-5249, MK- 2124, ML-9108, MM- 1945, MS-6336, MS-6525, MT-6503, MT-7455, MX-0766, MX-1355, MX-1749, MX-2776, MZ-8462, NA- 3499, NB-2419, NB-4389, NB-5299, NB-5777, NC-5871, PA-2935, PB-3106, PB-3598, PB-3945, PB-8524, PC-1558, PC-3340, PC-4285, PC-4582, PD-2513, PD-3330, PD-4232, PE-3360, PE-6447, PE-6775, PE-8403, PE- 9389, PF-1320, PF-5144, PG-6466, PI-4555, PK-1254, PP-9752, PQ-0756, PR-7486, PR-9965, PS-6641, PT-5309, PU-5593, PU-6823, PV-3068, PW-9551, PX-4387, PX-5279, QA-2774,QA-6676, QA-8332, QB-1106, QB-1488, QB-5383, QB-8169, QB-8246, QC-0419, QC-1035, QC-3890, QC-4426, QD-1008, QD-2974, QD-4952, QD-9755, QE- 0368 , QE- 9231, QF- 4120, QF- 5509, QF- 9654, QG-4490, QH-2699, QH-5630, QH-6768, QI- 4461, QI-7623, QJ-2611, QJ-5362, QL-0138, QR-5568, QU-1074, RA-0245, RA-0761, RA-4623, RB-4637, RB-4641, RB-4642, RB-4658, RB- 4660, RB-4666 , RB- 4667, RB-4670, RC-7066, RD-0111, RD-4359, RD-8762, RE- 9133, RV-8441, RV- 8449, RV-8452, RV- 8459, RV-8467, RV- 8532, RV-8539, RX- 9540 , SK-7794, SO-7118, TD- 5597, TE- 1340, TE- 2198, TH-6345, TL- 9810, TN-5742, TW- 2098, TX-0919, TZ- 3594, UD-1846, UL- 7219, UL-7300, UN-4130, UP-2741, UP-9652, UW-5340, UY- 3571, VA-4936, VC- 5571, VD-2150, VD- 4398, VF-2062, VF- 2184, VF-2185, VF- 2187, VF-2188, VJ-5693, VM-3230, VM- 4205, VM-6463, VP- 4825, VR-7315, VR- 9541, VV-7031, VX- 2582, VY-3672, VZ-0200, WA-3481, WD-9315, WE-7969, WF-1042, WF-1347, WF-3596, WF-3768, WG-8383, WG-9448, WH-2473, WH-9222, WJ-8367, WN-2859, WM-3816, WM-4228, WO-2970, WP-8525, WQ-9884, WT-5412, WY-1688, WZ-0041, XA-9249, XB-0529, XB-3967, XD-8437, XI-0765, XI-0845, XK-1962, XN-7262, XO-3740, XR-2839, XR-9769, XZ-6449, YA-6999, YD-4509, YF- 4762, YL-7962, YN-3194, YN-3513, YP-8627, YQ-4277, YW-1991, YX-1922. (இ)

## படைப்புழுவை கட்டுப்படுத்தும் அலுவலர்களுக்கு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் படைப்புழுவைக் கட்டுப்படுத்தும் மாவட்ட அலுவலர்களுக்கான செயலமர்வு நாளை 29 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வடமாகாணப் பிரதம செயலாளர் தலைமையில் இடம்பெறும். (இ-10)

## பேருந்து தரிப்பிட திறப்பு



(யாழ்ப்பாணம்)

நுணாவில் மத்தி கிராம மக்களும், முதியோர் சங்கமும் இணைந்து நுணாவில் மத்தி ஏ9 வீதியில் அமைத்த பேருந்து தரிப்பிட திறப்பு விழா கடந்த 21ஆம் திகதி தைப் பூச தினத்தன்று இடம் பெற்றது.

ஓய்வுநிலை அதிபரும், முதியோர் சங்க உறுப்பினருமான க.அருந்தவபாலன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன்,சாவகச்சேரி நகர சபை செயலாளர் க.சண்முகதாசன், சமூகசேவை உத்தியோகத்தர் க.சண்முகநாதன்,நுணாவில் மத்தி முன்னாள் கிராம அலுவலர் திருமதி த.பானுஷா, நுணாவில் மத்தி கிராம அலுவலர் ச.ஞானசேந்தன்,பொருளாதார உத்தியோகத்தர் திருமதி வி.சற்குணமாலா, சமுர்த்தி உத்தியோகத்தர் மா.ஜெகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (7-30)

## பொது இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டுவோர் மீது நடவடிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பொது இடங்களான பஸ் தரிப்பிடங்கள், ஆலய மதில்கள், பாடசாலை மதில்கள், வீதி பெயர்ப்பலகைகள், வீதி சமிக்ஞை குறியீடுகள் மற்றும் சனசமூக நிலைய சுவர்கள் ஆகியவற்றில் சுவரொட்டிகள் ஒட்டுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் ம.நடனதேவன் சாவகச்சேரி நகர சபைத் தவிசாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் வீதி ஓரங்களில் காணப்படும் நிழல் மரங்களில் ஆணி அறைந்து விளம்பரப் பதாகைகள் காட்சிப்படுத்துவதனையும் தடை செய்ய வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள் நகரசபை எல்லைக்குள் இடம்பெறாமல் இருக்க சாவகச்சேரி நகரசபையினர் விரைந்து நடவடிக்கை எடுப்பதோடு, நகரசபையின் உத்தரவை மீறிச் செயற்படுவோர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவும் வேண்டும் என மேலும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (7-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் போராளிகளின் குடும்பங்களுக்கு உதவி

நீலன் அறக்கட்டளையின் நிதியுதவியில் புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியினால் நேற்றைய தினம் புதுக்குடியிருப்பில் புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலை புலிகள் கட்சியின் தலைமையக திறப்பு விழா நிகழ்வில் 51 பொது மக்கள், முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதனுடன் 40 வரையான மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமைச் செயலகம் புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரம் வேணாவில் பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மதகுருமார், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள், நீலன் அறக்கட்டளையின் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-272)




# கேப்பாபிலவு காணி விடுவிப்பு

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. வடக்கு ஆளுநருடன் சந்திப்பு





கேப்பாபிலவு காணி விடுவிப்பு மற்றும் மக்களின் கோரிக்கை தொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வடக்கு மாகாண் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அரசு தரப்பில் எத்தகைய முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாத நிலையில் பொறுமையிழந்துவிட்ட மக்கள், தமது போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தும் வகையில் கைக்குழந்தைகளுடன் வீதியில் இறங்கி குறித்த இராணுவ முகாமின் பிரதான நுழைவாயிலுக்கு முன் பாக அமுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கேப்பாபிலவு மக்களின் காணி விடுவிப்பு தொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண ஆளுநர் கலா நிதி சுரேன் ராகவனை ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, அம்மக்களின் காணிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி அளித்துள்ள வாக்குறுதி மீறப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

இவ்விடயம் தொடர் பாக ஜனாதிபதிக்கு தெரிவித்து கேப்பாபுலவு மக்களின் காணிகளை விடுவிக்க ஏற்பாடு செய்யுமாறு வலியுறுத்தினார்.

இக்கோரிக்கைக்கு பதிலுரைத்த ஆளுநர், ஜனாதிபதி தற்சமயம் வெளிநாடு சென்றுள்ளார். அவர் நாடு திரும்பியவுடன் காணி விடுவிப்பு தொடர்பாக அவருடன் பேசி சாதகமான ஒரு பதிலை தருவதாக தெரிவித்துள்ளார்.

இதன்பின் நிலமீட்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கேப்பாபிலவு மக்களை சந்தித்த சிவசக்தி ஆனந்தன் எம்.பி,

தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் கடந்த நான்கு வருடங்களாக அரசாங்கத்திற்கு வழங்கி வரும் நிபந்தனையற்ற ஆதரவுக்கு கிடைத்த பரிசே நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் நிறுவப்பட்டுள்ள புத்தர் சிலையும், செம்மலை பிரதேசத்தில் நிர்மாணம் செய்யப்பட்டுள்ள பௌத்த விகாரையும் என்று விசனம் தெரிவித்தார். (2-250)

## புதையல் தோண்டிய நபர் கைது உபகரணங்களும் கைப்பற்றல்

### ஏழு பேர் தப்பியோட்டம்



(குருமன்காடு)

வவுனியா, பூவரசங்குளம் பொலிஸாரினால் புதையல் தோண்டிய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, பூவரசங்குளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து வவுனியா செக் கட்டிப் புலவு, குஞ்சுக்குளம் வயல் வெளியில் புதையல் தோண்டிய 38 வயதான குளியாப்பிட்டியை சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன் போது புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய கில்ட்டி, மின்பிறப்பாக்கி, குழி தோண்ட பயன்படும் பொருட்கள், மண் அகழ்வதற்கான உபகரணங்கள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை இப்புதையல் தோண்டிய ஏனைய ஏழு பேர் பொலிஸாரின் சுற்றிவளைப்பில் தப்பித்து சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை வவுனியா பூவரசங்குளம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (2-250)

## போதைப்பொருள் எதிர்ப்பு பேரணி



(கிளிநொச்சி)

"போதையற்ற நாடு" என்ற தொனிப்பொருளில் தேசிய போதைப்பொருள் தடுப்பு செயற்றிட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பாடசாலை மட்டத்திலான போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சி திட்டத்தின் ஐந்தாம் நாளாகிய கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கிளி/ கிளாலி றோ.க.த.க பாடசாலையின் மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் இணைந்து போதைப்பொருள் எதிர்ப்புப் பேரணி ஒன்றினை கிளாலி உபஅஞ்சல் அலுவலகத்தின் முன் ஆரம்பித்து பேரணியாக பாடசாலையை சென்றடைந்தனர். அங்கு போதைப் பொருளை ஒழிப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்படுவோம் என்ற உறுதி உரையுடன் பேரணி நிறைவு பெற்றது. (2)

## முகாமைக் குழுக்கூட்டம்

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் மாதாந்த (தை-2019) முகாமைக் குழுக்கூட்டம்தலைவர்பொன். நித்தியானந்தம் தலைமையில் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு சிறுவர் இல்ல கேட்போர் கூடத்தில் இறை வணக்கத்துடன் ஆரம்பமானது.

வட மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) ஆர். பத்மநாதன் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதில் முக்கிய தீர்மானங்களும் செயற்றிட்டங்களை அமுலாக்கும் விடயங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. (2)

## மாணவர்களுக்கு காலணிகள்



(குருமன்காடு)

சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் அதிகஷ்ட பிரதேசத்தில் அமைந்துள்ள மு/தேறாங்கண்டல் அ.த.க பாடசாலையில் கல்வி பயிலும் 228 மாணவர்களுக்கு காலணிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த காலணிகளுக்கான நிதியை லண்டன் கற்பகபதி கற்பக விநாயகர் ஆலய நிர்வாகத்தினர் மற்றும் லண்டன் உயர்வாசற் குன்று முருகன் ஆலய நிர்வாகத்தினர் வழங்கியிருந்தனர்.

இந் நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் பாடசாலை அதிபர் பி.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் சிவ.கஜேந்திரகுமார், இலங்கை கிளையின் தலைவர் மயூரக்குருக்கள், சமூக செயற் பாட்டாளர் திலகநாதன் கிந்துஜன், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்து மாணவர்களுக்கான காலணிகளை வழங்கி வைத்தனர். (2-250)

## உத்தரதேவிக்கு வவுனியாவில் வரவேற்பு பாடசாலை உபகரணங்களுடன் பயணித்தது



(குருமன்காடு)

இந்திய-இலங்கை நல்லிணக்க உறவின் கீழ் வழங்கிவைக்கப்பட்ட "உத்தரதேவி புதிய புகையிரத மானது" வடக்கிற்கான பயணத்தை நேற்று ஆரம்பித்தது. குறித்த புகையிரதம் வவுனியா புகையிரதத்தைச் சென்றடைந்த போது வரவேற்பு அளிக்கப்பட்டது.

காலை 6 மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து புறப்பட்ட உத்தரதேவி புகையிரதம் பிற்பகல் 12.15 மணியளவில் வவுனியா புகையிரத நிலையத்தை அடைந்தது. இதனை புகையிரத நிலைய உத்தியோகத்தர்கள், மக்கள் வரவேற்றனர். இருப்பினும் புகையிரதம் நிறுத்தப்படாது யாழ்.நோக்கி பயணத்தை ஆரம்பித்தது.

இதில் யாழ்.மாணவர்களுக்கான புத்தகப் பைகள், அப்பியாசக் கொப்பிகள் உள்ளிட்ட பாடசாலை உபகரணங்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், போக்குவரத்து அமைச்சின் உயர்மட்ட குழுவினரும் பயணத்தை மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை, வாயு சீராக்கி வசதி கொண்ட முதலாம் வகுப்பு பெட்டியும், இரண்டாம் வகுப்பு பெட்டியும் இப் புகையிரதத்தில் அடங்குவதுடன், 724 பயணிகள் ஒரே நேரத்தில் பயணிக்கக் கூடியதாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## அறிவியல் நகர் புகையிரத நிலையம் மக்கள் பயன்பாட்டிற்கு கையளிப்பு

### உத்தரதேவி புகையிரதம் முதலில் தரித்து சென்றது

கிளிநொச்சி அறிவியல் நகரில் புதிதாக அமைக்கப்பட்ட புகையிரத நிலையம் மக்கள் பயன்பாட்டிற்காக கையளிக்கப்பட்டது. நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் கொழும்பில் இருந்து புறப்பட்ட உத்தரதேவி புகையிரதம் முதல் முதலாக குறித்த புகையிரத நிலையத்தில் தரித்துச் சென்றுள்ளது.

குறித்த புகையிரதத்தில் வருகை தந்திருந்த அமைச்சர் அர்ஜுன ரணதுங்க வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், யாழ்.இந்திய துணைத்தூதுவர் ஆகியோர் வரவேற்றனர். தொடர்ந்து தேசிய கொடி ஏற்றி வைக்கப்பட்டது. அமைச்சர் நினைவு கல்லினை திறந்து வைத்தார். தொடர்ந்து கட்டடத்தை திறந்து வைத்த அமைச்சர் பிரயாண சீட்டினையும்வழங்கிவைத்தார்.

குறித்த நிகழ்வில் அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர், யாழ்.இந்திய துணைத்தூதுவர், கிளிநொச்சி,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

தொடர்ந்து வடக்கு மாகாண ஆளுநர் தமிழ் மற்றும் சிங்களத்தில் கருத்துக்களைத் தெரிவித்தார். தொடர்ந்து அமைச்சரும் கருத்து தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து அமெரிக்க விமானம் தொடர்பான தகவலை அமைச்சரிடம் வினவியபோது. குறித்த விடயம் தொடர்பில் அறிந்திருக்கவில்லை நீங்கள் கூறிய இவ்விடயம் தொடர்பில் தான் ஆராய்வதாகவும் அவர் தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் வழமைக்கு மாறாக கடும் குளிருடன் பனிமூட்டம்



(மன்னார்)

மன்னார் பெரு நிலப் பரப்பில் வழமைக்கு மாறாக வெண்பா பனி என அழைக் கப்படும் பனி படலம் கடந்த சில நாட்களாக அதிகரி த்து காணப்படுகின்றது.

காலையில் தொழில் அலுவலகம், பாடசாலை ஆகியவற்றுக்கு செல்கின்ற வர்கள் குறித்த வெண்பா பனிபடலத் தினாலும் அதீத குளிர் காரணமா கவும் பெரும் சிரமத்தை நோக்கி வருவதாகத் தெரி விக்கின்றனர்.

இப் பனிப்படலம் காலை 9, 10 மணிவரை காணப்ப டுவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

அத்துடன் இந்தப் பனிப் புகார் காரணமாக வீதிகள் முழுமையாக மூடப்படும் அளவிற்கு புகார் மண்ட லமாக காணப்படுகிறது.

இதனால் தூர இடங் களில் இருந்து பயணிக் கின்ற வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிளில் பய ணங்களை மேற்கொள் கின்றவர்கள் பெரும் சிரம த்தை எதிர் கொள்கின்ற னர். (2-285)




# விளையாட்டு மைதான அபிவிருத்திக்கு நிதியொதுக்கப்பட்டும் பயனில்லை



(மன்னார்)

மன்னார் பள்ளி முனை புனித லூசியா விளையாட்டு மைதான அபிவிருத்தி பணிக்கு நகர திட்டமிடல் அதிகார சபை 40 மில்லி யன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்தும் அபிவிருத்தி பணி கள் கடந்த 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட் டுள்ள போதும் சுமார் 5 வருடங் கடந்தும் குறித்த அபிவிருத்தி பணிகள் நிறைவடையாத நிலையில் காணப்படுவதாக பள்ளி முனை புனித லூசியா விளையாட்டுக்கழகத்தின ரும், கிராம மக்களும் கவலை தெரிவித்துள்ள னர்.

மன்னார் பள்ளிமுனை புனித லூசியா விளையாட்டு மைதானத்தின் அபிவி ருத்தி பணிகள் கடந்த 2014 ஆம் ஆண்டு நகர திட்ட மிடல் அதிகாரசபையின் நிதியுதவியுடன், மன்னார் நகர சபையூடாக அபிவி ருத்தி பணிகள் மேற்கொள் ளப்பட்டு வந்தன.

குறித்த நிதியில் விளை யாட்டு மைதானத்திற்கான சுற்று மதில் அமைத்தல், பார்வையாளர் அரங்கு அமைத்தல், மைதான த்தை சமப்படுத்தி மண் நிரப்புதல் மற்றும் மைதா னத்தில் புல் வளர்த்தல் உள்ளிட்ட அபிவிருத்தி பணி களுக்காக நிதியொதுக்கப் பட்டது.

எனினும் குறித்த மைதா னம் சமப்படுத்தப்பட்டு,பல இலட்சம் ரூபாய் செலவில் புல் வளர்த்த போதும் புற்கள் அனைத்தும் கருகிய நிலை யில் காணப்படுகின்றன.

மேலும் பார்வையாளர் அரங்கு அமைக்கப்பட்டுள் ளது. ஒதுக்கப்பட்ட 40 மில் லியன் ரூபாய் நிதி ஒதுக் கீட்டில் அபிவிருத்தி பணி கள் முழுமை பெறாத நிலை யில் சுமார் 26 மில்லியன் ரூபாய் பணம் இதுவரை அபிவிருத்திக்காக செலவு செய்யப்பட்டுள்ளது.

எனவே உரிய அதிகா ரிகள் தலையிட்டு குறித்த அபிவிருத்தி பணியை முழுமை பெற நடவடிக்கை களைமேற்கொள்ளவேண்டும் என கோரிக்கை முன்வை க்கப்பட்டுள்ளது. (2-281)

# சட்டவிரோத முதிரை மரக்குற்றிகள் கடத்தல் சேமமடுவில் முறியடிப்பு



(குருமன்காடு)

வவுனியா மாமடுவ பகுதியில் நேற்று முன் தினம் இரவு 10மணியள வில் சட்டவிரோதமாக முதிரை மரக்குற்றிகளை கடத்த முற்பட்டவர்களை பொலிஸார் கைது செய் துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா மாமடு பகு தியில் பட்டா ரக வாகனத் தில் முதிரை மரக்குற்றி களைக் கடத்துவதாக மாம டுவ பொலிஸாருக்கு கிடை த்த இரகசிய தகவலின் அடிப்படையில் மாமடுவ பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி எஸ்.கெ.செனரத் தலைமையிலான பொலிஸா ரினால் சேமமடு பகுதியில் வைத்து முதிரை மரக்குற் றிகளை கடத்த பயன்படுத் தப்பட்ட பட்டாரக வாகன த்தையும், பட்டா ரக வாகனத் தின் சாரதி உட்பட நால்வரை யும் கைது செய்துள்ளனர்.

13 முதிரை மரக்குற் றிகள் கைப்பற்றப்பட்டுள் ளதாகவும் குறித்த மரக் குற்றிகளையும், வாகனத் தையும், சந்தேக நபர்க ளையும் வவுனியா மாவ ட்ட நீதவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கான ஏற் பாடுகளை முன்னெடுப்ப தாக மாமடுவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (2-250)

# வீடொன்றில் கள்ளச்சாராயம் வடித்த மூவர் கைதாகினர்

## கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள் மீட்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு சுதந்திர புரம் கொலணி பகுதியில் பாவனைக்கு வீடு ஒன்றில் கள்ளச்சாராயம் வடிப்பதாக புதுக்குடியிருப்பு பொலிஸா ருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதற்கமைய நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி எம்.ஏ.சந்திரபால தலைமையிலான குழுவி னர் குறித்த பகுதிக்கு சென்று சோதனை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்கள்.

இதன்போது கசிப்பு காய்ச்சும் நடவடிக்கையில் ஈடுபட்டமூவரை கையும் களவுமாக பிடித்ததுடன் அவர் களிடம் இருந்த கசிப்பு காய்ச் சுவதற்காக பயன்படு த்தப்பட்ட பொருட்கள் உள் ளிட்ட 5 பெரல் கோடா, 20 லீற் றர் கசிப்பு என்பனவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சுதந்திரபுரம் கொலணி பகுதியில் மக்கள் நடமாட் டமற்ற வீடுகளை பயன்ப டுத்தி சட்டவிரோத செயல் கள் அதிகரித்து வருவதாக மக்கள் குற்றம் சாட்டியுள் ளார்கள்.

இந்நிலையிலேயே இவ் வாறான மக்கள் நடமாட் டமற்ற வீட்டை பயன்படுத்தி சட்டவிரோத கசிப்பு காய்ச்சும் நடவடிக்கையில் ஈடுபட்ட மூவரையும் கைதுசெய்து சட்டநடவடிக்கைக்கு உட்ப டுத்தியுள்ளதாக புதுக்குடி யிருப்பு பொலிஸார் தெரி வித்துள்ளார்கள். (2-281)

# பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவி



(பனிக்கன்குளம்)

மாணவர்களின் கல் விச் செயற்பாடுகள் தடையி ன்றி முன்னெடுக்கப்படும் வகையில், கற்றலுக்கான உதவிகளை வழங்கும்செயற் றிட்டத்தை, கல்வி, பொரு ளாதார அபிவிருத்தி அமை ப்பு (FEED) ஆரம்பித்துள்ளது.

இதன் செயற்றிட்டத்தின் தொடர்ச்சியாக அண் மையில் கிளிநொச்சி மாவட் டத்தில் வறுமையாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப் பட்ட செல்வா நகர் கிராமத் தின் அரசினர் தமிழ்க் கல வன் பாடசாலையின் 255 மாணவர்களுக்கு ஒரு இல ட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உப கரணங்கள் வழங்கி வைக் கப்பட்டுள்ளன. (2-281)

# மன்னார் மறை மாவட்டம் உதயமாகி 38 வருட நிறைவு விழா தோட்டவெளியில்



(மன்னார்)

மன்னார் மறை மாவட் டம் உதயமாகி 38 ஆண்டு விழாவும் மன்னார் வேத சாட்சிகளின் 475ஆம் ஆண்டு யூபிலி ஆரம்ப விழாவும் நேற்றுமுன்தி னம் இறை வழிபாட்டுடன் மன்னார் தோட்டவெளி வேதசாட்சிகளின் அன்னை ஆலயத்தில் கொண்டா டப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானு வேல் பெர்னாண்டோ ஆண்டகையின் அழை ப்பின் பேரில் திருமலை மறைமாவட்ட ஆயர் மேதகு நோயல் இம்மானு வேல் ஆண்டகை தலை மையில் மன்னார் தோட்ட வெளி வேதசாட்சிகளின் ஆலயத்தில் காலை 7.30 மணிக்கு கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன் வேதசாட்சிகளின் 475ஆம் ஆண்டு யூபிலி மற்றும் மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 38 ஆவது ஆண்டு நிறைவு சின்னம் மேதகு ஆயர் நோயல் இம் மானுவேல் ஆண்டகை யால் திரை நீக்கம் செய் யப்பட்டது.

இவ் விழாவின்போது மன்னார் மறைமாவட் டத் திலுள்ள ஒவ்வொரு பங்குத் தளங்களும் இவ்வாண்டு மேற்கொள்ள இருக்கும் மேய்ப்பு பணி திட்டங்களை பங்கு மேய்ப்புப்பணி சபை பிரதிநிதிகளால் ஆயர் முன் னிலையில் சமர்ப்பிக்கப் பட்டு அதற்கான ஆசீரையும் பெற்ற நிகழ்வும் இடம் பெற்றன. (2-285)



யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம் அண்மையில் வன்னி யில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு தொகை உலருணவுப் பொருட்களை கிளி/கண்டாவளை பிரதேச செயலாளர் ஊடாக வழங்கியுள்ளது.

# இலவச கல்வி நிலையம் திறப்பு

(பூநகரி)

பூநகரி செம்பன்குண்டு பகுதியைச் சேர்ந்த பல்லாய், தெளிகலை, காவாக்குளம் ஆகிய கிராமங்களிலுள்ள மாணவர்களின் கற்றல் வசதியை மேம்படுத்துமுக மாக பூநகரி வாடியடி நகர் வர்த்தகர் ஒருவரின் ஏற் பாட்டில் அவரது சொந்த நிதியில் மாலை நேர இல வச கல்வி நிலையமொன்று [illegible] டது.

இவ் ஆரம்பவிழாவில் கலந்து கொண்ட 50 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு வர்த்தகர் நி.தர்சனால் புத் தகப் பைகளும் கற்றல் உப கரணங்களும் வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

வாரத்தில் 5 நாட்களு க்கு மாலை நேர வகுப்பு உரிய நேரசூசியின் படி நடைபெறவுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

அதிகளவான பெற்றோர் களும் நலன் விரும்பிக [illegible] கலந்து [illegible]னர். (2-84)

# தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நாளை

(பூநகரி)

பூநகரி பிரதேச சபை யின் பொது நூலக தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நாளை 29 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பூநகரி நகர்ப்பகுதியில் இரு ந்து வாசிப்பு மாத நடை பவனியுடன் ஆரம்பமாக வுள்ளது. பிரதேசசபை தவி சாளர் அ.ஐயம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு யாழ். மாவ ட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் சி.சிறிதரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் பூங்கதிர் இதழ் 6 ஆவது வெளியீடும் பரிசளிப்பு விழாவும் இடம் பெறுமென அறிவிக்கப்பட்டு ள்ளது. (2-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

### பிரதமர் மோடி வருகைக்கு எதிர்ப்பு

# வைகோவின் தலைமையில் கறுப்புக்கொடி ஏந்திப் போராட்டம்

## 350 பேர் கைது





(மதுரை)

பிரதமர் மோடி வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து கறுப்புக் கொடியுடன் ஆர்ப்பாட்டம் நடத்திய ம.தி.மு.கவினர் உட்பட 350 பேர் கைது செய்யப்பட்டனர்.

தமிழகத்துக்கு எதிராகவும், தமிழக மக்களின் நலனுக்கு எதிராகவும் பிரதமர் மோடி செயற்பட்டு வருகிறார். தமிழக மக்களை வஞ்சிக்கும் அவர் மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அடிக்கல் நாட்டு விழாவுக்கு வரும்போது எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் ம.தி.மு.க. கறுப்புக் கொடி காட்டி போராட்டத்தில் ஈடுபடும் என்று வைகோ அறிவித்தார்.

அறிவிப்பை தொடர்ந்து மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகே உள்ள கட்டபொம்மன் சிலை அருகே நேற்றுக்காலை முதலே ம.தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கைகளில் கறுப்புக்கொடியுடன் திரண்டனர்.

அதைத்தொடர்ந்து சிறிது நேரத்தில் வைகோ அங்கு வந்தார். உடனே தொண்டர்களும், நிர்வாகிகளும் "தமிழக மக்களை, வஞ்சிக்கும் மோடியே திரும்பிப்போ" என்று கோஷம் எழுப்பினர். கறுப்பு நிற பலூன்களையும் பறக்க விட்டனர்.

அப்போது பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் துணை ஆணையர் அசோகன் உங்களுக்கு போராட்டம் நடத்த அனுமதிக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது. இங்கிருந்து கலைந்து செல்லுங்கள் என்று எச்சரித்தார். அதற்கு வைகோ பிரதமர் மோடி மதுரையை விட்டு கிளம்பும் வரை இந்த இடத்தை விட்டு அகலமாட்டேன் என்றார்.

அந்த சமயத்தில் பொலிஸ் அதிகாரிகளை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தள்ளிவிட்டதாக தெரிகிறது. இதனால் தென் சென்னை மாவட்ட செயலாளர் சுப்பிரமணி, தூத்துக்குடி மாவட்ட செயலாளர் ரமேஷ் ஆகியோரை பொலிஸார் வலுக்கட்டாயமாக பேருந்தில் ஏற்றினர். அதைத்தொடர்ந்து வாக்குவாதம் நடந்தது.

பின்னர் வைகோவின் வேண்டுகோளுக்கு இணங்க மாவட்ட செயலாளர்களை பொலிஸார் விடுவித்தனர். அதன்பிறகு தொடர்ந்து போராட்டம் நடந்தது. இதில் வைகோ உரையாற்றினார். பின்னர் வைகோ உள்ளிட்ட ம.தி.மு.கவினர் 150 பேரை பொலிஸார்கைது செய்து பேருந்துகளில் ஏற்றி அழைத்துச் சென் றனர்.

அதேபோன்று திராவிடர் விடுதலைக்கழக தலைவர் கொளத்தூர் மணி, பெரியார் திராவிடர் கழகம் ராமகிருஷ்ணன், மே-17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி, தமிழ்ப்புலிகள் கட்சியின் நாகை திருவள்ளுவன் உள்ளிட்ட 200 பேரும் கைது செய்யப்பட்டனர். (7-8)

# இந்தோ...
# ...யற்கை...

## உயிரிழப்பு



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 60 ஆக உயர்ந்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தோனேசியா மலைகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்த பகுதியாகும். இதன் தெற்கு சுலவேசி மாகாணத்தில் கடந்த வியாழக்கிழமை கா... ள்ளது. வெள்ளத்... கள், பாலங்கள் ... மீட்புப் பணிக... வருகின்றன. ... யாவில் ஏற்பட்ட...



இந்தியாவின் 70 ஆவது குடியரசு தினம் நேற்று முன்தினம் டில்லியில் நடைபெற்றது.

# சிரிய அகதிகளுக்கு கட்டார் 50 மில்லியன் டொலர் உதவி

## ஐ.நா.பொதுச்செயலாளர் வரவேற்பு



(நியூயோர்க்)

சிரியா அகதிகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளை சேர்ந்த அகதிகள் மறுவாழ்வுக்காக கட்டார் நாட்டு மன்னர் 50 மில்லியன் டொலர் நிதி வழங்குவதாக அறிவித்துள்ளார்.

சிரியா நாட்டில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களின் படைகளுக்கும் இடையே கடந்த 2011-ம் ஆண்டு முதல் உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது.

இந்தப் போரினால் கடந்த ஆண்டில் சுமார் 5 இலட்சத்து 60 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். தற்போதைய நிலவரப்படி சுமார் 24 இலட்சம் பேர் அகதிகளாக பிற நாடுகளுக்கு இடம் பெயர்ந்து உள்ளனர்.

சிரியா அகதிகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளை சேர்ந்த அகதிகள் மறுவாழ்வுக்காக கட்டார் நாட்டு மன்னர் 50 மில்லியன் டொலர் (சுமார் ரூ. 355 கோடி) நிதி வழங்குவதாக அறிவித்துள்ளார்.

இந்த தாராள நிதி உதவிக்கு ஐ.நா. சபை பொதுச் செயலாளர் ஆன்டனியோ குற்ரேரஸ் வரவேற்றுள்ளார்.

இதுபற்றி அவர் சார்பில் ஐ.நா. சபை துணை செய்தி தொடர்பாளர் பர்கான் ஹக் கூறும்போது.

"இந்த நிதி உதவிக்காக கட்டார் நாட்டு மன்னருக்கும், அந்த நாட்டு மக்களுக்கும் நன்றிக்கடன் பட்டுள்ளதாக ஐ.நா. சபை பொதுச்செயலாளர் ஆன்டனியோ குற்ரேரஸ் தெரிவித்தார். (7-8)

# அமெ...
# வெனி...



(கரகாஸ்)

பனிப்போ... யல் நிலைப்... அமெரிக்காவி... மாறு வெனிசு... மதுரோ உத்த...

வெனிசுவெ... லஸ் மதுரோவ... சைகள் மற்று... ட்டங்களால் நி... இந்த எதிர்ப்பு... ஜனாதிபதி தே...

எதிர்க்கட் சி... தேர்தலில், நிே... மீண்டும் ஜனா...

ஆனால், ... கட்சிகள், நிே... வேண்டும் என... வேண்டும் எ... றன. மதுரோ... மற்றும் ஆதர... பல்வேறு புகு...

ஜனாதிபதி... ணுவத்தில் உ... யில்ஈடுபட்டு... வந்து பேரா...

# அணை உடைந்து 35 பேர் உயிரிழப்பு




(பிரேசிலியா:)

பிரேசிலில் அணை உடைந்து 35 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

150 பேரை காணவில்லை. இவர்களில் பலர் உயிரிழந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

பிரேசில் நாட்டில் புரு... மாடின்கோ நகரம் அருகே ஒரு தனியாருக்கு சொந்தமான இரும்புதாது சுரங்கம் உள்ளது.

அங்கு ஒரு அணை பயன்படுத்தப்படாமல் இருந்தது.

நேற்று முன்தினம் இரவு அந்த சுரங்கத்தில் நூற்றுக்கணக்கான ஊழியர்கள் வேலை பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென அந்த அணை உடைந்தது.

உடனே அதில் இருந்த தண்ணீரும், சேறும் வெள்ளமாக பெருக்கெடுத்து வெளியேறியது.

இச்சம்பவத்தில் இரும்பு தாது சுரங்கத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த 35 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இவர்கள் தவிர 150 பேரை காணவில்லை. இவர்களில் பலர் உயிரிழந்திருக்கலாம் என கருதப்படுகிறது.

எனவே பலி எண்ணிக்கை உயரும் அபாயம் உள்ளது. (7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தோனேஷியாவில் கையின் கோரம்

## ப்பு 60 ஆக உயர்வு



க்கிழமை காலை கடும் நிலச்சரிவு ஏற்பட்டு ளது. வெள்ளத்தினால் தென் சுலவே சியில் வீடு ள், பாலங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று ருகின்றன. இந்நிலையில், இந்தோனேசி ாவில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கிப் பலியானோர் எண்ணிக்கை 60 ஆக உயர்ந்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக அதிகாரிகள் தெரிவிக்கையில், ஒரே நாளில் 34 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இதனால் வெள்ளத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 60 ஆக உயர்ந்துள்ளது. (7-8)

# அமெரிக்காவில் உள்ள தூதரகத்தை மூட வெனிசுவெலா ஜனாதிபதி அதிரடி உத்தரவு





(கரகாஸ்)

பனிப்போரை வெளிப்படையான அரசியல் நிலைப்பாடாக மாற்றும் வகையில் அமெரிக்காவில் உள்ள தூதரகத்தை மூடுமாறு வெனிசுவெலா ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ உத்தரவிட்டுள்ளார்.

வெனிசுவெலாவில் அனாதிபதி நிகோலஸ் மதுரோவின் ஆட்சியில், அரசியல் சர்ச்சைகள் மற்றும் அரசுக்கு எதிரான போராட்டங்களால் நிலையற்ற தன்மை ஏற்பட்டது. இந்த எதிர்ப்புக்கு மத்தியில் கடந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டது.

எதிர்க்கட் சியால் புறக்கணிக்கப்பட்ட இந்த தேர்தலில், நிகோலஸ் மதுரோ வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியானார்.

ஆனால், இதனை ஏற்க மறுத்த எதிர்க்கட்சிகள், நிகோலஸ் மதுரோ பதவி விலக வேண்டும் என்றும், புதிய தேர்தலை நடத்த வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றன. மதுரோவுக்கு எதிரான போராட்டம் மற்றும் ஆதரவு போராட்டங்களால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் மோதல் வெடித்தது.

ஜனாதிபதி மதுரோவுக்கு எதிராக, இராணுவத்தில் உள்ள ஒரு குழுவினர் கிளர்ச்சியில் ஈடுபட்டதுடன், பொது மக்களையும் வீதிக்கு வந்து போராடும்படி அழைப்பு விடுத்தனர்.

அதன்பின்னர், போராட்டம் தீவிரமடைந்து பதற்றம் அதிகரித்துள்ளது.

மதுரோவுக்கு எதிராக நாடு தழுவிய அளவில் மிகப் பெரிய போராட்டம் நடைபெற்றது. இதில் போர் ச்சுகீசா, பரினாஸ், டாச்சிரா, கராகஸ், அமமேசானஸ் மற்றும் பொலிவார் மாநிலங்களில் நடந்த மோதல்களில் 25-க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் பாராளுமன்ற சபாநாயகர் ஜுவான் கெய்டோ, தன்னை நாட்டின் தற்காலிக ஜனாதிபதியாக நேற்று முன்தினம் பிரகடனம் செய்தார். அவருக்கு அமெரிக்கா, கனடா, ஆர்ஜெண்டீனா, பிரேசில், சிலி உள்ளிட்ட பல்வேறு நாடு கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

குறிப்பாக, ஜுவான் கெய்டோவை அதிகாரப்பூர்வமான வெனிசுவெலா ஜனாதிபதி என்று அறிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், நிகோலஸ் மதுரோ உடனடியாக பதவி விலகவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

ஆனால், எனது பதவிக் காலம் 2025 ஆம் ஆண்டு வரை உள்ளது. அதற்குள் நான் பதவியை விட்டு இறங்க மாட்டேன் என நிகோலஸ் மதுரோ திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

மதுரோ வுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆதரவு தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிலுள்ள வெனிசுவெலா தூதரகத்தை மூடுமாறு நிகோலஸ் மதுரோ நேற்று உத்தர விட்டுள்ளார். இதனால், வெனிசுவெலா-அமெரிக்கா இடையிலான விரிசல் மேலும் அதிகரிக்க தொடங்கியுள்ளது (7-8)

# பிலிப்பைன்சில் குண்டுவெடிப்பு முப்பது பேர் உயிரிழப்பு




(மணிலா)

தெற்கு பிலிப்பைன்ஸ் ஜோலோ தீவில் கத்தோலிக்க தேவாலயத்தை குறி வைத்து தாக்கப்பட்ட குண்டு வெடிப்பில் 30 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

தெற்கு பிலிப்பைன்சில் உள்ள தீவு ஜோலோ. இங்குள்ள ரோமன் கத்தோலிக் தேவாலயத்திற்கு அருகில் பயங்கர சத்தத்துடன் நேற்று குண்டு வெடித்தது. சிறிது நேரம் கழித்து அரசுப் படைகள் தங்கியிருந்த முகாம் அருகில் மற்றொரு குண்டு வெடித்தது. இதில் அரசுப் படைகள் மற்றும் பொதுமக்கள் என 19 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

காயமடைந்த 48 பேர் அருகில் உள்ள வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். "குண்டு வெடிப்பு நடைபெற்ற இடத்தில் பாதுகாப்பை அதிகரிக்கவும் பொதுமக்கள் கூடும் இடம், வழிபாட்டுத் தலங்களில் உச்சக்கட்ட பாதுகாப்பு வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்" என்று பாதுகாப்பு செயலாளர் தெரிவித்துள்ளார். இந்த தாக்குதலுக்கு எந்தவொரு அமைப்பும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. (7-8)

# லொறி விபத்தில் 13 பேர் மரணம்



(டாக்கா)

பங்களாதேஷ் நாட்டின் கம்மிலா மாவட்டத்தில் நிலக்கரி ஏற்றிச்சென்ற லொறி நிலைதடுமாறி கவிழ்ந்து செங்கல் சூளை தொழிலாளிகள் குடியிருப்பில் மோதிய விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர்.

நேற்றைய தினம் பங்களாதேஷ் நாட்டிலுள்ள கம்மிலா மாவட்டத்துக்குட்பட்ட நாராயண்பூர் கிராமத்தின் வழியாக நிலக்கரி ஏற்றிக் கொண்டு ஒரு லொறி வந்து கொண்டிருந்தது.

வீதியில் உள்ள ஒரு குறுகிய வளைவில் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த லொறி பக்கவாட்டில் கவிழ்ந்தது. கவிழ்ந்தவாறு புரண்டுச் சென்று அருகாமையில் உள்ள ஒரு தற்காலிக குடியிருப்பில் மோதியது.

அந்த தற்காலிக குடியிருப்பில் சுமார் 15 செங்கல் சூளை தொழிலாளிகள் உறங்கிக் கொண்டிருந்தனர். லொறி மோதியதில் 13 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். (7-8)

# பாகிஸ்தான் வீரர்களுடன் இந்திய குடியரசு தினம்



இந்தியாவில் 70ஆவது குடியரசு தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு இந்தியா- பாகிஸ்தான் எல்லையில் பணியில் ஈடுபட்டுள்ள பாகிஸ்தான் வீரர்களுக்கு இந்திய வீரர்கள் இனிப்பு கொடுத்து தமது மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டுள்ளனர்.

இந்திய எல்லைப் பாதுகாப்பு படையினர் சம்பிரதாய இராணுவ நிகழ்வுகளை நேற்று நடத்தியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இந்திய எல்லை பாதுகாப்பு படையின் தளபதி எம்.கே. ஜவா, பாகிஸ்தானின் விமான படைத்தளபதி உஸ்மானுக்கு இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு இனிப்புகள் அடங்கிய பெட்டிகளை வழங்கியுள்ளார்.

ஒவ்வொரு வருடமும் இந்தியாவில் கொண்டாடப்படும் சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினம் ஆகியவற்றின்போது எல்லையிலுள்ள பாகிஸ்தான் வீரர்களுக்கு இனிப்புகளை இந்திய இராணுவ வீரர்கள் பரிமாறி மகிழ்வது வழமையாகும்.

இதேவேளை இந்தியா முழுவதும் குடியரசு தின நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணத் தேர்தலை காலம் தாழ்த்துவது ஜனநாயக மறுப்பாகும்

## டக்ளஸ் எம்.பி.சுட்டிக்காட்டு



ஏற்கனவே மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு ஏற்பட்டிருந்த தாமதங்களின் பின்னர், இந்த நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அனைத்து கட்சிகளும் விரைவில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும் என்பதையே வலியுறுத்தி வருகின்றன.

இதற்கிடையில் புதிய அரசியல் யாப்பு என்கின்ற ஒரு வரைபு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அது தொடர்பில்நாட்டில் பல்வேறு கருத்து மோதல் நிலைகள் தோற்றுவிக்கப்பட்டு வருகின்றன. பௌத்த தேரர்களின் எதிர்ப்பலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற நிலைமை இன்று நாட்டில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

எமது மக்களின் வாக்குகளை அபகரித்து, நாடாளுமன்றப் பதவிகளை எட்டிப் பிடித்துக் கொண்ட தமிழ்த் தரப்பினர், வாக்களித்த எமது மக்களையே பாதுகாக்க திராணியற்ற நிலையில், நாட்டில் ஜனநாயகத்தைப் பாதுகாக்கப் போவதாகக்கூறிக் கொண்டு, இந்த ஆட்சியைக் காப்பாற்றி, அதன் மூலமாக தங்களது சுயநலன்களை நிறைவேற்றிக் கொண்டுவருவதோடு, எமது மக்களிடம் போய் 'எங்களிடம் கேட்டுத்தான் அமைச்சரவை தீர்மானங்கள் எடுக்கப்படும், நாங்கள் கூறித்தான் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எல்லாமே நடக்குமென' வீண் வம்பு பேசிக் கொண்டு, அதே வாயால் 'இந்த புதிய அரசியல் யாப்பு வரைபில் சமஷ்டி இருக்கிறது. அது ஒரு மித்த நாடு என்ற போர்வைக்குள் ஒளிந்துக் கொண்டு இருக்கிறது,' என்று, எமது மக்களுக்கு வெளிப்படைத்தன்மை அற்ற, ஒளிவு, மறைவு அரசியலை நடத்திக் கொண்டு, கோழி, ஒரேயொரு முட்டையை இட்டு விட்டு ஊர் முழுதும் கொக்கரித்துக் கொண்டு திரிவதைப் போல், கொக்கரித்துக் கொண்டு திரிவதால்தான் இன்று இத்தகைய எதிர்ப்பு நிலை சகோதர சிங்கள மக்களிடையே ஏற்பட்டிருக்கின்றது.

அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு, சுகபோகங்களை அனுபவித்து வருகின்ற இந்தத் தமிழ்த் தரப்பு, திட்டமிட்டேஇத்தகைய எதிர்ப்புக்களை பெரும்பான்மையின மக்களிடையே தூண்டிவிட்டு, இதையே காரணம் காட்டி, அதாவது 'எமதுமக்களுக்கான தீர்வுத் திட்டத்தை கொண்டு வருவதில் சிங்களத் தரப்பு எதிர்க்கிறது. எனவே நாங்கள் சர்வதேசத்தை நாடவேண்டும். அதற்கு உங்களது வாக்குகளைத் தாருங்கள்' என அடுத்து வருகின்ற தேர்தலில் எமது மக்களிடம் வாக்குக்கேட்டுப்போக எண்ணியே செயற்பட்டு வருகின்றது என்றே தெரிய வருகின்றது.

எம்மைப் பொறுத்தவரையில், அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாகச் செயற்படுத்துங்கள். இதனை ஓர் ஆரம்பமாகக் கொண்டு, படிப்படியாக நிலையான அரசியல் தீர்வு நோக்கி முன்னேறுவோம் என்பதையே தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

அந்த வகையில்தான், இன்றைய நிலையில் முதலில் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துங்கள்.

மாகாணசபைகளுக்குரிய அதிகாரங்களை முழுமையாக வழங்குங்கள். மாகாண சபைகள் மக்கள் பிரதிநிதிகளால் செயற்படுத்தப்படட்டும் என வலியுறுத்துகின்றோம்.

உரிய காலத்தில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். தேர்தலை நடத்தினால் அந்தக் கட்சி வென்று விடும். இந்தக் கட்சிவென்று விடும். நாங்கள் தோற்றுவிடுவோம் என்றெல்லாம் எவரும் எண்ணிக் கொண்டிருந்தால், இந்த நாட்டில்தேர்தல்களே நடைபெறாத ஒரு நிலையும் வந்துவிடலாம்.

எனவே, இந்த நாட்டில் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர்நாயகம்டக்ளஸ்தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதை வலியுறுத்துகின்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில்கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# மத்தல விமான நிலையத்தின் 70 வீத பங்குகள் இந்தியா வசம்




(கொழும்பு)

மத்தல விமான நிலையத்தின் 70 வீதமான பங்குகளை அரசாங்கம் இந்தியாவுக்கு வழங்கவுள்ளது. சீனாவுக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பங்குகள் வழங்கப்பட்டது போல, மத்தல விமான நிலையத்தின் 70 வீதமான பங்கு இந்தியாவுக்கு வழங்கப்படவுள்ளது.

இதற்கு அனுமதி அளிக்கும் அமைச்சரவைப் பத்திரம் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாக கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மத்தல விமான நிலையத்தை கூட்டு முயற்சியாக அபிவிருத்தி செய்யும் உடன்பாட்டில் இலங்கையின் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனமும், இந்தியாவின் விமான நிலைய அதிகாரசபையும் கையெழுத்திடவுள்ளன.

இரண்டு தரப்புகளும் கலந்துரையாடிய பின்னர் அமைச்சரவைப் பத்திரத்தில் திருத்தங்கள் செய்யப்படும்.

மத்தல விமான நிலையம் ஆதாயத்தைத் தரும் திட்டமாக இல்லாததால், அதன் 70 வீதத்துக்கும் குறைவான பங்குகளை ஏற்க இந்தியா மறுத்து வருகிறது.

விமான நிலையங்களின் மூலம் ஒரு இரவில் இலாபமீட்ட முடியாது என்றும் அதற்கு 15 ஆண்டுகள் வரை தேவைப்படும் என்றும் சொல்லப்படுகிறது.

முதலில் மத்தல விமான நிலையத்தை 99 ஆண்டுகள் குத்தகைக்குப் பெற்றுக் கொள்ளவே இந்தியா விரும்பியது. எனினும், நடத்தப்பட்ட பேச்சுக்களை அடுத்து, 40 ஆண்டு குத்தகை உடன்பாடாக கையெழுத்திட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

எனினும், இரண்டு தரப்பும் இந்தக் கூட்டு முயற்சி உடன்பாட்டை ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மீளாய்வு செய்ய முடியும்.

அத்துடன் பங்கு விகி தம் தொடர்பாகவும் இருத ரப்பு இணக்கப்பாட்டுடன் மாற்றங்களைச் செய்யவும் முடியும் என்றும் கூறப்படுகிறது.(7-8)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கனவுகள்

1865 ஆவது வருடத்தில் ஒரு நாள்.

அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் தன் மனைவியிடம் "அண்மையில் நான் ஒரு கனவு கண்டேன்" என்கிறார்.

என்ன கனவு? என்று அவர் கேட்டார்! இவர் விவரிக்கின்றார். ஒரு நாள் வெள்ளை மாளிகையில் அழுகைச் சத்தம் கேட்கிறது! அதைக் கேட்டுத் திடுக்கிட்டு நான் முழித்துக் கொண்டேன்.

மக்கள் எல்லோரும் கூட்டம் கூட்டமாக அழுதுகொண்டு நிற் கிறார்கள். எனக்கு எதுவும் புரியவில்லை! மாடியில் இருந்து இறங்கிக் கீழே வருகிறேன். எல்லா அறையிலேயும் வெளிச்சம்! அழுகைச் சத்தம் தொடர்ந்து கேட்கிறது! அந்தச் சத்தம் எங்கேயிருந்து வருகின்றது? ஒவ்வொரு அறையாகத் தேடிக் கொண்டு வருகின்றேன். கிழக்குப் பக்கத்து அறைக்குள்ளே நுழைகின்றேன் சவ ஊர்வலத்துக்குத் தயாராக ஒரு உடலைக் கிடத்தி இருக்கிறார்கள். முகம் மூடியிருக்கிறது! அதைச் சுத்தியிருந்தவர்கள் அழுது கொண்டு இருக்கிறார்கள்! என்கிறார்.

"யாருடைய சவம்?" என்று கேட்கிறாங்க!

"ஜனாதிபதியினுடையது... அவரை யாரோ கொலை செய்து இருக்கிறார்கள்!"என்கிறார் ஆபிரகாம் லிங்கன். இது நடந்து கொஞ்ச நாளிலேயே என்ன நடந்தது என்று உங்கள் எல்லோருக்கும் தெரியும்.

கனவு என்பது என்ன? கனவில் நடப்பதற்கும், கண்முன்னால் நடப்பதற்கும் சம்பந்தம் இருக்குமா? "கனவுகள் விடை காண முடியாத புதிர் "என்று சில பேர் சொல்கிறார்கள்! "கனவு மனச்சாட்சியின் குரல் " என்கிறார் சோக்ரடீஸ். "உடல் அசதியினால் ஏற்படும் ஒரு வீண் காட்சி " என்கிறார் வோல்டர். "உணர்வற்ற ஒரு நிலைக்கு அழைத்துக் கொண்டு போகின்ற ராஜபாட்டை" என்கிறார் பிராய்ட்.

கனவுகள் மனிதனுக்கு மட்டுமல்ல மிருகங்களுக்கும் வருவதாகத் தெரிகிறது. இராமாயணத்தில் திரிசடை கண்ட கனவு. சிலப்பதிகாரத்தில் கண்ணகி கண்ட கனவு இது எல்லாம் பின்னாடி நடக்கப் போவதை முன்னாடியே சொல்லிவிட்டது!

எகிப்து வரலாற்றில் நாலாவது துட்மோஸ் என்று ஒருத்தர் வேட்டையாடிவிட்டு வந்த களைப்பில் ஸ்பிங்ஸ் தேவதை சிலைக்குப் பக்கத்தில் படுத்துத் தூங்கி விட்டார். அப்பொழுது ஒரு கனவு அவர் பட்டத்திற்கு வருவது மாதிரி.

அது மாதிரியே அவர் பட்டத்திற்கும் வந்துவிட்டார்! கனவுகள் சில சமயம் ஒழுங்காகக் கோர்வையாக் வருகிறது. சில சமயம் ஒன்றுக்கு ஒன்று சம்பந்தமில்லாமல் கன்னாபின்னா என்று வரும்! விடிந்ததும் யோசித்துப் பார்த்தால் என்ன கனவு என்றே நினைப்பு வராது!

பொதுவாக மூன்று நிலைமைகளில் கனவு வரலாமாம்! ஒன்று கடுமையான அசதி. இல்லை என்றால் உடல்நிலை பாதிப்புஇ இதனால் வரலாம். இன்னும் ஒன்று மனதில் ஆசைகள் வெளிப்படுத்தும் வகையில் ஏற்படலாம். மூன்றாவது ஆத்மாவில் இருந்து தெய்வீக சக்தியால் வெளிப்படுகின்றது என்றும் சில பேர் சொல்கிறார்கள்.

இதில் முதலில் சொன்ன நிலைக்கு விளக்கம் கொடுக்க முடியும். அடுத்த இரண்டு நிலைக்கும் விளக்கம் சொல்வது கஷ்டம்!

இந்த உலகம் முடிவில்லாதது. சிக்கல் மிகுந்தது. இதை சமாளிக்க செயல்களை ஒழுங்குமுறைப்படுத்தி இயங்கிவரும் மனித இனத்திற்கு இரண்டு வழி இருக்கிறது. முதல் வழி எங்களுடைய மூளையின் இடது பகுதியுடன் தொடர்பு உள்ளது. நாம் முழித்துக் கொண்டுள்ள போது செய்கின்ற செயல்கள் எல்லாமே இதனுடைய கட்டளைப்படியே நடக்குதாம்!

இரண்டாவது வழி; நம்ம மூளையின் வலப் பகுதியுடன் தொடர்பு உள்ளது. உண்மைச் செயலைவிட உணர்வுக்கு மதிப்புக் கொடுக்கின்ற இந்தப் பகுதிதான் கனவு காண்கின்ற மனநிலைக்கு வழிமுறை என்று தோன்றுகிறது. பகலில் ஏற்படும் பலவித உணர்ச்சிகள் இங்கே பதிவாகி விடும். இரவு தூக்கத்தில் கனவு என்னும் வடிகால் மூலமாக அதற்கு எல்லாம் தீர்வு காணப்படுகின்றது என்று இப்போது விளக்கம் கொடுக்கின்றார்கள்!

பொதுவாகக் கனவு காண்பது நல்லது என்று தான் பலபேர் சொல்கின்றார்கள். " ஆழ்ந்த தூக்கம் போதுமான ஓய்வை எங்களுடைய மூளைக்குக் கொடுக்கின்றது. தீர்க்க முடியாத சிக்கல்களுக்குக் கனவு மூலமாகத் தீர்வு ஏற்பட்டிருக்கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள்!

எவ்வளவோ பேர் தினமும் எவ்வளவோ கனவு கண்டுகொண்டு தான் இருக்கிறார்கள்... அவ்வளவும் உடனே நடப்பது இல்லை! அபூர்வமாகச் சிலது நடந்திருக்கிறது! அதைத்தான் ஆரம்பத்தில் சொன்னேன். அதற்காக நீங்கள் ஏதாவது கெட்டவிதமான கனவு கண்டால் அதை நினைத்துப் பயந்து கொண்டிருக்காதீர்கள்! இதற்காகத் தான் பெரியவர்கள் சொல்லிவைத்தார்கள்...

கெட்டகனவுக்கு நல்ல பலன் உண்டு என்றும் எதிர்மறையாகப் பலன் உண்டு என்றும் சொல்லுவார்கள்... பத்து ரூபா தொலைத்ததாகக் கனவு கண்டால் பத்து ரூபா வருமானம் வரும்! பெயிலானது மாதிரி கனவு கண்டால் சித்தி பெற்றுவிடுவாய்!

இப்படி எல்லாம் ஒரு மனத்தைரியத்திற்காகச் சொல்லி வைப்பது உண்டு... இதிலேயும் ஒரு கஷ்டம்! ஒருத்தர் ஓடி வந்தார்... "சேர்! இன்றைக்கு நான் உங்கள் வீட்டிலேயே தங்கிக்கொள்கிறேன்..." என்று கெஞ்சினார் பரிதாபமாக!

ஏன்?என்று கேட்டேன். " நேற்றைக்கு ஒரு கனவு கண்டேன் " சேர் என்றார்! " என்ன கனவு? என்றேன்! " என் சம்சாரத்தை நான் அடிப்பது மாதிரி!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணக் கல்வியின் தற்கால போக்கு


வடக்கு மாகாணக்கல்வி நிலை வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும் ஆசிரியப் பரம்பல் சீரற்றதாக காணப்படுவதாகவும் மற்றும் பல குற்றச்சாட்டுக்களை எந்த விதமான ஆய்வுகளும் ஆதாரங்களும் இன்றி எழுந்தமானமாக பல தரப்பட்ட தரப்புக்களும் சுமத்தி வருவதுடன் அதனை பொதுவெளியில் பிரசாரம் செய்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்ற ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட கல்விச் சமூகத்தின் சேவையினையும் ஒட்டு மொத்தமாக இழிவுபடுத்துகின்ற செயற்பாடாகவும் இதனை கருத்தில் கொள்ள வேண்டிய தேவை காணப்படுவதுடன் வடக்கு மாகாணக்கல்வியின் இன்றைய நிலை தொடர்பிலான உண்மையான நிலவரத்தினை ஆய்வு ரீதியாக, ஆக்கபூர்வமான விமர்சன ரீதியாக வெளிக்கொணர வேண்டியது காலத்தின் கட்டாயமாகக் காணப்படுகின்றது.

சகல பொதுப் பரீட்சைகளினதும் கடந்தகாலப் பெறுபேறுகள் மற்றும் தேசிய, சர்வதேச போட்டிகளில்மாணவர்கள் பெற்றுக் கொண்ட வெற்றிகள் என்பவற்றினை பகுப்பாய்வு செய்வதன் ஊடாகவே வடக்கு மாகாணத்தின் கல்வி நிலை மற்றும் அதன் போக்கு என்பனவற்றினை வரையறுத்துக் கொள்ளலாம்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளில் இரண்டு வினாத்தாள்களிலும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களது எண்ணிக்கையானது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டில் 12.70 வீதம் அதிகரித்து காணப்படுவதுடன் மாகாணத்திலுள்ள அனைத்து கல்வி வலயங்களினதும் பெறுபேறுகள் அதிகரித்த தன்மையினையே காட்டுகின்றது. (படம்-1-2)


தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் உதவிப்பணம் பெறுவதற்கும் பாடசாலைகளை தேர்வு செய்வதற்குமான வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களின் வீதம் உயர்வாகவே காணப்படுகின்றது. (படம்-3)



(படம்-3)


க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கடந்த 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2017ஆம் ஆண்டு வரையிலான தரவுகளை பகுப்பாய்வு செய்கையில் அண்மைய வருடங்களில் தொடர்ச்சியான அதிகரிப்பினையே காணக்கூடியதாக உள்ளது. (படம்-4)




(படம்-4)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கடந்த 2016 மற்றும் 2017 ஆம் வருடங்களை வலய ரீதியாக ஒப்பீடு செய்கையில் அனைத்து வலயங்களினதும் பெறுபேறுகள் அதிகரித்த நிலைமையே காணப்படுகின்றது. வலயங்களின் 2017ஆம்ஆண்டினது க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை சித்தி வீதங்களின் அதிகரிப்பு வீதமானது கூடியதாக காணப்படுவது சிறப்பம்சமாகும். (படம்-5)



(படம்-5)


தேசிய மட்டத்துடன் ஒப்பீடு செய்கையில்க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் சித்தி வீத அதிகரிப்பானது தேசிய மட்டத்தினை விட அதிகமானதாகவே வடக்கு மாகாணத்தின் காணப்படுகின்றது. (படம்-6)



(படம்-6)

க.பொ.த. சாதாரண தர உயர்தரப் பரீட்சை

க.பொ.த. உயர்தரப் பெறுபேறுகளை பொறுத்தவரையில் எமது மாகாணத்தின் நிலை மிக நன்றாக காணப்படுவதுடன் 'அகில இலங்கை ரீதியில் முதலிடத்தில் இருப்பது சிறப்புக்குரியதாகும். கடந்த வருடங்களில் பெறுபேற்றினை பாடத்துறைகள் ரீதியாக நோக்குகையில் அனைத்து பாடத் துறைகளிலும் சித்திவீதங்கள் அதிகரித்துள்ளமையினையே காட்டுகின்றது. (படம்-7)



(படம்-7)

அண்மைய ஆண்டுகளில் ஒவ்வொரு பாடத் துறை ரீதியாக பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெற்ற வடக்கு மாகாண மாணவர்களின் வீதம் மற்றும் தேசிய வீதத்துடனான ஒப்பீடு வருமாறு, (படம்-8-9)


2018 க.பொ.த. உயர்தரப் பெறுபேறுகளைப் பொருத்தவரையில் உயிரியல், கணிதம் மற்றும் வணிகப் பாடத் துறைகளில் சித்தி வீதமானது தேசிய மட்டத்தினை விட அதிகரித்த நிலையில் காணப்படுவதுடன் கலைத் துறையினது சித்தி வீதம் தேசிய மட்டத்துக்கு சமனானதாக காணப்படுவ துடன் பொறியியல் தொழில்நுட்பம் மற்றும்உயிரியல் தொழில் நுட்பம் ஆகிய பாடத் துறைகளின் சித்தி வீதம் தேசிய மட்டத்துடன் ஒப்பீடு செய்கையில் குறைவாகவே காணப்படுகின்றது. (தொடரும்)

| பாடத்துறை | 2013 | | 2014 | | 2015 | | 2016 | | 2017 | | 2018 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வடக்கு | தேசிய | வடக்கு | தேசிய | வடக்கு | தேசிய | வடக்கு | தேசிய | வடக்கு | தேசிய | வடக்கு | தேசிய |
| உயிரியல் | 47 | 50 | 56 | 50 | 56 | 52 | 58 | 53 | 59 | 56 | 60 | 58 |
| கணிதம் | 45 | 47 | 49 | 47 | 54 | 48 | 60 | 53 | 59 | 54 | 63 | 57 |
| வணிகம் | 55 | 58 | 62 | 64 | 70 | 70 | 70 | 70 | 73 | 71 | 71 | 69 |
| கலை | 76 | 66 | 72 | 69 | 71 | 69 | 69 | 70 | 76 | 74 | 69 | 69 |
| பொறியியல் தொழில்நுட்பம் | - | - | - | - | 55 | 50 | 54 | 56 | 59 | 58 | 51 | 58 |
| உயிரியல் தொழில்நுட்பம் | - | - | - | - | 60 | 61 | 59 | 60 | 65 | 62 | 62 | 64 |


(படம்-8)

2018ம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பெறுபேறுகளின் படி பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்ற மாணவர்களின் வீதத்தின் அடிப்படையில் வடக்கு மாகாணம் ஒவ்வொரு பாடத்துறையிலும் அகில இலங்கை ரீதியாக பெற்றுக்கொண்ட நிலை (படம்-9)

| | |
|---|---|
| கணிதத்துறை | 1 |
| உயிரியல் துறை | 2 |
| வணிகத்துறை | 2 |
| கலை | 5 |
| பொறியியல் தொழில்நுட்பம் | 8 |
| உயிரியல் தொழில்நுட்பம | 6 |



(படம்-1)



(படம்-2)

தி.ஆயவன்,
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவம் வளர்த்தமகான் அச்சுவேலியூர் சிவஸ்ரீ ச.குமாரசாமிக்குருக்கள்



எழில் சூழ் நீர் வளமும் நிலவளமும் ஒருங்கே கொண்டமைந்த யாழ்ப்பாணம் அச்சுவேலி மண் தந்த சைவப் பெருங் காவலனாக சபாபதிக்குருக்களுக்கும் தங்கம்மாவிற்கும் அருந்தவப் புதல்வனாக விய வருட கார்த்திகைமாதம் இருபத்தொராம் திகதி (16.11.1886) புனர்பூச நட்சத்திரத்திலே குமாரசாமிக் குருக்கள் அவதரித்தார். சிறுவயதுமுதல் ஆன்மீக நாட்டம் கொண்ட இவர் தந்தையாரிடம் சிறு பராயக் கல்வியைக் கற்றுக் கொண்டார். இவரின் ஞாபகத்திறனையும், அறி வாற்றலையும், மந்திர வேதபாராயணத்தையும் கேட்டுமகிழ்ந்த தந்தையார் மேலும் பல்வேறுபட்ட சமஸ் கிருத சுலோகங்களையும், வேத மந்திரங்களையும், புராணக் கதைகள் என்பவற்றையும் விருப்புடன் கற்றுக் கொடுத்தார்.

குறிப்பிட்ட வயது வந்தவுடன் இவரை சிவப்பிரகாசபண்டிதரிடம் கல்விகற்பதற்கு அனுப்பி வைத்தனர். அங்கு பண்டிதரிடம் இலக்கண நுணுக்கங்களை ஆர்வத்தோடு கற்றறிந்தார். அதனைத் தொடர்ந்து சுன்னாகப் பிர தேசத்திலே புகழ் பெற்ற சுன்னாகம் குமாரசாமிப் புலவரிடமும் சிறப்பான முறையில் இலக்கண இலக்கியங்கள், புராணங்கள், வேதங்கள், ஆகமங்கள் என்பவற்றை கற்றுத் தேர்ந்தார். அவருடைய அறிவுத்தேடல் அவரை ஓய்ந்திருக்க ஒரு போதும் அனு மதித்திருக்கவில்லை. தொடர்ந்தும் தன்னை அறிவின் மூலமும் ஆன்மீக ஆராய்ச்சி மூலமும் உயர்த்திக் கொண்ட இவர் நல்லூர் கைலாசபிள்ளையிடம் கற்று தமிழ், சமஸ்கிருதம் போன்றவற்றில் வித்தகனாக மிளிர்ந்தார்.

மேலும் இவரின் அறிவின் தேடல் காரணமாக சங்கானை அருணாச்சல சாஸ்திரிகளிடமும் கற்றுத் தேர்ந்தார். அக்காலத்தில் ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்குச் செல்வதானால் கால்நடையாகவும் மாட்டு வண்டியிலும் தான் பயணம் செய்யவேண்டி இருந்தது. குருக்கள் ஐயாவும் பல்வேறு இடர்களுக்கு மத்தியில் ஊரின் எப்பாகத்திற்கும் சென்று அறிவாற்றலைப் போதிக்கும் ஞான குருக்களைத் தேடி தனது அறிவுப் பயணங்களைத் தொடர்ந்தவண்ணமே இருந்தார். ஆகமத்தின் மீது அதிக ஈடுபாடுகொண்ட இவர் புலோலி ம. முத்துக்குமாரசாமிக் குருக்களிடம் சிவாகமங்களை தெளிவுறக்கற்றுத் தேர்ந்தார். மேற்படி பல்வேறுபட்ட இறைஞானமுள்ள குருமார்களிடம் அறி வைப் பெற்றுக் கொண்ட காரணத்தால் ஆலய அமைப்பு முறைகள், பிரதிஷ்டை முறைகள், ஆலயக் கிரியை முறைகள், சிற்பசாஸ்திரங்கள் என்பவற்றில் வித்தகம் பெற்றிருந்தார். இவரின் ஆளுமையையும் இறைஞானத்தையும் இனங் கண்டு வியப்பும், மகிழ்ச்சியும் அடைந்த பிரதம சிவாச்சாரியார்களில் ஒருவரான ஊரெழு சிவ. சதாசிவக் குருக்கள் சிவாச்சாரியார்கள் கற்றறிந்தோர் சபைசூழ நிறைந்த அடியார் கூட்டத்தின் மத்தியில் 1910ஆம் ஆண்டு இவருக்கு ஆச்சாரிய அபிஷேகம் செய்து வைத்தார்.

குறிப்பாக இவரின் சொந்த ஊரான அச்சுவேலிப் பகுதியில் அமைந்திருக்கும் அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் ஆலயத்தில் பிரதமகுருவாக இறை பணி ஆற்றிவந்தார்.

திருமண வயதை எட்டிய குருக்கள் ஐயாவிற்கு திருமணம் செய்ய முடிவெடுத்த பெற்றோர்கள் தமது உறவினர்களில் ஒருவரான சிவஸ்ரீ பரமசாமிக் குருக்களின் பாசமிகு புத்திரி பராசத்தி அம்மாளை இனிதே மணம் முடித்து வைத்தனர். இவர்களின் அன்பு வாழ்வின் வெளிப்பாடாக ஒரு மகனும் ஒரு மகளும் பிள்ளைச் செல்வங்களாகக் கிடைத்தனர். மகனின் பெயர் வைத்தீஸ்வரக்குருக்கள், மகளின் பெயர் மனோன்மணி அம்பாள். அவர் குடும்பத்தோடு சீரும் சிறப்புமாக குருக்கள் வாழ்ந்து வந்தார்.

இவர் தான் பெற்ற கல்வியை ஏனையவருக்கும் கற்பிக்க வேண்டும் என்கின்ற அவா அவர் மனதில் எழுந்தது. முதலில் தமது இல்லத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி அந்தணர்ச் சிறார்களுக்கு சமஸ்கிருதம், தமிழ் வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள் முதலிய பாடங்களைக் கற்பித்து வந்தார். மாணவர்களிடம் மிகுந்த அன்போடும் அன்புமிக்க கண்டிப்போடும் கல்வியைப் போதித்தார். வெளியூர்களிலும் இருந்தும் இவரிடம் கல்வி கற்பதற்கு அதிகம் நாட்டம் கொண்டு அவரின் இல்லத்தில் தங்கி நின்று கல்வி பயின்றனர். அதுமட்டுமல்லாது மன்னார் பிரதேசத்தில் அமைந்துள்ள திருக்கேதீஸ்வரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சிவானந்தகுருகுலத்திலும் பிரதமகுருவாக ஆன்மீக சேவைபுரிந்து மன்னார்ப் பிரதேசத்து மக்களிடம் சமயப் பற்றையும் தமிழ்ப் பற்றையும் வளர்த்துவந்தார்.

அக்காலத்தில் ஆங்கிலேய ஆட்சிக்காலம் என்பதால் கிறிஸ்தவமதச் செல்வாக்கு மிகுந்து காணப்பட்டது. இதனால் நகர்ப்புற ஆங்கிலப் பாடசாலைகள் வளர்ச்சி அடைந்தன. வசதி படைத்த மாணவர்களை ஆங்கிலேயப் பாடசாலை உள்வாங்கி வந்தது. அது மட்டுமல்லாமல் பல சைவ மாணவர்களும் மதம் மாற்றப்பட்டனர்.

இதைக் கண்டு பொறுக்க முடியாமல் குருக்கள் ஐயா எமது சைவப் பிள்ளைகளும் கிராமத்தில் கல்வி பயிலும் வறிய மாணவர்களும் சைவச் சூழலில் கல்விகற்க விரும்பி நாவலர் வழி செயற்பட்டார். அக்காலத்தில் பௌதீக வளங்கள் அற்ற நிலையிலும் குருக்கள் ஐயா அவர்கள் தனது சொந்த செலவுகளில் காணிகளை கொள்வனவு செய்து ஓலையால் வேயப்பட்ட கொட்டகைகளை அமைத்து திண்ணைக் கல்வி முறையில் மாணவர்களுக்கு கல்வி கற்பித்து வந்தார்.

1918 ஆம் ஆண்டு சித்திரை புனர்பூச நட்சத்திரத்தில் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையை நிறுவி அதன் முகாமையாளராகவும் ஆசிரியராகவும் பத்து ஆண்டுகாலம் சேவை செய்தார். அதனைத் தொடர்ந்து மருதங்கேணி சைவ வித்தியாசாலை எனும் பிறிதொரு வித்தியாசாலையை நிறுவி கல்வி போதித்து வந்தார். இன்றும் இவ் வித்தியாசலைகள் நூற்றாண்டுகளைக்கடந்து மாணவர்களிற்கு கல்வியையும் சைவ சமயத்தையும் திறம்படப் போதித்து வருகின்றது.

பல்வேறுபட்ட நூல்களிற்கும் பத்திரிகைகளிற்கும் ஆசிரியராகச் செயற்பட்டு சைவசமயத்தை அழிவில் இருந்து மீட்டு மீண்டும் சைவசமயத்தை தலை தூக்கி நிறுத்தினார் குருக்கள் அவர்கள். 1939ஆம் ஆண்டு ஆவணி மாதம் தொடக்கம் "சைவசாஸ்திர பரிபாலனம்" என்னும் மாத இதழுக்கு ஆசிரியராக இருந்து வெளியிட்டார். அதுமட்டுமல்லாது சைவபாதுகாவலன் எனும் பத்திரிகையில் பிரதம ஆசிரியராக இருந்து சைவம் சார் கட்டுரைகளை வெளியிட்டு இருந்தார்.

குருக்கள் அவர்கள் தனது குலதெய்வமான அச்சுவேலி சித்திவிநாயகர் மீது மிகுந்த அன்பும் பக்தியும் கொண்ட காரணத்தால் சித்தி விநாயகர் திருஊஞ்சல் பாமாலையை 1915ஆம் ஆண்டு சிறப்பான முறையில் வெளியீடு செய்தார். தொடர்ந்து பிரசாததீப உரை விளக்கம், 1932 சிரார்த்த தீபிகை (1933), மஹோற்சவ சந்திரிகை 1932, கதிர் காமமான்மியம், சிவபூசை விதி (1932), முத்ரலட்சணம், சைவப்பிரகாசிகை (1-5 பாடல்கள்) 1933, சைவ சாஸ்திர பிரமாண அனுட்டான அகவல் (1937), புவனேஸ்வரர் மகத்துவம் (1939), விநாயகர் பரத்துவம் 1934, சைவசாஸ்திர பிரமாணம் 1934, ஆலய சேவை (1949), வேதாகம நிருபணம், மஹோற்சவ விளக்கம், முப்பொருள் விளக்கம் முதலிய நூல்களை தமிழில் வெளியீடு செய்தார்.

சைவத்திற்கும் செந்தமிழிற்கும் தொண்டாற்றிய குருக்கள் ஐயா அவர்களிற்கு மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம் அவர் ஆற்றிய பணிகளைப் பாராட்டும் முகமாக திருஞான சம்பந்தபரமாச்சாரிய சுவாமிகளது குருபூசை மஹோற்சவத்தில் "சிவாகம ஞானபானு" என்ற சிறப்புப் பட்டத்தை அவருக்கு வழங்கி கௌரவப் படுத்தியது.

நாவலர் பணிநின்று சைவத்தையும் தமிழையும் உலகறியச் செய்த அந்த உத்தமமகான் தனது முதுமைக் காலத்தில் ஓய்ந்து விடாமல் சைவப்பணி ஆற்றி வந்தார். தனதுதிறமையால் எமது நாட்டுக்கு மட்டுமல்லாது தனது உயரியபணி மூலம் சைவத்தமிழ் உலகிற்கு பெருமைசேர்த்த உன்னத மாமனிதர் 10-03-1971 அன்று இறைவனடி சேர்ந்தார். இவரின் இழப்பு சைவத்திற்கும் தமிழிற்கும் பேரிழப்பாக அமைந்தாலும் அவர் காட்டியபாதையும் அவர் வகுத்துத் தந்த நூல்களும் என்றும் எமக்கு வழிகாட்டியாக இருந்து வருகின்றது. இவர் எழுதிவெளியிட்ட நூல்களை இன்றும் காலத்தால் அழியவிடாது பாதுகாத்து அவரின் வழிவந்த உறவினர்கள் மீள்பதிப்புச் செய்து வெளியிட்டு வருகின்றனர்.

சைவத்தையும் தமிழையும் பேணிப் பாதுகாத்து வாழ்ந்து மறைந்த குருக்கள் பாதையில் நாமும் பின்பற்றி நடப்போமாக.

இ. வினோதராஜ்.

## மாலி குண்டுவெடிப்பில் படுகாயமடைந்த இலங்கை இராணுவவீரரின் நிலை கவலைக்கிடம்

(மாலி)

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் ஐ.நா அமைதிப்படையில் இடம் பெற்றுள்ள இலங்கை படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் படுகாய மடைந்த இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரின் நிலை மோசமான நிலையில் இருப்பதாக தகவல்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வியாழக்கிழமை காலை ஐ.நா. வாகனத் தொடரணிக்கு பாதுகாப்பு அளித்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த போது, இலங்கை இராணுவ அணியின் துருப்புக்காவி கவச வாகனம் ஒன்றின் மீது டோன்ட்சா என்ற இடத்தில் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலில் கப்டன் உள்ளிட்ட இரண்டு இலங்கை படையினர் கொல்லப்பட்டனர். மேலும், 6 படையினர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள், ஐ.நா. அமைதிப்படையில் உள்ள கனேடிய விமானப் படையின் மீட்பு உலங்கு வானூர்தி மூலம், 400 கி.மீ தொலைவில் உள்ள சீன வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவரின் நிலை மோசமாக இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலை நடத்தியவர்கள் இன்னமும் உரிமை கோரவில்லை.

அதேவேளை கொல்லப்பட்ட இரண்டு இலங்கை படையினரதும் சடலங்கள் நாளை மறுதினம் புதன்கிழமை கொழும்புக்குக்கொண்டு வரப் படவுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (7-8)





யாழ்ப்பாணம் எம்.ஜி.ஆர். முன்னேற்றக் கழக ஏற்பாட்டில் மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரின் 102 ஆவது பிறந்த தின விழா அண்மையில் நடைபெற்றது. இதில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.சுகிர்தன் கலந்து கொண்டார்.

## செயற்குழு தெரிவு

(யாழ்ப்பாணம்)

வேலணை பள்ளம் புலம் முருகமூர்த்தி சன சமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் செயற்குழு தெரிவும் அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைவராக சொ.சிவயோகலிங்கம், செயலாளராக த.அருண்கிரிநாதன், பொருளாளராக திருமதி.றாஜினி ஜெயகாந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-5)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

நிலைத்து நிற்கும் அபிவிருத்தி இலக்கு என்னும் தொனிப்பொருளிலான கருத்தரங்கு நாளை மறுதினம் 30 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ். பொருளியல் துறை விரிவுரை மண்டபத்தில் இடம் பெறும்.

இதில் கருத்துரையை யு.என்.வதிவிட இணைப்பாளர் திருமதி. காயத்திரி குமரன் வழங்குவார். (இ-10)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான பொதுக் கூட்டம் யாழ்.மாவட்ட செயலகத்திற்கு அருகாமையிலுள்ள YMCA மண்டபத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. வட மாகாணத்தை சேர்ந்த மத்திய மற்றும் மாகாண அரச சேவைகளில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் அனைவரும் இணைந்து செயற்படலாம் எனவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது. (இ-7)

## 7 மாத ஆண்குழந்தை கழுத்து நெரிக்கப்பட்டு கொலை

(திம்புள்ள)

திம்புள்ள, பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை ரொசிட்டா பகுதியில் தாய் ஒருவர் தனது 7 மாத குழந்தையை கழுத்தை நெரித்து கொலை செய்ததோடு, அவரும் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 26 வயதான பெண்ணொருவரும் அவரது 7 மாத ஆண் குழந்தையும் இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன், தூக்கில் தொங்கிய நிலையில் தாயின் சடலத்தையும், குழந்தையின் சடலத்தையும் நேற்றுக் காலை பொலிஸார் மீட்டுள்ளனர். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக குறித்த பெண் தனது குழந்தையின் கழுத்தை நெரித்து கொலை செய்ததோடு, பெண்ணும் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகித்துள்ளனர். இந் நிலையில் அட்டன் நீதவான் முன்னிலையில் மரண விசாரணைகள் மேற்கொண்ட பின் பிரேத பரிசோதனைக்காக சடலங்கள் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. (7-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

155



“மக்கள் கிறிஸ்தவத்தில் ஆர்வ மில்லாதவர்களாக இருந்த போதிலும் மிஷனரிமாரை அன்புடன் உபசரித் தனர் என்பது தெளிவாகின்றதுதிருகோணமலை மக்கள் குறிப்பாகப் பாராமுகமாக இருந்தனர் என்பது தெரிகின் றது. அவர்கள் சைவசமயத்தின் பலமான பாரம்பரியத் தைப் பின்பற்றியதுதான் இதற்குக் காரணம். மட்டக் களப்பு மக்கள் பாரம்பரியமாகச் சிவனையும் கிராமத் தெய்வங்களையும் வணங்கினர். எனவே ஒட்டுமொத்த மாகப் பார்க்கையில் புரட்டஸ்தாந்து மிஷனரிமார் மிக ஊக்கத்துடன் வேலை செய்தபோதும் அவர்களால் சிறிதளவே மதமாற்றத்தை ஏற்படுத்த முடிந்தது”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

இந்த ஊக்கமிகு முயற்சிகள் பெரும்பாலும் மன்னார், வவு னியா, முல்லைத்தீவுப் பிரதேச ங்களில் மேற்கொள்ளப்பட்டன.

அமெரிக்கன் சிலோன் மிஷனின் இன்னுமொரு 1864 ஆம் ஆண்டு அறிக்கை கிழ க்கு மாகாணத்திலுள்ள திருகோ ணமலை, மட்டக்களப்பு மாவ ட்டங்களில் நிகழ்ந்த செயற்பா டுகள் பற்றி விபரிக்கிறது.

சாண்டஸ் (Sanders) உடன் சாவகச்சேரியிலிருந்து போத கர் ஹண்ட் (Hunt) இரு வினாவிடை உபதேசிமார், ஒரு ஆசிரியர் என நான்கு சுதேசிக ளும் ஆனி 16 ஆம் திகதி வல்வெட்டித்துறையிலிருந்து மட்டக்களப்புக்கு கடல்வழி பயணித்து எமது மத்திய நிலை ய்மான புளியந்தீவில் தங்கினர்.

நாம் புளியந்தீவிலும் சுற்றி யுள்ள கிராமங்களிலும் பதி னொரு நாட்கள் தரித்து எமது குறிக்கோள்களைக் கவனித் தோம். மட்டக்களப்பில் பதி னொரு நாட்களும் திருகோண மலையில் நான்கு நாட்களும் கல்முனையில் இரண்டு நாட் களும் கழித்தோம். இக்கா லத்தில் நாம் மக்களின் வீடுக ளுக்குச் சென்று அவர்களுக் குப் பரிசுத்த வேதாகமத்தை வழங்கி, அவர்கள் இயேசுவை ஏற்று விசுவாசிக்கப் போதித் தோம்.

இந்த அறிக்கையின்படி இவர்கள் அதிக நாட்கள் மட் டக்களப்பிலும் திருகோண மலையிலும் தங்கி அங்கு 750 வீடுகள் வரையில் சென்று பரிசுத்த சுவிசேஷங்களின் இயல் பையும் அவை கோருவதையும் 3265வளர்ந்தவர்களுக்கு எடு த்துரைத்தனர்.

416 பாகங்கள், இரு வேதா கமங்கள், ஒன்பது ஏற்பாடுகள் விற்கப்பட்டதுடன் அறுபத்தி யெட்டுப் பாகங்கள் மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. பழைய ஏற்பாட்டின் தொண் ணூற்று மூன்று பாகங்களும் மத்தேயு புதிய பதிப்பும் தேவை ப்படுபவர்க்கு வழங்கப்ப டும் வகையில் மிஷனரிமாரின் இருப்பில் விடப்பட்டன.

சராசரியாக ஒவ்வொரு குடும்பம் அல்லது வீடு என்ற ரீதியில் ஒவ்வொரு பாகம் வழங்கப்பட்டு இவை விநியோ கிக்கப்பட்டன. இரு வேதா கமக் கூட்டங்கள் நடந்ததுடன் அங்கு அவர்கள் நற்கருணை ஆராதனையில் மகிழ்வுடன் பங்கேற்கவும் உதவவும் வாய்ப்ப ளிக்கப்பட்டது. இவற்றுடன் வெஸ்லியன் மிஷன் சங்கத்தின் இரு விழாக் கூட்டங்களும் நடத்தப்பட்டன.

மிஷனரிமார் இந்த ஆராத னைகளை வழங்குவதன் நோக் கத்தையும் அவர்கள் போதித்த மக்கள் இவற்றை எப்படி ஏற்றனர் என்பதனையும் வெளிக் காட்டும் கூற்றுக்கள் இதே அறிக்கையில் உண்டு.

சில இடங்களில் எமது வருகை எம்மால் இயன்றவரை நாம் காட்டிய சொல்வன்மை, மெய் ஈடுபாடு யாவுமே அவர்க ளுடைய [illegible] தற்கோ சுவிசேஷத்தை விற்ப தற்கோ போதவில்லை. ஆனால் மற்றைய இடங்களில் இதற்கு மாறாக நாம் ஏராளமாக விற்று கவனமாகக் கேட்ட திரளான சனங்களுக்குப் போதித்தோம்.

விசேடமாகக் கல்முனையில் முஸ்லிம்கள் பெருந்தொகையில் வாழ்கின்றனர். பொய்த்தீர்க்க தரிசியைப் பின்பற்றும் இவர் கள் பழைய ஏற்பாட்டின் பிரதி களைப் பெறுவதில் மகிழ்ச்சி யடைந்தனர்.

ஏறத்தாழ 80 ஆயிரம் பேரைக் கொண்ட மட்டக்களப்பு மக்கள் மத்தியிலுள்ள எல்லா வகுப்பி [illegible] சென்றபோதும் குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்கு நெருங்கக்கூடியவர்களாகவும் அன்புடன் உபசரிப்பவர்களா கவும் இருந்தனர்.

திருகோணமலை, கொட்டியா ரம், தம்பலகாமம் ஆகிய இடங்களில் உள்ளவர்கள் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர் கள். ஆனால் திருமணம், வியா பாரம், விவசாயம் என்ற கார ணங்களினால் இவர்கள் இருப் பிடத்தை மாற்றிக்கொண்ட வர்கள்.

இங்குள்ள மக்கள் கலப் பானவர்களாகவும் எப்போதும் மாற்றத்தை விரும்புபவர்களா கவும் இருந்தனர். திருகோண மலையில் வேதாகமத்திற்கான தேவை ஊக்கமளிப்பதாக இருக்கவில்லை. இது குடி யேற்ற அரசாங்கத்தின் இரா ணுவ நிலையமாக இருந்தது.

அமெரிக்கன் சிலோன் மிஷன் வன்னியிலும் கிழக்கு மாகாணத்தில் பட்டி தொட்டி எங்கும் உள்ளூர் மக்கள் மத்தி யிலும் எல்லா வகுப்பினரிடை யிலும் விடாமுயற்சியுடன் சுவி சேஷத்தைப் பரப்பியது என இவ் அறிக்கை மூலம் தெரிகி றது.

மக்கள் கிறிஸ்தவத்தில் ஆர்வ மில்லாதவர்களாக இருந்த போதிலும் மிஷனரிமாரை அன்பு டன் உபசரித்தனர் என்பது தெளிவாகின்றது. திருகோண மலை மக்கள் குறிப்பாகப் பாராமுகமாக இருந்தனர் என்பது தெரிகின்றது. அவர் கள் சைவசமயத்தின் பலமான பாரம்பரியத்தைப் பின்பற் றியதுதான் இதற்குக் காரணம்.

மட்டக்களப்பு மக்கள் பாரம் பரியமாகச் சிவனையும் கிராமத் தெய்வங்களையும் வணங்கினர் என்பதை நாம் முன்பு ஆராய் ந்துள்ளோம். எனவே ஒட்டு மொத்தமாகப் பார்க்கையில் புரட்டஸ்தாந்து மிஷனரிமார் மிக ஊக்கத்துடன் வேலை செய்தபோதும் அவர்களால் சிறிதளவே மதமாற்றத்தை ஏற் படுத்த முடிந்தது.

வன்னியிலும் கிழக்கு மாகா ணத்திலும் குறைந்தளவே மத மாற்றம் நிகழ்ந்ததற்கு நிச்சய மாக சைவசமய உயர் மட் டத்தினரின் தூண்டலால் ஏற் பட்ட மறுமலர்ச்சிச் செயற் பாடுகளும் பண்பாட்டு விழி ப்புணர்ச்சியுமே காரணமா கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் மைத்துனர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை



(கொழும்பு)

அமெரிக்க நீதிமன்றத்தில் ஐந்து குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள, மகிந்த ராஜபக்ஷவின் மைத்துனர் ஜாலிய விக்ரமசூரிய மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப் பட்டால், 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக் கப்பட்டு அனைத்து சொத்துகளும் பறிமுதல் செய்யப்படும் வாய்ப்பு இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவுக்கான இலங்கையின் தூதுவராக நியமிக்கப்பட்டிருந்தார் மகிந்த ராஜபக்ஷவின் மைத்துனரான ஜாலிய விக்ரமசூரிய.

அமெரிக்க குடியுரிமையையும் கொண்டுள்ள இவர் அங்கு பதவியில் இருந்த காலத்தில் பணச்சலவை, நிதி மோசடி மற்றும் குடிவரவுச் சட்டங்களை மீறியமை குறித்து அமெரிக்காவின் கொலம்பியா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பணச்சலவை சட்டத்தின் கீழ் இரண்டு குற்றச்சாட்டுகளும், நிதிமோசடி தொடர்பான இரண்டு குற்றச்சாட்டுகளும், கடந்த 2018 மேமாதம் அமெரிக்கா வந்த போது குடிவரவுத் திணைக்களத்துக்கு தவறாக வழங்கினார் என ஒரு குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மத்திய புலனாய்வு அமைப்பான எவ்.பி.ஐ. அதிகாரிகளின் நீண்ட புலனாய்வுக்குப் பின்னர் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 26 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்ட பின்னர் இந்த வழக்கு விரைவுபடுத்தப்பட்டது. ஆட்சிக் கவிழ்ப்பை அடுத்து, அவருக்கு மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் புதிய இராஜதந்திரப் பதவிகளைக் கொடுத்தால், இந்த வழக்கில் சிக்கல் ஏற்படும் என்றும் கருதப் பட்டதால், விரைவாக வழக்கை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும், ஆட்சிக்கவிழ்ப்பு தோல்வியில் முடிந்த நிலையில் ஜாலிய விக்ரம சூரியவுக்கு எதிரான வழக்கு எந்தச் சிக்கலுமின்றி, அமெரிக்க அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் அவர் நாளை செவ்வாய்க்கிழமை அமெரிக்க நீதிமன்றத்தில் சரணடைவார் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

கொலம்பியா மாவட்ட நீதிபதி தலைமையில் செவ்வாய்க்கிழமை காலை 10.45 மணிக்கு இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது, ஜாலிய விக்ரமசூரியவுக்கு, அவர் மீதான குற்றச்சாட்டுகள் வாசித்துக் காண்பிக்கப்படும்.

இலங்கையின் தூதுவராகப் பணியாற்றிய ஒருவர் வெளிநாடு ஒன்றின் நீதிமன்றத்தில் இதுபோன்ற குற்றச்சாட்டை எதிர்கொள்வது இதுவே முதல்முறையாகும்.

இந்த வழக்கில் ஜாலிய விக்ரமசூரிய குறைந்த தண்டனையைப் பெற்றுக் கொள்வதற்காக, தம்முடன் ஒத்துழைப்பார் என்று அமெரிக்க அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

இவர் மீதான பணச்சலவைக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால், 20 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும். அத்துடன் அவர் தனது அனைத்துச் சொத்துக்களையும் இழக்க நேரிடும்.

ஜாலிய விக்ரமசூரிய இலங்கையிலும், நிதிமோசடி, வருமானத்தை மீறி சொத்துச் சேர்த்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டிருப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது. (7-8)

# சட்டவிரோதக் கட்டடங்கள் அகற்றப்படும்

## மேல்மாகாண ஆளுநர் உறுதி



(கொழும்பு)

கொழும்பு மாவட்டம் உள்ளிட்ட மேல் மாகாணத்திலுள்ள 3 மாவட்டங்களில் காணப்படும் சட்டவிரோத கட்டடங்களை அகற்றுவதற்கு எதிர்வரும் நாட்களில் நடவடிக்கை எடுக்கப்படுமென, மேல் மாகாண ஆளுநர் அஸாத் சாலி தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் தரங்களின்றி அமைக்கப் படும் கட்டடங்கள் தொடர்பாகவும் கடும் சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் கொழும்பு உள்ளிட்ட மேல்மாகாணத்தின் பல இடங்கள் மழைக் காலங்களில் நீரில் மூழ்குவதற்கு இச்சட்டவிரோதக் கட்டடங்களே காரணமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சுவரொட்டிகள் ஒட்டுவதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் அறிவிப்பு மற்றும் சுவரொட்டிகளை ஒட்டாமல் பொது இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டும் நபர்களுக்கெதிராகவும் சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளை அழைத்து இந்த விடயம் குறித்து அறிவுரைகள் தன்னால் வழங்கப்பட்டுள்ளதென்றும், இது தொடர்பான சுற்றுநிருபம் ஒன்றை வெளியிடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7-8)

# சுதந்திர தினத்தை முன்னிட்டு தெற்கில் விசேட போக்குவரத்து ஒழுங்குகள்

(கொழும்பு)

சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெறும் ஒத்திகைகளினால், கொழும்பின் முக்கிய வீதிகளில் விசேட போக்குவரத்து ஒழுங்குகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கொழும்பு- காலி முகத்திடலை அண்மித்த பகுதிகளில் இந்த விசேட போக்குவரத்து ஒழுங்குகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு தொடர்பிலான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் நேற்றுக் காலை 7 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை கொள்ளுப்பிட்டி முச்சந்தி முதல் பழைய நாடாளுமன்ற சுற்றுவட்டம் வரையான வீதியின் ஒரு பகுதி, மூடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகையால் குறித்த வீதியூடாகப் போக்குவரத்து செய்யும் வாகன சாரதிகளை மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு அஜித் ரோஹன வலியுறுத்தியுள்ளார். (7-8)

# சட்டவிரோத மது விற்பனை சந்தேக நபர் ஒருவர் கைது

(கொழும்பு)

மதுகம - அளுத்கம வீதியில் நீண்ட காலமாக முன்னெடுத்து செல்லப்பட்ட சட்டவிரோத மதுபான விற்பனை தொடர்பில் மேற்கொள்ளப் பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிப்பன பொலிஸாருக்குக் கிடைக்க பெற்றுள்ள தகவல் ஒன்றுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் இதற்கு முன்னரும் இவ்வாறு கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காகப் பயன்படுத்தப்பட்ட பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (7-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1627

Search for people, places and things

### அஜந்தன்

அடிக்கடி கோபப்பட்டால் கோபத்திற்கு மரியாதை இல்லை... கோபமே படாமல் இருந்தால் நமக்கே மரியாதை இல்லை



### சீதா

உன் அழுகையை துடைத்த விரல்களையும் ஆபத்தில் உதவிய கைகளையும் ஒருநாளும் மறவாதே



### ராகுலன்

ஒருவரைக் காயப்படுத்துவதற்கு முன் அந்த இடத்தில் நீயும் ஒருநாள் வருவாய் என்பதை நினைத்துக்கொள்



### வேணுஜன்

மனக்கஷ்டம் என்று சொன்னா ஆளாளுக்கு ஆறுதல் சொல்ல வாறாங்க... அதே பணக்கஷ்டம் என்று சொன்னா தெறிச்சு ஓடுறாங்க



### கீதா

காயப்படுத்தியவர்களைக் கடந்து போகும் சூழ்நிலை வந்தால் புன்னகைத்து விட்டுச் செல்லுங்கள்



### ஜக்சன்

நாம் தேவையில்லை என்று சிலர் நம்மை நினைக்கும் முன் நாம் விலகி நிற்கக் கற்றுக் கொள்வது நல்லது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கட்டுநாயக்கவில் அமெரிக்காவின் யுத்த தளபாட விமானம் தரையிறக்கம்

## சுங்கம், இராணுவம் சோதனையிடத் தடை

(கொழும்பு)

அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தைப் பயன்படுத்தி இந்து சமுத்திரத்திலுள்ள அமெரிக்க யுத்தக் கப்பல்களுக்கு யுத்த உபகரணங்களை விநியோகிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்காக யுத்த தளபாடங்களை ஏற்றி வந்த அமெரிக்க விமானப் படை விமானம் ஒன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடந்த 25 ஆம் திகதி தரையிறங்கியுள்ளது.

இவ்வாறு அமெரிக்க விமானத்தில் வரும் யுத்த தளபாடங்களை சோதனையிடுவதற்கு இலங்கை சுங்கத்துக்கோ, இராணுவத்துக்கோ, பொலிஸ்க்கோ அனுமதி வழங்கப்படவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கொண்டு வரப்படும் உபகரணங்கள் இந்து சமுத்திரத்தில் காணப்படும் ஜோன் ஸ்டென்னிஸ் எனும் பெயரிலான அணு சக்தியில் செயற்படும் பாரிய விமானங்கள் கொண்டு செல்லும் கப்பலுக்கு விநியோகிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் ஓகஸ்ட் 28 ஆம் திகதி கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்துக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையின் பின்னர் ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் அமெரிக்க விமானங்களுக்கு சர்வதேச விமான நிலையமான கட்டுநாயக்கவுக்கு வர அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த அமெரிக்க இராணுவ நடவடிக்கை அடுத்த வருடம் ஜனவரி 28 ஆம் திகதி வரையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த தகவல்களை கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவர் வெளிப்படுத்தியுள்ள போதிலும், அரசாங்கம் எந்தவொரு தகவலையும் வெளிப்படுத்தவில்லையெனவும் வார இதழொன்று அறிவித்துள்ளது. (7-8)

# ரூ.700 சம்பள உயர்விற்கு எதிர்ப்பு; பொகவந்தலாவையில் போராட்டம்




(ஹற்றன்)

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபாய் அடிப்படை சம்பளம் அதிகரிப்பு கோரி ஆர்ப்பாட்டம் மேற்கொண்டு வந்த போதும் தற்போது 700 ரூபாயாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனால் பொகவந்தலாவை நகரில் சத்தியாகிரகப் போராட்டத்தை மேற்கொண்டு வருவதாக பொகவந்தலாவை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இவ்வார்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரின் கோரிக்கை என்னவெனில், 1000 ரூபாய் அடிப்படைச் சம்பளம் வேண்டும். தோட்டத் தொழிலாளர்களை 700 ரூபாய்க்கு அடகு வைக்க வேண்டாம் என கோஷங்கள் எழுப்பியும் பதாகைகள் ஏந்தியும் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் தெரிவிக்கையில்,

நாம் 1000 ரூபாய் எனக் கோரவில்லை இதைத் தூண்டியது அரசியல் தலைவர்களே. இவ்வாறு கூறியவர்கள் தற்போது பாராளுமன்றத்தில் சுகபோகமாக இருக்கின்றனர். ஆனால் நாம் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம் எனக் கூறியதோடு நல்லாட்சியில் 1000 ரூபாய் அடிப்படை சம்பளம் எனக் கூறிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போது இது தொடர்பாக எவ்வித கருத் துக்களையும் முன்வைக்கும் எண்ணம் இல்லை. இது தான் நல்லாட்சி அரசாங்கமா எனக் கேள்வி எழுப்பினர். (7-8)

# நாடாளுமன்றிற்குள் மிளகாய்ப்பொடி எப்படி?

## விசாரணைகள் மூலம் தகவல் வெளியானது

(கொழும்பு)

மகிந்த தரப்பினரால் நாடாளுமன்றத்திற்குள் மிளகாய்ப்பொடி கொண்டு வரப்பட்டது எப்படி என்பது தொடர்பில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இரண்டு உறுப்பினர் தங்கள் பாதணியில் மறைத்து வைத்து மிளகாய்ப் பொடியைக் கொண்டு வந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

நாடாளுமன்றத்தில் உறுப்பினர் மிளகாய்ப்பொடி கொண்டு வந்தமை, நாற்காலியில் தாக்குதல் மேற்கொண்டமை, சபாநாயகர் உரையாற்றும் மைக்ரோ போனை உடைத்தமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் இந்த விடயம் உறுதியாகியுள்ளது.

உறுப்பினர்கள் இருவர் தங்கள் பாதணியினுள் மறைத்து நாடாளுமன்றத்திற்கு மிளகாய்ப்பொடி கொண்டு வரப்பட்டுள்ளதாக உறுதியாகியுள்ளது.

கடந்த மாதம் நாட்டில் நிலவிய அரசியல் சதிப் புரட்சியின் ஒரு அங்கமாக நாடாளுமன்றத்தில் வன்முறைகள் வெடித்திருந்தன. இதன்போது கடந்த வருடம் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி நாடாளுமன்றத்திற்கு உறுப்பினர்கள் இருவர் மிளகாய்ப்பொடியை கொண்டு வந்து உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இந்த விவகாரம் நாடளாவிய ரீதியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7-8)

# மத்திய மாகாண சுற்றாடல் பாதுகாப்பிற்காக வேலைத்திட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கை



(கொழும்பு)

மத்திய மாகாணத்தில் சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் மெருகூட்டல் முதலான வேலைத்திட்டங்களை மேற்கொள்ள மத்திய மாகாண ஆளுநர் மைத்திரி குணரத்ன நடவடிக்கை எடுத்துள்ளார். இது தொடர்பில் நேற்றைய தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர்,

ஒப்பீட்டளவில் மத்திய மாகாணம் ஏனைய மாகாணங்களை விடவும் சிறந்த சுற்றாடல் கட்டமைப்பைக் கொண்டு விளங்குகிறது. எனவே அதனைப் பாதுகாத்தல் அபிவிருத்தி செய்தல் என்பன முக்கியமாகும். அந்தவகையில் கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களில் அரச மற்றும் தனியார் அமைப்புக்களுடன் இணைந்து செயற்றிட்டம் ஒன்று உருவாக்கப் [illegible] குப்பை மேடு தொடர்பாக ஒரு தீர்வு பெறுவதற்கும், மத்திய மாகாணத்தின் இயற்கை பூகோள அழிப்பு தொடர்பாக தகுந்த நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

சுற்றாடல் சட்டங்களை மதிக்காது தீங்கு விளைவிப்போர் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதுடன் விளம்பர சுவரொட்டிகள் பாரிய பிரச்சினையாக இருப்பதால் கண்டி நகரில் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு உரிய இடங்களை ஒதுக்கவும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவித்தார். (7-8)

# செய்தித்துளிகள்

## இலங்.ரூபாவின் பெறுமதி உயர்வு

(கொழும்பு)

அமெரிக்க டொலருடன் ஒப்பிடும் போது இலங்கை ரூபாயின் பெறுமதி வலுவான நிலையை அடைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கடந்த வாரத்தில் இந்த வளர்ச்சியை காண முடிந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று வீதத்திற்கமைய நேற்று முன்தினம் இலங்கை ரூபாயின் பெறுமதி 183.57 ரூபாயாக பதிவாகியுள்ளது.

ரூபாயின் பெறுமதி கடந்த வாரத்தினுள் நூற்றுக்கு 16 வீதம் வீழ்ச்சியடைந்த நிலையில் ஆசியாவின் பலவீனமான நாணயமாக இலங்கை ரூபாய் பதிவாகியது.

எப்படியிருப்பினும் இந்த வருடத்தினுள் ரூபாயின் பெறுமதி நூற்றுக்கு 0.5 வீதம் வலுவடைந்துள்ளதாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (7-8)

## நீரில் மூழ்கி இளைஞன் பலி


(ஏறாவூர்)

இளைஞர்கள் மூவர் சேர்ந்து பொழுது போக்குக்காகச் சென்று ஆற்றில் நீராடிக்கொண்டிருந்தபோது அம்மூவரில் ஒருவர் நீரில் மூழ்கி மரணித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள காலையடிக்குளம், கைலிமடு ஆற்றில் நீராடியபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் காத்தான்குடி 6, டொக்டர் அஹமட் பரீட் மாவத்தை, நாகையடி அவுலியா வீதியைச் சேர்ந்த முஹம்மது ஜாபிர் அப்துல்லாஹ் (வயது 17) என்ற வாலிபரே உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளில் வவுணதீவுப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (7-8)

## தனியார் பேருந்தில் தீ!



(கண்டி)

கண்டி - கம்பளை வீதியில் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டிருந்த தனியார் பேருந்து கம்பளை - கொஸ் ஹின்ன பிரதேசத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் திடீரென தீப்பிடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் உயிர்ச் சேதங்கள் எதுவும் இல்லையென தெரிவிக்கப்படுகின்றது. தீப்பரவலுக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (7-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 180 | 200 |
| தக்காளி | 80 | 100 | 100 | 50 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 80 | 80 | 40 | 60 |
| கோவா | 60 | 70 | 80 | 70 | 80 |
| கரட் | 80 | 80 | 100 | 90 | 120 |
| பூசணி | 50 | 30 | 20 | 30 | 40 |
| புடோல் | 60 | 60 | 80 | 60 | 80 |
| வாழைக்காய் | 80 | 90 | 70 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 150 | 110 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 60 | 80 |
| பாகற்காய் | 100 | 90 | 80 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 120 | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 40 | 50 | 40 | 80 |
| பயற்றங்காய் | 100 | 120 | 100 | 80 | 120 |
| லீக்ஸ் | 140 | 120 | 130 | 60 | 120 |
| பீற்றூட் | 50 | 80 | 100 | 50 | 80 |
| கறிமிளகாய் | 150 | 200 | 120 | 80 | 160 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 600 | 500 | 800 |
| போஞ்சி | 50 | 80 | 120 | 70 | 80 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 80 | 90 | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 20 | 20 | 40 |
| தேசிக்காய் | 100 | 140 | 120 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 40 | 30 | 30-50 |
| இராசவள்ளி | 120 | 150 | 120 | 130 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 80 | 80 | 70 | 120 |
| முள்ளங்கி | 30 | 60 | 60 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 15 | 50 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 10 | 20 |
| ஈரப்பலா | 50 | 100 | 30 | 100 | 60 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாளைக்கு நல்ல விருந்து



இளைஞன் ஒருவன் முனிவர் ஒருவரிடம் வந்தான். "முனிவரே! விலங்குகள் பேசிக் கொள்வது எனக்குப் புரிய நீங்கள் அருள் செய்ய வேண்டும். அப்படி செய்தால், நான் பல சுவையான செய்திகளையும், விலங்குகளின் வாழ்க்கை முறையையும் அறிந்து கொள்வேன்..." என்று வேண்டினான்.

"விலங்குகள் மொழியை அறிந்து கொள்வது வீணான முயற்சி. அந்த முயற்சியை விட்டுவிடு. உன் கவனம் முழுவதையும் கடவுளிடத்தில் செலுத்து. நல்ல முறையில் வாழ முயற்சி செய்!" என்று அறிவுரை சொன்னார் முனிவர்.

அவர் மறுத்தும், அவன் அவரை வற்புறுத்தத் தொடங்கினான். "முனிவரே! இதுவரை யாரும், எதையும் கேட்டு நீங்கள் மறுத்தது கிடையாதே. கடவுளின் பெயரால் கேட்கிறேன். என் வேண்டுகோளை மறுத்து விடாதீர்கள். விலங்குகள் மொழி எனக்குப் புரிய நீங்கள் அருள் செய்யவேண்டும்" எனக்கெஞ்சினான் அவன்.

வேறுவழி இல்லாது, "கடவுளே! இந்த இளைஞனை, சாத்தான் தீய வழியில் செல்லும்படி தூண்டுகிறானே. நான் என்ன செய்வது எனக்கு வழி காட்டு!" என்று வேண்டினார் முனிவர்.

"உன் ஆசையை நிறைவேற்றுகிறேன். இன்று முதல் பறவைகள், விலங்குகள் பேசுவது உனக்குப் புரியும்!" என்றார் முனிவர்.

மகிழ்ச்சியுடன் தன் வீடு வந்து சேர்ந்தான் அவன்.

மறுநாள்காலையில்வேலைக்காரி அவனுக்கு மேசையில் உணவு பரிமாறினாள். அப்போது சிறு ரொட்டி துண்டு ஒன்று தவறிக் கீழே விழுந்தது. கோழி ஒன்று அதைச் சாப்பிட ஓடி வந்தது.

இதைப் பார்த்த நாய் கோபத்துடன், "கோழியே! உனக்கு உரிய உணவு நெல் போன்ற தானியங்கள் தானே? அவற்றை என்னால் உண்ண முடியாது. அப்படி இருக்கும்போது எனக்கு உரிய உணவை உண்ண வருகிறாயே இது நியாயமா?" என்று கேட்டது.

"ஏன் உணவுக்காக இப்படி அலைகிறாய். நான் இந்த ரொட்டியைத் தின்றால் கடவுள் உனக்குப் பெரிய விருந்தே அளிப்பார்..." என்றது சேவல்.

"நீ என்ன சொல்கிறாய்? எனக்குப் புரியவில்லையே!" என்றது நாய்.

"நாளை காலையில் நம் முதலாளியின் குதிரை இறக்கப் போகிறது. அதன் கறியை நீ வயிறார உண்ணப் போகிறாய். நானோ உணவு கிடைக்காமல் பட்டினி கிடக்க வேண்டும். அதனால், இந்த ரொட்டியை தின்கிறேன்!" என்ற சேவல், ரொட்டியைத் தின்றது.

சேவல் பேசியது முழுவதையும் கேட்டான் இளைஞன். அன்று மாலையே அந்தக் குதிரையை விற்றுவிட்டான்.

மறுநாளும் வேலைக்காரி உணவு பரிமாறும்போது ரொட்டித்துண்டு ஒன்று கீழே விழுந்தது. அதைத் தின்ன சேவல் ஓடி வந்தது.

அதைப் பார்த்த நாய், "பொய்யனே! ஏமாற்றுக்காரனே! நேற்று என்ன சொல்லிவிட்டு எனக்குரிய ரொட்டியைத் தின்றாய். நீ சொன்னது ஏதேனும் நடந்ததா? எதிர்காலத்தை அறிந்ததாகச் சொல்லி என்னை ஏமாற்றி விட்டாய். மீண்டும் என்னை ஏமாற்ற நினைக்கிறாயா?" என்று கோபத்துடன் கேட்டது.

"நான் சொன்னது இதுவரை ஏதேனும் பொய்யாகி இருக்கிறதா? அந்தக் குதிரை இந்நேரம் இறந்திருக்க வேண்டும். அதை விற்றதனால் நம் முதலாளி இழப்பிலிருந்து தப்பித்துக் கொண்டார். அதை வாங்கியவன் இப்போது புலம்பிக்கொண்டிருப்பான். இன்றைய விருந்து தவறினால் என்ன? நாளை காலை நம் முதலாளியின் கழுதை இறக்கப் போகிறது. உனக்கு நல்ல விருந்து காத்திருக்கிறது. இந்த ரொட்டியை நான் உண்கிறேன்..." என்று தின்றது சேவல்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த இளைஞன் மகிழ்ந்தான்.

'நல்ல வாய்ப்பால் இத்தகைய அரிய ஆற்றலைப் பெற்றேன். எதிர்கால நிகழ்ச்சிகளை முன்னரே தெரிந்து கொள்வதால் இழப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள முடிகிறது' என்று நினைத்த இளைஞன் அன்றே கழுதையை விற்றான்.

மறுநாள் சேவலைச் சந்தித்த நாய், "அண்டப்புளுகனே! இன்று என்ன பொய் வைத்திருக்கிறாய்? உன் பேச்சை நம்பி இரண்டு நாட்களாக பட்டினி கிடக்கிறேனே. நாளை என்ன விருந்து என்று கதை அளக்கப் போகிறாய்?" என்று கேட்டது.

"நம் முதலாளியின் அடிமை நாளை சாகப் போகிறான். அவன் உறவினர்கள் பிச்சைக் காரர்களுக்கு விருந்து வைக்கப் போகின்றனர். உனக்கும் வயிறார உணவு கிடைக்கும்..." என்றது சேவல்.

இதைக் கேட்ட இளைஞன் தன் அடிமையை இன்னொருவனுக்கு விற்றுவிட்டான். "விலங்குகளின் மொழி தெரிந்ததால் மூன்று இழப்புகளிலிருந்து தப்பித்துக் கொண்டேன். இல்லாவிட்டால் என் செல்வத்தின் ஒரு பகுதி அல்லவா அழிந்திருக்கும்' என்று மகிழ்ந்தான் அவன்.

மறுநாள் சேவலைச் சந்தித்த நாய், "என்னை மடையன் என்று நினைத்துக் கொண்டாயா? மூன்று நாட்களாக தொடர்ந்து பொய் சொல்லி என்னை ஏமாற்றுகிறாய். இப்படிச் செய்ய உனக்கே வெட்கமாக இல்லையா?" என்று கோபத்துடன் கேட்டது.

"நான் எதிர்காலத்தில் நடக்கப் போவதைச் சொல்கிறேன். அப்படியேதான் நடக்கிறது. நம் முதலாளி தனக்கு வரவேண்டிய இழப்பை அடுத்தவர் தலையில் கட்டி விடுகிறார். அந்த அடிமை இந்நேரம் இறந்திருப்பான். இப்படிச் செய்வது கொடிய பாவம் என்பதை அவர் உணரவில்லை. நாளை காலையில் நம் முதலாளி சாகப் போகிறார். அவர் உறவினர்கள் பெரிய விருந்து வைக்கப் போகின்றனர். மூன்று நாள் விருந்து தவறியதற்காக நீ வருந்தாதே!" என்றது சேவல்.

இதைக்கேட்ட அவன் அழுது புலம்பியபடி ஓடினான். முனிவரின் திருவடிகளில் விழுந்தான். "முனிவரே! இந்த ஆபத்தில் இருந்து நீங்கள் என்னைக் காப்பாற்ற வேண்டும்!" என்று கெஞ்சினான்.

"ஆபத்தில் இருந்து தப்பிக்க உனக்கா தெரியாது. நீயே உன்னை யாரிடமாவது விற்றுக்கொள். உன்னை நம்பிப் பொருட்களை வாங்கியவர்களை ஏமாற்றினாயே! அதை போல இந்த முறையும் ஏமாற்று" என்றார் அவர்.

"ஐயோ! என் அறியாமையால், விலங்குகள் பேசுவது புரிய வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதற்காக எனக்குக் கொடிய தண்டனை தந்து விடாதீர்கள். நான், பிறரை ஏமாற்றியது தவறுதான். என்பிழையை மன்னித்து அருள் செய்யுங்கள்..." என்று கெஞ்சினான் அவன்.

"மகனே! வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு, குறியைத் தாக்கிய பிறகு மீண்டும் வில்லுக்கு வராது. இதுதான் விதி. இதை யாராலும் மாற்ற முடியாது. உனக்கு நல்ல அமைதியான சாவை வழங்க வேண்டும்.

நம்பிக்கையுடன் இறக்கும் இவன் பாவங்களைப் போக்க வேண்டும் என்று கடவுளிடம் உனக்காக வேண்டுகிறேன்..." என்றார் முனிவர்.

அப்போதே அவன் மயங்கி விழுந்தான். அவன் உடல் நிலை மோசமாகியது.

நான்கு அடிமைகள் அவனை வீட்டிற்குத் தூக்கி சென்றனர். மறுநாள் காலையில் அவன் மூச்சு நின்றது.

# தண்ணீர் பற்றிய சில தகவல்கள்

• பூமியில் உள்ள 97 சதவீதம் உப்பு தண்ணீரால் ஆனது. மீதமுள்ள 3 சதவீதம் தூய்மையான நீர் என குறிப்பிடப்படுகிறது. அவற்றில் 2 சதவீதம் பனிக்கட்டிகளாகவும் பனிப்பாறைகளாகவும் காணப்படுகிறது. இதன் மூலம் 3 இல் ஒரு சதவீதம் தூய்மையான தண்ணீர் தான் ஆறுகள், ஏரிகள் மற்றும் பூமிக்கு அடியிலும் காணப்படுகிறது.

• பூமியின் பரப்பளவில் 10 இல் ஒரு (1/10) பங்கு பனிக்கட்டிகளால் ஆனது. மேலும் பனிக்கட்டிகளின் 90 சதவீதம் அண்டார்டிகாவைச் சார்ந்தே இருக்கிறது. ஆயினும் அங்குள்ள எரிபஸ் (Erebus) என்ற எரிமலை புகையை வெளியிட்டு வருகிறது. பனிக்கட்டியின் மீதமுள்ள 10 சதவீதம் பனிப்பாறைகளாகக் காணப்படுகிறது.

• பனிக்கட்டிகள் உப்பு தண்ணீரால் ஆனாலும், எவ்வித உப்பையும் பெற்றிருக்காது. எஸ்கிமோஸ் போன்றப் பனிப் பிரதேசங்களில் வாழும் மக்கள் உணவுகளை சமைக்கவும் குடிக்கவும் பனிக்கட்டிகளை உறைய வைத்து தான் பயன்படுத்துகிறார்கள். மேலும் இது மிகவும் தூய்மையான தண்ணீராகதான் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

• உப்பு தண்ணீரில், 96 சதவீதம் தூய்மையானதும், 3 சதவீதம் உப்பாகவும், மீதமுள்ள ஒரு சதவீதத்தில் சல்பேட், மக்னீசியம், புரோமைட், கல்சியம், பொட்டாசியம், ஸ்ட்ரோண்டியம், போரான், ஃபுளுரைடு, தங்கம் உள்ளிட்ட 80 தனிமங்களைக் கொண்டதாகக் காணப்படுகிறது.

# பனிக்கட்டியில் ஆவி ஏன் உருவாகிறது?

இப்போது குளிர்காலம். அந்த குளிரில் சூடாக 'ஆவி பறக்க' ஒரு கப் கோப்பியோ அல்லது தேநீரோ குடித்தால் உடலுக்கு இதமாக இருக்கும்.

கோப்பி அல்லது தேநீரில் ஆவி பறக்க அதில் உள்ள வெப்பம் காரணம் என்றால், பனிக்கட்டியில் இருந்தும் ஒரு 'ஆவி' வருகிறதே... அது என்ன ஆவி என்று எப்போதாவது நீங்கள் யோசித்தது உண்டா?

அதற்குக் காரணம் இது தான். பனிக்கட்டிக்கு அருகில் இருக்கும் காற்றில் ஈரத்தின் அடர்த்தி அதிகமாக காணப்படும்.

பனிக்கட்டிக்கும், அதன் சுற்றுப்புறத்திற்கும் உள்ள உஷ்ண வித்தியாசம் காரணமாக நீர்த்துளிகள் வெளிப்படுகின்றன.

அந்த நீர்த்துளிகள் மிக நுட்பமான தூசுத் துகள்களில் ஒட்டிக்கொண்டு ஆவி வடிவில் வெளியேறுகின்றன. அது, நம் பார்வைக்கு பனிக்கட்டி ஆவியாவது போல் தெரிகிறது. உண்மையில், அது நீராவிதான். நாம்தான் அதை 'ஆவி' ஆக்கிவிட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையான மனதால் ஞானம் கிட்டும்போது வாழ்வில் அமைதியும் பூலோக சொர்க்கமும் ஏற்படும். – வால்ட்டேர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கவலையற்று இருத்தலே முக்தி என்ற பாரதியின் கருத்தறிவீர்

அகில இலங்கை கம்பன் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த 11 ஆம் திகதி பாரதி நினைவு இடம்பெற்றது.

நல்லூரில் உள்ள கம்பன் கோட்டத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் விசேட அமர்வாக கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் கருத்தரங்கின் ஒரு விடயம் கவலையற்று இருத்தலே முக்தி என்ற பாரதியாரின் பாடல் வரியாகும்.

ஊருக்கு உழைத்தல் யோகம் நலம் ஓங்கிடும் வண்ணம் வருந்துதல் யாகம்; போருக்கு நின்றிடும் போதும் உளம் பொங்கல் இல்லாத அமைதி மெய் ஞானம் என்று கூறிவந்த பாரதியார் இறுதியில் கவலையற்று இருத்தலே முக்தி என்றார்.

கவலையற்று இருத்தலே முக்தி என்ற பாரதியின் இந்த வரி ஈழத் தமிழினத்திற்காகக் கூறப்பட்டது போல் தெரிகிறது.

இன்று எம் தமிழினம் கவலையில் மூழ்கிக் கிடக்கிறது. அதிலும் போரால் ஏற்பட்ட உயிரிழப்பு என்ற கொடும் துயரம் எங்கள் மக்களில் பெரும்பாலானவர்களை கவலைப்படுத்தியுள்ளது.

காணாமல் போனவர்கள், தமிழ் அரசியல் கைதிகள், சொந்த வீடு வாசல்களை இழந்தவர்கள், கடன் சுமையில் நொந்து போனவர்கள், உழைப்பு இல்லையென்று வருந்துவோர், குடும்பத்தலைவன் சதா மது அருந்துவதால் அவனின் மனைவியும் பிள்ளைகளும் சாப்பாட்டுக்கே வழியின்றித் தவிக்கும் மனத்துயரம் மற்றும் வாள்வெட்டுக்குழுவில்; போதை வஸ்து பாவனையில்; இளைஞர் குழுக்களில் திரிகின்ற பிள்ளைகளின் பெற்றோர்கள் படும் அவலம் எனக் கவலையென்ற பெரும் வஞ்சகப் பேய் நம் மண்ணை – மக்களை ஆக்கிரமித்துள்ளது.

இதிலிருந்து மீளவில்லை என்றால், முக்தி என்பது நமக்கு எப்போதும் எட்டக்கூடியதன்று. இங்கு முக்தி என்பது கைலாயம், வைகுண்டம், பரலோகம் என்று எதையும் பாரதி கூறவில்லை. மாறாக பாரதியின் பார்வையில் முக்தி என்பது இந்த நிஜ உலகில் அடையப்படுவதாகும்.

இரண்டாம் உலகப் போரில் அணுக்குண்டுகளை வீசி யப்பானின் இரு பெரும் நகரங்கள் அழிக்கப்பட்டன. அதனால் யப்பானிய மக்கள் கவலை கொண்டிருப்பார்களாயின் இன்று அந்த நாடு அழிந்தொழிந்திருக்கும்.

அவர்கள் அழிவிலிருந்து மீண்டெழுவது எங்ஙனம் என்று சிந்தித்தனர். தமக்கு ஏற்பட்ட இழப்பை தங்களின் எழுச்சிக்கான உபாயமாகக் கொண்டனர். அதனால் இன்று அவர்கள் உலகின் முதற்தர தொழில்நுட்ப நாடு என்ற பெருமையைப்பெற்றுள்ளனர்.

இது போல எங்கள் ஈழத்தமிழ் மக்களும் தங்களிற்கு ஏற்பட்ட இழப்பை அடித்தளமாக்கி; தங்கள் இனத்தை, தங்கள் தாய் மண்ணை வாழவைக்க வேண்டும் என்ற உத்வேகத்துடன் கடுமையாகப் பாடுபடவேண்டும்.

இதற்காக எங்கள் தாயக மண்ணில் இருக்கின்ற அத்தனை நிறுவனங்களும் தங்களின் ஒத்துழைப்பை வழங்கி எங்கள் மக்களை ஊக்கப்படுத்துவது கட்டாயமானதாகும்.

இதைவிடுத்து கவலைக்குள் வாழுதல் என்ற சூழ்நிலை நிலைத்துவிட்டால், பின்னர் அந்த கவலை எங்கள் இனத்தை உள நிலையில் சோர்மானமாக்கிவிடும்.

ஆகையால் பாரதிகூறிய கவலையற்று இருத்தலே முக்தி என்ற பாடலின் கருத்தறிந்து எங்கள் மக்கள் விழித்தெழ வேண்டும். அப்போது தான் முக்தி என்ற இனிய வாழ்வு நமக்குக்கிடைக்கும்.

இதனையே பாரதி கவலையற்று இருத்தலே முக்தி என்ற பொருளில் உணர்த்தியுள்ளான். நாமும் பாரதியின் வழியில் யோகம், யாகம், மெய்ஞானம் என்பதனூடு கவலையற்று முக்தி வாழ்வு வாழ்வோமாக.

## கூட்டணி அமைக்காவிடின் தாமரை மொட்டும் மலராது

### சுதந்திரக் கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)

கூட்டணி அமைக்காத எந்தக் கட்சியாலும் எந்தவொரு தேர்தலிலும்வெற்றி பெற முடியாது எனவும், அது பொது ஜன பெரமுன ஆயினும் சரியே எனவும் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

தாம் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளோம் எனவும், இனி எந்தத் தேர்தலிலும் வெற்றி பெற முடியும் என பொதுஜன பெரமுனவிலுள்ள யாராவது பெருமை பேசுவதாக இருந்தால், அவருக்கும் தோல்வி என்றே கூற வேண்டியுள்ளது.

தனித்துப் போட்டியிடுவதாக தாமரை மொட்டு உறுப்பினர்கள் அடம்பிடித்தால், அந்த மொட்டு மலராது என்றே கூற வேண்யுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார். (மு-3)

## கர்ப்பிணிப் பெண் மரணம்; பிரேத பரிசோதனைக்கு உத்தரவு

(யாழ்ப்பாணம்)

கர்ப்பிணிப் பெண் ஒருவர் மயங்கி வீழ்ந்து மரணமான சம்பவம் வடமராட்சி கரணவாய் தெற்கு பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பணி புரியும் குலதீபன் பிரிந்தா (வயது-32) என்ற கர்ப்பிணிப் பெண் வைத்தியசாலையில் தனது பணிகளை முடித்து விட்டு நேற்று மதியம் வீடு திரும்பியுள்ளார்.

வீட்டிற்கு திரும்பி சிறிது நேரத்தில் மயக்கமுற்று விழுந்துள்ளார். அவரை பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் அனுமதித்த போது அவர் மரணமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

வைத்தியசாலைக்கு சென்று சடலத்தை பார்வையிட்ட கரவெட்டி மரணவிசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் சடலத்தை யாழ் போதனாவைத்தியசாலைக்கு கொண்டு சென்று பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நெல்லியடி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (மு-60)

## முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு ரூ. 20 இலட்சம் சலுகை அடிப்படையில் கடன்

(கொழும்பு)

முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் மற்றும் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு கடன் வழங்கும் திட்டமொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி மற்றும்வெகுஜன ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்தின் கீழ்வெளிநாட்டில் பணிபுரி வோருக்கும் 10 மில்லியன் ரூபாய் வீடமைப்பு கடன் வழங்கப்படவுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இரண்டு வருடங்கள் நிவாரண காலத்துக்கு உட்பட்ட வகையிலும் 15 வருடங்களில் மீளச் செலுத்தும் வகையிலும் இந்த கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக நிதி அமைச்சு தெரி வித்துள்ளது.

தமக்கான வீடொன்றை நிர்மாணிக்கும் திட்டம் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் பலருக்கு உள்ளதாக நிதி அமைச்சு கூறியுள்ளது.

இந்த புதிய திட்டத்தின் கீழ் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்துள்ள, கணிசமான தொகையை இலங்கை வங்கிகளில் வைப்பீடு செய்துள்ளவர்கள் கடனுக்காக விண்ணப்பிக்க முடியும். கடன் திட்டத்தில் வட்டியில் 75 வீதம் அரசினால் செலுத்தப்படும்.

முச்சக்கரவண்டி உரிமையாளர்களுக்காக மோட்டார் வாகனங்களை பயன்படுத்தி வாடகை மோட்டார் வாகன சேவைகளை ஆரம்பிக்க 20 லட்சம் ரூபாய் நிவாரண கடன் திட்டமொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது.

35 வயதை தாண்டிய, முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

இந்த கடன் திட்டத்தை அறிமுகப்படுத்த அமைச்சர் மங்கள சமரவீர சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது. (மு-3)

## வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவில் முறைகேடு

(குருமன்காடு)

வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் புனர்வாழ்வு அமைச்சின் கீழ் வீட்டுத் திட்டம் வழங்கப்படவுள்ளது. அதில் பயனாளிகள் தெரிவில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மீள்குடி யேறியுள்ள மக்களுக்கும், உப குடும்பங்களுக்கும் 90 வீடுகள் வழங்கப்படவுள்ள நிலையில் புள்ளி அடிப்படையில் பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டு புள்ளியிடலும் இடம்பெற்றது.

அதனடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பல புறக்கணிக்கப்பட்டுள்ள நிலையில் புள்ளித் திட்டத்தில் குறைந்த மட்டத்தில் உள்ள சிலருக்கும் வீட்டுத் திட்டம் வழங்க பெயர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் பாரபட்சம் காட்டாது உண்மையாகவே பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகள் கிடைக்கும் வகையில் அரச அதிகாரிகள் நீதியாக செயற்பட வேண்டும் எனவும் மக்கள் கோரியுள்ளனர். (2-250)

## தைப்பொங்கல் தின வாள்வெட்டு; குற்றச்சாட்டில் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கல் தினத்தன்று இருவர் மீது வாளால் வெட்டிக்காயப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து இரண்டு வாள்கள் கைப்பற்றப்பட்டன என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் 19,23 மற்றும் 25 வயதுடையவர்கள்என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மானிப்பாய் கட்டுடையைச் சேர்ந்த ஒருவரும் ஓட்டுமடம் பகுதியைச் சேர்ந்த இருவரும் என மூன்று இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

தைப்பொங்கல் தினமான கடந்த 15ஆம் திகதி யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை நாச்சிமார் கோவிலடியில் இளைஞர்கள் இருவரை துரத்தி வந்து வாள் வெட்டுச் சம்பவம் இடம்பெற்றது. சம்பவத்தில் இளைஞர் ஒருவரின் கைவிரல் துண்டாடப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் மூன்று இளைஞர்கள் யாழ்ப்பாணம் சிறப்புப் பொலிஸ் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து இரண்டு வாள்களும் கைப்பற்றப்பட்டன. விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (மு-3)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### ஆசையின் மயக்கம்



தேவையைக் காரணமாகக் கொண்டு எழுந்த ஆசை தேவை நிறைவோடு நின்றுவிட வேண்டும். பசி, தாகம் முதலிய இயற்கைத் துன்பங்களைப் போக்கிக் கொள்ள எழுந்த ஆசை துன்பத்தைப் போக்குவதோடு நின்றாக வேண்டும். உயிராற்றல் செலவைச் சரி செய்ய எழுந்த ஆசை அப்படிச் சரி செய்வதோடு நின்றாக வேண்டும். ஆனால், பொதுவாக அப்படி நிற்பதில்லை.

**ஆசையின் மயக்கநிலை**

தேவை நிறைவின்போது ஏற்பட்ட திருப்தியின் மீது அல்லது இன்பத்தின் மீது உயிர் மயங்கிவிடுகிறது. எந்தக் காரியம் இன்பத்தைத் தந்ததோ, அந்தக் காரியத்தைத் தேவையில்லாமலே செய்ய விழைகிறது. அதாவது உண்மையான தேவை இல்லாமலேயே ஆசை எழுகிறது. எழுகிற துன்பத்தைத் தீர்க்கும் வகையில் ஆசை தோன்றியது போக, இன்பத்தைச் செயற்கையாகத் தேடும் முயற்சியிலே இப்போது ஆசை எழுகிறது. இந்த ஆசையைத் தான் கட்டுப்படுத்த வேண்டும். எழாமலேயே காக்கவும் வேண்டும்.

உயிராற்றல் குறைவை நிறைவு செய்வதற்காக அல்லாமல், இயற்கைத் துன்பத்தைத் தீர்ப்பதற்காக அல்லாமல், உண்மையான உயர்வான தேவையின் காரணமாக அல்லாமல் ஏற்படும் ஆசைகளெல்லாம் அறிவின் மயக்கத்தால் தோன்றுவன. அவை துன்பத்தைத் தான் தரும்.

இன்னொன்று, தகுந்த காரணத்தாலேயே ஏற்பட்ட இச்சைகளானாலும், அவ்வாசைகளை நிறைவு செய்யும் முயற்சியில் தனக்கோ, பிறர்க்கோ துன்பம் தோன்றுமானால், அவ்வாசைகளும் தடுக்கப்பட வேண்டியவையே. மேலும், நிறைவேறிய பின்னர் தீய விளைவுகளைத் தரக்கூடிய இச்சைகளையும் கட்டுப்படுத்தித் தான் ஆக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தோஸ் அதிரடி ஆட்டம் ஜப்னா பந்தேர்ஸ் அணி வெற்றி



யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் சுப்பர் லீக் என்னும் இருபது - 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதலாவது பருவகாலப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானங்களில் இந்தப் போட்டிகள் நடைபெறுகின்றன.

இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் 8 அணிகளும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் ஏ பிரிவில் ஜப்னா பந்தேர்ஸ், பருத்தித்துறை சுப்பர் கிங்ஸ், அரியாலை வோரியர்ஸ், நல்லூர் பிறவுண்கொஸ் அணிகளும், பி பிரிவில் வேலணை வேங்கைகள், கொக்குவில் ஸ்ரார்ஸ், பண்ணை ரில்கோ கிளாடியேற்றர்ஸ் மற்றும் ரில்லியூர் ரைரன்ஸ் ஆகிய அணிகளும் உள்ளன.

ஏற்கனவே பிளேஒவ் சுற்றுக்கு தகுதி அடைந்த குழு ரீதியாக இறுதிப்போட்டியில் பொயின்டிற்றோ சுப்பர் கிங் அணியுடன் விளையாடியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற pointpedro super kings அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி 154 ஓட்டங்களுக்கு ஆட்டம் இழந்தனர். Panthers சார்பாக கதியோன் 3 விக்கெட்களையும் சாம்பவன் 2 விக்கெட்களையும் பிரசன்னா, சுரேந்திரன் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.




பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய Mba Panthers அணி 16 ஆவது ஓவரில் நான்கு விக்கட் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. Panthers சார்பாக சந்தோஷ் ஆட்டம் இழக்காமல் 87 ஓட்டங்களையும் மோகன்ராஜ் 47 ஓட்டங்களையும் பெற்றனர். போட்டியின் ஆட்ட நாயகனாக சந்தோஷ் தேர்வானார். (க)



கிளிநொச்சி பளை தர்மக்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் 2019 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி நேற்று பாடசாலையின் அதிபர் வே.செல்வக்குமார் தலைமையில் இடம்பெற்றது.




கிளி/பூநகரி ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் முதல்கட்டமாக கடந்த வெள்ளிக்கிழமை இல்ல ரீதியான 10 மைல் மரதன் ஓட்டப்போட்டி பூநகரி மன்னார் வீதியில் இடம் பெற்றது. இப்போட்டியில் ஆண், பெண் குழுக்களில் இருந்து வெற்றி பெற்ற வீர,வீராங்கனைகளை படத்தில் காணலாம். (க-84)



பூநகரி நல்லூர் மகா வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி கடந்த 25 ஆம் திகதி பாடசாலை முதல்வர் திருமதி.இராஜேந்திரம் சூரியகுமாரி தலைமையில் நடைபெற்றது. (க-84)

# மேற்கிந்திய தீவுகள் அபாரம்; இங்கிலாந்தின் நிலை பரிதாபம்





பார்படாஸில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில், 381 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்திய தீவுகள் அபார வெற்றி பெற்றது.

மேற்கிந்திய தீவுகள்-இங்கிலாந்து அணிகள் மோதிய முதல் டெஸ்ட் போட்டி பார்படாசில் நடைபெற்றது. முதலில் ஆடிய மேற்கிந்திய தீவுகள் அணி 289 ஓட்டங்கள் எடுத்தது. ஹெட்மையர் அதிகபட்சமாக 81 ஓட்டங்கள் எடுத்தார்.

பின்னர் ஆடிய இங்கிலாந்து அணி 77 ஓட்டங்களில் சுருண்டது. மேற்கிந்திய தீவுகள் அணி தரப்பில் கேமர் ரோச் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து மேற்கிந்திய தீவுகள் அணி ஹோல்டர்(202), டவ்ரிச்(116) ஆகியோரின் அபார சதத்தால் 6 விக்கெட் இழப்புக்கு 415 ஓட்டங்கள் எடுத்து டிக்ளேர் செய்தது.

இதன்மூலம் இங்கிலாந்து அணிக்கு 628 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

அதன்படி களமிறங்கிய இங்கிலாந்து அணியின் தொடக்க வீரர் ஜென்னிங்ஸ் 14 ஓட்டங்களிலே வெளியேறினார்.

அதன் பின்னர் அரைசதம் கடந்த பர்ன்ஸ் 84 ஓட்டங்களிலும், பேர்ஸ்டோ 30 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

அதனைத் தொடர்ந்து வந்த வீரர்களின் விக்கெட்டுகளை சுழற்பந்து வீச்சாளர் ராஸ்டன் சேஸ் கைப்பற்றினார்.

அவரது சுழலில் சிக்கிய இங்கிலாந்து அணி 246 ஓட்டங்களுக்கு ஓல்-அவுட் ஆனது. இதன்மூலம் மேற்கிந்திய தீவுகள் அணி 381 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

ராஸ்டன் சேஸ் 60 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 8 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இது டெஸ்டில் அவரது சிறந்த பந்துவீச்சு ஆகும். இரட்டை சதம் அடித்த ஹோல்டர் ஆட்டநாயகன் விருது பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்ற கணக்கில் மேற்கிந்திய தீவுகள் அணி முன்னிலை பெற்றுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைத்து உரி...

ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

பிளவுபடாததும், பிரிக்க முடியாததுமான நாட்டில் அனைத்து உரிமைகளையும் சுதந்திரங்களையும் அனுபவிக்கும் நிலைக்கு தமிழர்கள் வரவேண்டும்.

அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்பதுடன், இது தொடர்பான கோரிக்கைகளை நாம் உரிய தரப்பினரிடம் முன்வைத்திருக்கின்றோம்.

யுத்தம்நிறைவடைந்து பத்தாண்டுகளைக் கடந்து செல்லும் நாம் இன்று (நேற்று) ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த ரயில் சேவையினை வடக்கையும் தெற்கையும் இணைக்கும் உறவுப் பாலமாகவே நாம் பார்க்கின்றோம்.

இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் எமது வேற்றுமைகளைக்களைந்து செயற்படுவதற்கு ஒரு சந்தர்ப்பமாக அமையும். எனவே ஆளுநர் என்ற ரீதியில்நான் அமைச்சர் அர்ஜுனரணதுங்க, இந்தியத்துணைத் தூதுவர் ஆகியோருக்கும் நன்றி செலுத்துகின்றேன்.

எதிர்காலத்தில் இவ்வாறான பல அபிவிருத்தித் திட்டங்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு நானும் எமது மக்களும் தயாராகவே இருக்கின்றோம்என ஆளுநர் சுரேன் ராகவன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (மு-3)

## யாழிலிருந்து...

துறை செட்டியார் தெரு வீதியிலிருந்து மட்டக்களப்பு செங்கலடி எல்லை வீதியிலுள்ள தமது உறவினர் மகளின் பூப்புனித நீராட்டு விழாவிற்கு குறித்த குடும்பத்தினர் காரில் புறப்பட்டுள்ளனர்.

அதன்போது வாகனத்தை செலுத்திய சாரதியின் தூக்கத்தால் சடுதியான வாகன தடுப்பை செலுத்தியதால் சனநடமாட்டம் குறைந்த இவ்விடத்தில் வாகனம் நிலை குலைந்து தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் படுகாயமடைந்துள்ள னர்.

இதேவேளை அவ் வீதியில் வந்துகொண்டிருந்த இன்னுமொரு பேருந்தில் விபத்தில் காயமடைந்த குடும்பத்தினரை ஏற்றிக்கொண்டு மட்டக்களப்பு செங்கலடி வைத்திய சாலையில் அனுமதித்தனர்.

மேலும் குறித்த விபத்தில் காயமுற்றவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (மு-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட...

சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

லங்கா தீப பத்திரிகையின் ஞாயிறு சிறப்பு பதிப்பிற்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன்அமெரிக்ககுடியுரிமை பிரச்சினை பெரும்பாலும் தீர்க்கப்பட்டு விட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அடுத்த தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் போட்டியிட மாட்டார் எனவும் அதனால், தான் போட்டியிடுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

எனினும்கோத்தபாய ராஜபக்ஷ கூறிய இந்தக் கருத்தை ஜனாதிபதி மைத்திரி தரப்பு மறுத்து செய்தி வெளியிட்டுள்ளது. ஜனாதிபதி அலுவலக அதிகாரி ஒருவரின் கருத்தை அடிப்படையாக கொண்டே இந்தசெய்தி வெளியிடப்பட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மகிந்த ராஜபக்ச ஆதரவு வழங்க உறுதியளித்திருப் பதாகவும் அவ் ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மைத்திரிபால சிறிசேனவுக்கு,ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணி ஆதரவு தர மறுத்தால், அந்தக் கட்சியுடனான கூட்டணிக்கு வாய்ப்பில்லை என, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் மகிந்த சமரசிங்கவும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-3)

## மின்சாரசபை...

எதிர்நோக்கியது.

குறைந்த செலவுடனான மின்சார நிலையங்களை நிர்மாணிக்க முடியாமல் போனமை காரணமாக மின்சார சபை நட்டத்தை எதிர் நோக்கியதாக அவர் குறிப்பிட்டார்.

இது தவிர 2015 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட தொலைநோக்கு பார்வையுடனான திட்டமும் அதிக பலன் கிடைக்கத்தவறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, மின்சார அலகு ஒன்றினை உற்பத்தி செய்வதற்கான செலவீனத்தை விட குறைந்த விலையிலேயே நுகர்வோருக்கு மின்சாரம் விநியோகிப்பதினாலேயே அதிக நட்டத்தை எதிர் நோக்க வேண்டியுள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் எஸ் டி டபிள்யூ குணவர்தன தெரிவித்துள்ளார். (மு-3)

## யாழ்ப்பாணம் வந்தடைந்தது...

அர்ஜுன ரணதுங்க, அமைச்சின் செயலாளர், உதவிச் செயலாளர், ரயில் நிலைய அதிகாரிகள் எனப் பலரும் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை, தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, யாழ்.மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட் ஆகியோர் யாழ்.பிரதான ரயில் நிலையத்தில் வைத்து அவர்களை வரவேற்றனர்.

இதன் போது தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன. (மேலும் விரிவான செய்தி 6ஆம் பக்கத்தில்) (மு-101)

கொவிசெத
திகதி 2019.01.27
சீட்டிழுப்பு இலக்கம் 2017
K 14 37 74 77


தன நிதானய
திகதி 2019-01-27
சீட்டிழுப்பு இலக்கம் 107
S 16 37 56 82

மஹஜன சம்பத
திகதி 2019/01/27
சீட்டிழுப்பு இலக்கம் 3842
L 5 1 8 2 8 1

நீரோகா
திகதி 2019/01/27
சீட்டிழுப்பு இலக்கம் 504
கன்னி 14 17 49 50 42

# மரண அறிவித்தல்

## பரமு மார்க்கண்டு



காரைநகர் களபூமி பொன்னாவளையை பிறப்பிடமாகவும் இல.83/9, தஞ்சி ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த பரமு மார்க்கண்டு அவர்கள் நேற்று முன்தினம் (26.01.2019) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமு - பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசம்மா அவர்களின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற முருகேசு (வையாபுரி) - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வள்ளியம்மை அவர்களின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான துரைராசா, பாக்கியம், கனகரட்னம், விஜயரட்ணம், சரஸ்வதி, இலட்சுமிப்பிள்ளை, பூபாலசிங்கம் மற்றும் அன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், மங்கையர்க்கரசி, ஸ்ரீநாதன், மகேஸ்வரி, தனலட்சுமி, சரஸ்வதி, ஸ்ரீதரன், விஜயகலா ஆகியோரின் அன்பு தந்தையும், தில்லைநாதன், காலஞ்சென்ற கங்காதேவி, கௌரிதேவி, கிருபானந்தம், யோகநாதன் காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுதன் ஷர்மினா, நிவாசினி, பவதாரணி, பிரணவன், பவித்திரா, திவ்வியா, சிவகஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், சேஷ்திரனின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2019) திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் யாழ்ப்பாணம் கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு காலை 9.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே இல.: 021 222 1983

(C-5330)

தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை

- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413
(C-5307)

## வீட்டு பணிப்பெண் தேவை

கொழும்பில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய 50 வயதுக்கும் மேற்பட்ட பணிப்பெண் தேவை. தொடர்பு : சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்
இல. 55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 076 767 0776
(C-5311)

## ஐ.தே...

சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அதற்கு தேவையான செயற்பாடுகளை முன்னெடுக்க அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்என அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.(மு-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## MATHS GROUP/ PERSONAL CLASSES

தரம் 9, 10, 11 மாணவர்களிற்கான கணித வகுப்புக்கள் (தமிழ் மொழி மற்றும் ஆங்கில மொழி மூலமான) தேசிய பாடசாலை ஆசிரியரால் வீடு வந்து கற்பிக்கப்படும்.
077 454 0529
(7300)

## பதவி வெற்றிடங்கள்

**Dynamic Holdings Lanka**
நிறுவனம் வடக்கில் ஆரம்பிக்க இருக்கும் புதிய கிளைகளுக்கு O/L, A/L படித்தவர்கள் தேவைப்படுகின்றனர்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டத்தினர் விரும்பத்தக்கது.
- வயதெல்லை 18 - 32
- அடிப்படை தகைமை O/L
- தங்குமிடம், உணவு வசதிகள் உண்டு. 0766781042

(7314)

## Techno World

வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

A/L தொழில்நுட்ப பிரிவு
A/L 2021 - திங்கட்கிழமை - வெள்ளிக்கிழமை
பகல் வகுப்புக்கள் 8.00 - 11.00am
A/L 2019 Day Class
திங்கட்கிழமை - வெள்ளிக்கிழமை
பகல் வகுப்புக்கள் 8.00 - 01.30pm
E.Tec/ B.Tec, SFT, ICT
பகல் வகுப்புக்கள் நடைபெறும் ஒரே ஒரு கல்வி நிறுவனம்.
புதிதாக அமைக்கப்பட்ட நவீன ஆய்வுகூட வசதிகளுடன்
தொடர்புகளுக்கு : 077 017 5346
(அ-5328)

## விற்பனைக்கு

இரண்டு வாரங்கள் மட்டுமே பாவித்த ஹையர் பிறிச் கடைகளுக்கு ஏற்றது. கடை மேசை விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 917 7311

## விற்பனைக்குண்டு

- மின்சாரத்தில் இயங்கும் வெதுப்பகம் (Oven) நான்கு
- Spril Mixer (மா சேர்க்கும் இயந்திரம்) இரண்டு
- Samsung Fridge 270Ltr
- மற்றும் வெதுப்பக உபபொருட்கள் பலவிதமானவை

மேற்குறித்த அனைத்தும் அவுஸ்திரேலியாவில் இருந்து தருவிக்கப்பட்டவை.
தொடர்பு: 076 195 8322
(7308)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-5182)

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் குலேந்திரன்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், மயிலிட்டி தெற்கு, கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் குலேந்திரன் நேற்று முன்தினம் (2019.01.26) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லம்மா (கமலம்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும், இராசேந்திரம் (கனடா), வரதராசா (ஜேர்மன்), சந்திரா (திருநெல்வேலி), காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சகிலா (கலா - லண்டன்), சதீசன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமார், சுகன்யா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆகாஸ், அபிஷா, சாய் அபினேஷ், ஷரீஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற செல்வராசா மற்றும் தவமணி, நாகம்மா, தருமராசா, வேலாயுதம், கந்தசாமி, ஜெயராசா, தவராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.01.2019) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.08, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல் :
குடும்பத்தினர்
077 829 0351

(7309)

# மரண அறிவித்தல்



## திருமதி அரியமணி கதிரித்தம்பி

முதலாம் வட்டாரம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் இல.63, முதலி கோவில் வீதி, கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அரியமணி கதிரித்தம்பி அவர்கள் நேற்று (27.01.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.63, முதலி கோவில் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல் :
குடும்பத்தினர்

(அ-5327)

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
(C-5308)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... யாழ்ப்பாணம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org